

# அன்பு வெள்ளம்

புலவர்

த. கோவேந்தன் டி.லிட்

# அன்பு வெள்ளம்

புலவர். த. கோவேந்தன், டி.லிட்.,

ராஜேஸ்வரி புத்தக நிலையம்

22, 6வது தெரு, பக்தவச்சலம் நகர்,
பழவந்தாங்கல்,
சென்னை - 600 114.

முதற்பதிப்பு டிசம்பர் - 1996

© உரிமை பதிபபகததாருக்கே

தயாரிப்பு **நா. பாலகிருஷ்ணன்**

விலை ரூ 22.00

**அன்பு பரிவிரக்கம் ஆன்றவிந்த சான்றாண்மை**
**தன்னுடைமை யாய்க்கோள் தயானந்தன்-என் தோழன்**
**சொல்லும் செயலொத்துத் துன்பகற்றி வாழ்வித்த**
**நல்லவற்கு இந்நூல் உரித்து!**

ஒளியச்சு **லேசர் இம்ப்ரெஷன்,**
சென்னை - 600 030
✆ 6442009 P.P

அச்சிட்டோர் **வசந்தா அச்சகம்,**
சென்னை - 600 005

# ஒரு முன்னோட்டம்

மாந்த வரலாற்றின் மிக இக்கட்டான காலத்தை இன்று நாம் கடந்து கொண்டிருக்கிறோம். கடந்த பல நூற்றாண்டுகளாக, அரிதின் முயன்று, மானிடம் வகுத்தளித்த அன்பு, பண்பு, அறன், ஒழுக்கம் எல்லாம் அழிந்துவிடும் நிலையில் இருக்கின்றன.

இருள் சூழந்த, இந்த நெருக்கடியான சுற்றுச் சார்பு நிலையில் ஏற்படவுள்ள அழிவுகளைத் தடுத்துக் காப்பாற்றிச் சீர்படுத்தும் வகையில் ஏதேனும் வழிமுறை உள்ளதா?

ஒன்றுபட்ட நம் குடும்பங்கள் பிரிந்து செல்கின்றன. முற்றிலும் ஒழுக்கத்தின் அடிப்படையில் கட்டுக்கோப்புடன் விளங்கும் குடும்பங்களின் வாழ்வும் சமூக வாழ்வும் இடர்ப்பாடான நிலையில் உள்ளன.

இவை அனைத்திலும் ஏதோ ஒன்று இல்லாத குறைபாடு தென்படுகிறது. மாந்தனின் இயல்பான அன்பு எங்கோ தோற்று ஓடிவிட்டது.

மீண்டும் மீண்டும் நாம், நம்மையே கேட்டுக் கொள்ளும் வினா இதுதான்.

"அவ் அன்பு தோற்றது ஏன்?" தன்னலம்தான் அதற்கான காரணம்!

இன்றைய புதுப்பாணியில் அமைந்த கல்விதான் பேரச்சம் தரக் தக்க இக்கட்டினை வென்றிட முடியாத தன்னலத்தை வளர்த்துவிட்டது.

அந்தத் தன்னலத்தை எதிர்த்துப் போரிட வேண்டிய கட்டாயம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தேவையானதாகிவிட்டது.

அந்தப் போர் இன்றைக்கு நடைபெறுவது, இயற்கையாக மாந்தனிடம் இருக்கும் அன்பினுக்கும் தன்னலத்திற்கும் ஆகும். ஆனால் அன்போ, அப் போரிலிருந்து விலகி நிற்கிறது.

மேலும் அதுபோன்ற போராட்டங்கள், திருமண விலக்குக் கோரும் முறை மன்றங்களில்; முதலாளியத்துக்கும் தொழி

லாளர்க்கும் இடையில்; சாதி மதங்களிடையில் எங்கெங்கும் நடை பெற்றுக் கொண்டிருப்பதைக் காணலாம்.

இந்தச் சிக்கல்களை எல்லாம் தீர்த்து முடிவுக்குக் கொண்டு வரும் நீக்குகை மனிதரிடம் உண்டா?

உண்டு! மனிதர்களிடம் உண்டு! நாம் நம்பலாம்!

அதுதான் புதுவகையான அன்பு! அந்தப் புதுவகையான அன்பினை, மானுடம் கண்டும் காணாமல் விட்டுவிட்டன என்பது அண்மைக் காலத்தில் கண்டு உணரப்பட்டது.

புதுமைக் கோலம் பூண்டுவரும் அவ் அன்பினை, இன்றைய புதிய நாகரிக வாழ்க்கையில் கொணர்ந்திட வேண்டும் என்பதுதான் இந்த நூலின் முனைப்பும் முயற்சியும் என்றால் மிகையல்ல.

அன்பு இத்தகையது என்பதை, ஆண்டாண்டுக் காலமாக அறியாமல் இருந்துவிட்டோம் என்னும் ஓர் உண்மையை நாம் ஒப்புக் கொள்ளவேண்டும்.

அன்பில் ஊன்றி, உள்ளது சிறத்தலையும் அறிந்து வெளிப் படுத்தியதில் விஞ்சியும் எஞ்சியும் விளங்கியவர் திருவள்ளுவரே! அதனை முழுமையாக வெளிப்படச் செய்ததும் இயேசு பெரு மானின் செயற்பாட்டினால் தான் என்பதைக் கொண்டறியலாம்.

அவ் உண்மையைக் கண்டறிய நான், என் வாணாளில் பெரும்பங்கு செலவிட்டிருக்கிறேன். ஆனால் கண்டறியும் எல்லையைக் கூட இன்னும் சென்றடையவில்லை.

கெனான்ஃபேரர் (Canonferer) என்பவருடைய எழுத்தோவி யத்தைக் கண்டேன். அதில், கிரேக்க மொழிச் சொற்களில் அன்பு (Love) அல்லது அறம் அருள் இரக்கம் எனப் பொருள்படும் மன்பதை அன்பு (Charity) என்றும் இரண்டு சொற்களில் மொழி பெயர்ப்பினை, புதிய ஏற்பாட்டில் இருப்பதைக் கண்டு ஓர் உண்மையைத் தெரிந்து தெளிந்தேன். அவ் இரு சொற்கள் 1. Agappa 2. Phileo

அகாபா (Agappa) என்னும் சொல்லுக்குச் சரியான பொருள் இயேசுவின் வெளிப்பாட்டில் தென்பட்டதாகும். ஆனால் அச் சொல், கிறித்துவுக்கு முற்பட்ட காலத்தில், கிரேக்க இலக்கியத்தில் வழங்கப்படவில்லை என்று உரைக்கிறார்.

அந்த உண்மை, ஓர் ஒளிச்சுடர் போன்று என்னுள் ஒளிவிட்டு உணர்த்தியது எனக்கு; இயேசுவே அவ் வகையான ‘புத்தன்பு’ கொணர்ந்தார். ஆனால் இரு சொற்களும் பயன்படுத்தமால் பரிமாற்றம் செய்யப்படாமல் இருப்பதைக் கண்டேன். அந்தக் கமுக்கம் என்னில் உள்ளது. அந்தக் கமுக்கத்தின் வெளிப்பாடு என்னை என்கிறீர்களா?

“அன்பின் வழியது உயிர்நிலை” என்றார் திருவள்ளுவர் !

“அன்புதான் கடவுள்” என்கிறார் யோவான்!

எல்லாரும் வாருங்கள், இறைவரின் வரம்பிகந்த தெய்வீக இயல்பினில் நிலைபேறுடைய வாழ்வில் ஒருங்குகூடிப் . பங்கு கொள்வோம்; பங்கு கொண்டால் நாம் எல்லாம் கடவுளின் அன்புப் பிள்ளைகள் ஆவோம்.

❑ ❑ ❑

# அன்பு வெள்ளம்

அன்புதான் உலகிலேயே மிக உயர்ந்தது; பேராற்றலான ஒன்று

''அன்பினால் விளைந்தது துன்பம்'' என்று சொல்வதற்கான சான்று இன்று வரை காணக் கிடைத்திலது. உள்ளத்தில் அரும்பிப் பூத்து மணக்கும் மென்மையான ''நட்பு'' என்னும் பூவினை, நசுக்கியும், கசக்கியும் எறிந்துவிட்டது என்னும் வன்மையை இன்றளவும் அன்பு பெற்றதில்லை.

அன்பு, மறை வடிவமான, கடவுளின் திருவுருவக் காட்சி, கடவுள் அன்பாக இருக்கிறார்.

அத்தகு அன்பு வாழ்விலும், அன்பே வாழ்வாகவும் கொண்டால், கண்ணன், புத்தர், அருகன், இயேசு ஆகியோரில் கடவுள் வாழ்ந்தது போன்று நம்மிலும் கடவுள் வாழ்ந்து வருவார்.

இயேசு பெருமான் சற்றே கரடுமுரடானவர் என்று சொல்லப்பட்ட போதிலும், பரிவும், இரக்கமும் மிக்கவராகத்தான் அவர் விளங்கினார். ஆகவே தான் குழந்தைகள் சின்னஞ் சிறார்கள் அவரை அன்புடன் அணுகினர். அவர் தோள் மீதில் தாவி ஏறி அமர்ந்தும் அவரது தெய்வத் திருமுகத்தைத் தடவியும் பார்த்திட முடிந்தது. அந்தக் குழந்தைகள், இயேசுவிடம் அளவிலாப் பற்று கொண்டனர், கொஞ்சினர்; அவர் கைகளைப் பற்றிக் கொண்டு அவர் அருகிலேயே நின்றிட அவாவினர்.

கலிலேயாவின் திருமகனான இயேசுவில் இருந்த அன்புதான் அன்பு! அவ் அன்புதான், திருச்சபையினை ஆட்சி புரிந்திட வேண்டும். இல்லத்தை ஆட்சி செய்திட வேண்டும். நம் நெஞ்சத்தையும் அவ் அன்பே ஆண்டு கொள்ளல் வேண்டும்.

'அன்பு' என்பது குன்றையும் குன்றுசார்ந்த இடத்தினையும் எப்படி மலர்கள் அழகு செய்கின்றனவோ அப்படித்தான் மாந்தரின் நெஞ்சத்தினையும் அழகு செய்கிறது.

வறள்நிலத்தினையும் காணப் பொறுக்காத மண் பரப்பினை யும் மூடி மறைத்துக் கவினுறச் செய்வன மலர்கள்தாம்.

பாறைகள் நிறைந்த மலைப் பகுதியினைச் சுற்றி மலர்ச் செடி, கொடிகள் வளர்கின்றன; மண்ணிலும் மண்ணடி வேர்களிலும் அவை வளர்கின்றன; தழைக்கின்றன. பள்ளமும், மேடும் நிறைந்த நிலத்தின் மேற்பரப்பினை அவை தம்மில் பூத்துக் குலுங்கும்

மலர்களால் போர்த்திப் பொலிவெழச் செய்கின்றன. களி மண் பகுதியினையும், பாழ்பட்ட பகுதியினையும் கூட இயற்கை நிலத்துக்கு நல்கும் சிறப்பு உரிமையும் மாட்சியுமாக இணைந்து விளங்கும் ஆடை அணிகலன்களாக விளங்கி வனப்புமிக்கதாகச் செய்கின்றன, மலர்ந்து மாயும் அவ் வண்ண மலர்கள்!

அதுபோலவே, அன்பும் பண்பும் அற்ற பண்படாத மாந்தரின் நெஞ்சங்களைக் கூடப் பண்பட்டதாக மாற்றி அமைந்து அணி செய்கிறது அன்பு.

இயற்கை அன்பினால் பூம்பொழில்கள் தழைக்கின்றன. அதே அன்பினால் தான் அப் பூம்பொழில்களில் பூக்கள் பூத்துக் குலுங்குகின்றன; மணம் கமழ்கின்றன.

அவ் இறை அன்பினால்தான், பூத்தன அப்பூக்கள். ஒருசேரக் கொண்டுவந்து குவிக்கப் பெறுவதும் பின்னர் அவை, அழகுபடக் கண்ணைக் கவரும் வண்ண மாலைகளாகத் தொடுக்கப்படுவதும்; பூச்செண்டுகளாகக் கட்டப்படுவதும் அவை நம் உள்ளங்களைக் களிப்பில் ஆழ்த்துவதும் ஆகும்.

அன்புதான் நாம் வாழும் இல்லங்களை எழில் மயமாக்கு கிறது. அன்புதான், இல்லங்களில் நீக்கமற நிறைந்து உறைந்து மகிழ்ச்சி பொங்கும் இடமாக இல்லத்தை உயர்த்துக்கிறது.

அழகில் சிறந்தது - உயர்ந்தது அன்பு! அன்பு மிகமிக நுட்பமானது. நுண்மையும் மென்மையும் ஆனது.

வன்மையின் கைப்பட்டு நொடியில் உடைந்து தூளாகிவிடக் கூடியது அன்பு! எனினும் நம்மால் எதை எதைத் தாங்கிக் கொள்ள முடியாது என்று எண்ணிக் கொண்டிருக்கின்றோமோ அவற்றை யெல்லாம் தாங்கிக் கொள்ளும் வலிமையும் துணிவும் வாய்ந்ததாக விளங்குவது அன்பு!

அன்பினால் ஆளப் பெற்று, அவ் அன்பையே தனதாக்கிக் கொண்டு அந்த அன்பையே உள்ளம், உரை, செயல் என்று கொண்ட மாந்தர் எவருமே எத்தகைய ஈகத்திலும் - தன் மறுப்புக் செயல்களாலும் சிறுகவும் இல்லை; குறுகவும் இல்லை.

அருவருக்கத்தக்க குறுக்கை (சிலுவை)யினையும் அழகு படுத்தியது அன்புதான்!

இருளும் அச்சமும் நிறைந்த கல்லறையைச் சாவைத் தடுத்து நிறுத்திய அக் கல்லறையைக் கூட அழகும் ஒளியும் பொலியச் செய்தது அன்பு!

சாவினையும் அதனுடன் இணைந்துவரும் அச்சத்தையும் அகற்றியது அன்பு!

ஆணிகளால் ஆகிய முள்முடி தரிக்கப்பட்ட - முக்கால் அம் மணம் ஆக்கப்பட்ட கலீலி தந்த மேன்மையினைத், தனித் தோங்கும் உள்ளங்களை ஆண்டு கொள்ளும் அரசனாக்கியது அன்பு தான்!

புயலால் அலைக்கழிக்கப்பட்டுச் சுக்கு நூறாகிவிட்ட நெஞ்சங் கொண்ட அவரை, 'ஆடை ஆற்ற அரசர்' என்பதைவிடப், 'பற்றறுத்தல் உற்றாருக்கு உடம்பே மிகை' என்னும் மெய்ப் பொருள் கண்ட மாமன்னரைத் துறவி என்றே அழைக்கிறது என் உள்ளம்.

அந்த மாமன்னனுக்கு முடிசூட்ட வேண்டுமென்கிறது அன்பு. முள் முடியா? அன்று, அன்று.

நம் நெஞ்சத்தால் - மனமார நாம் செய்யும் பத்தி, பண் பாட்டினால் செய்யும் வழிபாடு என்னும் மலர் மகுடத்தைச் சூட்ட வேண்டும் என்று பணித்துவிட்டது அன்பு.

காணரிய இன்பத்தினை நல்கும் இளமை குன்றாத தூய ஆவியை, இருள் சூழ்ந்த சமயப் பற்றற்ற நாகரிகமற்ற ஆப்பிரிக்க மக்களிடையே அனுப்பி வைக்கிறது அன்பு. ஏன்?

அன்பின் தொடு உணர்ச்சிகூட அற்ற நிலையினை மாற்றிட, உணர்ச்சியற்று எதையும் புறக்கணிக்கும் போக்கினை விடுத்திட, தன்னலம் - பேராசை என்னும் அழுக்காற்றினை அகற்றிடத்தான் தூய ஆவியான அன்பு அவர்களிடம் சென்று வாழ்ந்திடத் தழைத்தோங்கிடத்தான் மேலும் மேலும் அம் மக்களின் அன்பு சென்று நிலைத்து நிற்கிறது; அவர்கள் இன்னல் நிறைந்த இருளினை விரட்டுகிறது; புத்தொளி பாய்ச்சுகிறது; புதிய படைப்பாக அவர்கள் அகம்புறம் மலர்ந்திடச் செய்கிறது. அப்படிப்பட்டது தான் அன்பு; வல்லமையாவினும் வல்லமையாக அழகு வாய்ந்த யாவற்றினும் பேரழகாக விளங்குகிறது அன்பு.

அவ் அன்புதான் கடவுளின் இயல்பாகும். அன்பின் அவ் இயல்பினால்தான் மாந்தரின் நெஞ்சத்தைக் கவர்ந்து அதிலே நிறைந்து நிலைத்திட ஓங்குகிறது.

☆ ☆ ☆

## "என் அளவுக்கு ஒப்பாக, நான் அன்புவைத்தது போல்"

புதிய உடன்படிக்கையின் புதிய சட்டத்தில் உள்ள இரண்டு சிறிய சொற்கள் நமக்கு அறை கூவல் விடுக்கின்றன. அவற்றின் மென்மைக் கைகளை நீண்டு நம்மைப் பற்றிக் கொண்டனவோ எனும்படி நம் நெஞ்சங்களைப் பற்றின அவ் இரண்டு சொற்கள்.

நயத்தக்க நாகரிகம் வாய்ந்த மென்மையான உயர்ந்து தாவிப் படரும் கொடிமுந்திரிக் கொடியின் தொட்டால் துவண்டு விழும் தன்மையும் மென்மையும் வாய்ந்த தளிர்க்கை கரடுமுரடான பாறையினைப் பற்றியது; பற்றிய தளிர்க் கொடி அப் பாறையிலேயே ஒட்டிக் கொண்டது. நாம் கண்ட இப்படியொரு காட்சியைப் போலவே, அவ் இரு சொற்களும் உயர்ந்து தாவிப் படரும் அந்தக் கொடிமுந்திரிக் கொடியின் இரு தளிர்க் கரங்கள் போன்றே தோன்றுகின்றன.

நீங்கள் கேட்கலாம் 'அவ் இரு சொற்கள் யாவை' என்று?

"நான் உங்களை எப்படி விரும்பினேனோ அப்படியே நீங்களும் உங்களில் ஒருவர் மற்றொருவரை விரும்புங்கள்" முதலில் என் உணர்வினில் ஒன்றிவிட்ட அவ் இரு சொற்களையும் உதறிவிட எண்ணினேன்; இயலவில்லை. நெஞ்சத்தைப் பற்றிய நேயம் விலகுமா? அதுபோன்றுதான் அவ் இரு சொற்களும் என்னைப் பற்றி ஆட்கொண்டன.

என் உள்ளுயிரில் அவ் இரு சொற்களும் ஒலிப்பதைக் கேட்கிறேன்; அஃதும் எப்படி? நீண்ட நெடுநாள்களுக்கு முன்பு என் நினைவிலிருந்து சென்றுவிட்ட இறையின் புகழ்பாடும் பாசுரம், மீண்டும் வந்து என் நெஞ்சக் கதவினைத் தட்டி உள்ளே வந்து இசைத்தலைக் கேட்பது போன்று.

"நான் விரும்பினாற்போல" என்று தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருந்தது; கேட்டுக் கொண்டேயிருந்தேன். சற்றே விழிப்புடன் கேட்டுக் கொண்டிருந்த அச் சொற்கள் இரண்டினுக்கும் விளக்கம் தேவை என்பதுபோல "நான் விரும்பினாற்போல என்றால் என்ன?" என்று கேட்டேன்.

"நான் உன்னை விரும்பினாற்போல" இதை கேட்டதும், "ஆண்டவரே! அதுதான் முடியாது" என்றேன். தங்களை விரும்ப என்னால் ஆகாது என்றேன். "தாங்கள் என்னை விரும்பியது

போல, நான் தங்களை விரும்பினேயானால், என்னுடையவை என்று நான் கொண்ட அத்துணையும் கைவிட வேண்டி வருமே'' என்றேன்.

"எதனை நீ கைவிடவேண்டுமென்று சொல்லினை?'' என்று மென் நயமுடன் கேட்கிறார்.

ஆண்டவர் என்னை விரும்புவது போல நான் அவ்வரை விரும்பிட முனைந்தால் நான் எதை எதைக் கைவிட வேண்டு மென்று சொன்னேனோ அவற்றின் பட்டியலைப் போட்டேன்.

பட்டியல் போட்டபின், "இதோ! இப் பட்டியலில் குறிப்பிட்டுள்ள என்னுடைய பல்வளம் செறிந்த செல்வத்திற்கு மாறாக - ஈடாக நான் வேறு எவற்றைப் பெற இயலும்?'' என்று வினவினேன்.

அதுவரை காணாத செல்வ வளத்தினை எனக்கு ஆண்டவர் சுட்டிக் காட்டினார். அப்படிப்பட்ட செல்வ வளம் எது? இயேசு என்னை விரும்பியதுபோல நான் அவரை விரும்புவதால் எனக்குக் கிடைக்கும் அந்தச் செல்வ வளம், அவரது தோழமை.

அவரிடம் மிகுந்துள்ள தெய்வீக வலிமை, அவரிடமிருந்து பொங்கிப் பெருகும் இரக்கம், மென்னயம், அவரிடம் ஒன்றி யுள்ள எதையும் தாங்கும் பொறையுடைமை என்பவைதாம். ஆகவே புலன்களின் வயப்படும் வேடிக்கைப் பொருளான உலகியல் பொருள் அனைத்தினையும் கைவிட்டுத், தூய ஆவியின் அருளாகிய நிலைத்த பொருளைக் கைக்கொள்ள முனைந்து விட்டேன்.

## விரும்பும் முறைமை

நான், பயன்படுத்திடப் பயன்படுத்திட, பழுதாகிப் போய், பயனற்றதாகும் அத்துணைப் பொருள்களையும் உதறித் தள்ளிவிட்டுப், பயன்படுத்தப் பயன்படுத்த மென்மேலும் பல்கிப் பெருகிப் பயன்படதக்க பொருள்களே இனிப் பெறுவேன். ஆம் அதுபோன்ற மகிழ்ச்சியை இதுவரை நான் அடைந்திலேன்!

இன்ப நற்பேற்றினை நான் கண்டு உவந்தேன். ஆனால், நான் அரிதின் முயன்று பெற்ற இன்பமெல்லாம் எந்தப் பொருள்களினால் பெற்று வந்தேனோ, எந்ததெந்த மக்களிட

மிருந்து பெற்று வந்தேனோ, எந்தச் சூழ்நிலைகளின் இருந்து பெற்றுவந்தேனோ அவை எல்லாம் என் முயற்சி தளரும்போது - குன்றும் போது அவ் இன்பமெல்லாம் இல்லாதொழிந்தன.

அவை எல்லாம் எத்தனை பெரிய பொய்த்தோற்றம் - மருட்சி என்பதைக் கண்டு கொண்டேன்.

மாறாத நிலைத்த மகிழ்ச்சி காணவேண்டுமாயின் நான், மக்களை இன்புறச் செய்யும் பலவற்றை விடுத்து முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்பதனை உணர்ந்தேன்; அப்படியொரு விழைவினைக் கொண்டேன்.

அத் தகு களிப்பினை உவகையைத் தரும் புதுவாழ்வு அன்பின் ஊற்றுக் கண்ணிலிருந்தே பொங்கிவரக் கூடும்.

உலக வாழ்வில் இன்பம் எல்லாம் என்னைச் சுற்றியுள்ள புலனுணர்வை அடிப்படையாகக் கொண்டவற்றிலிருந்து பெறப் படுவதாகும். ஆனால், நான் கண்டு கொண்ட மகிழ்ச்சி - உவகை உலக வாழ்விலிருந்து கிடைத்திடும் இன்பத்தினை விட உயர்ந்த தாகும், கண்ணாடியைவிட உயர்ந்த வைரம் போல; மாசுற்ற மாழை (உலோகங்)களைவிட உயர்ந்த மாசற்ற தங்கம் போல!

இப்பொது தெரிந்து கொண்டேன் அன்பு என்பது எத் தகையது என்று. ஆண்டவராகிய இயேசு, என்னை விரும்பியது போன்றே, நானும் அவரை விரும்பிட வேண்டும்.

ஆண்டவரிடம் நிறைந்துள்ள குறைவற்ற அன்பினைப் போல என்னிடம் உள்ள அன்பினையும் பல்கிப் பெருகச் செய்திட வேண்டும்.

அதோ! ஆண்டவர் இயேசு அரியணையில் அமர்ந் திருக்கிறார்; என்னை ஆளுகிறார்; அதே போன்று அன்பின் மிகுதியால் என்னையும் அரியணையில் ஏற்றி அமர்த்திடும் ஆற்றலை அளிக்கிறார். இங்கே, உலகில் நான் ஆண்டவர் இயேசு திருவாய் மலர்ந்தருளிய சொற்களை நான் பேசிட வேண்டும். அன்பினால் அவர் ஆற்றிய பரிவார்ந்த பணிகைளப் போன்று நானும் ஆற்ற வேண்டும்.

போக்கற்ற, மீட்பற்ற உயிர்களை நம்பிக்கையற்று மன முறிந்து கிடக்கிறவர்களுக்காக ஆண்டவர் இயேசு எப்படிப்பட்ட துன்பங்களை அடைந்தாரோ அப்படிப்பட்ட துன்பங்களை நானும் இனி உய்த்து உணர்ந்து ஆகவேண்டும்.

ஆண்டவர் மன்பதை மீது கொண்ட அன்பின் இடத்தை நானும் பெற்றாக வேண்டும். அப்போதுதான் அடடா! அந்த அளப்பரும் மகிழ்ச்சி எடுத்துரைக்கவொண்ணாத மகிழ்ச்சி என்னை வந்து அடைகிறது.

ஆம்! மற்றவர்களுக்காக ஆண்டவர் இயேசு தாம் பெற்ற துன்பங்களினால் குறுக்கைப் (சிலுவை)பாட்டினால் - வந்துற்ற துன்பங்களின் வாயிலாக எத்தகைய மகிழ்ச்சி பெற்றாரோ அதே மகிழ்ச்சியை நானும் பெறுகிறேன். ஏனெனில், அவர் என்னை விரும்பியது போலவே நானும் இயேசு விரும்புவதால்.

அன்பினால் ஆவது நன்மையா தீமையா
என்றாய்வோர் அன்பறியாதார்.

## வாழ்க்கையில் அன்புபெறும் உரிமை இடம்

பாடல் புனைவதில் - கவிதை யாப்பதில் தேர்ந்த திறம் பெற்று அவற்றின் வாயிலாக ஏதோ சற்று அன்பினைப் பற்றி எடுத்து இயம்பிட முடியுமே அல்லாமல், வெறும் வாய்ச் சொற்களால் அன்பினைப் பற்றிச் சொல்லிவிட முடியாது.

நம்மை நாம் உணர்ந்திட வேண்டுமானால், அன்பிற்குரிய இன்னிசையுலகில் நாம் இரண்டறக் கலத்தல் வேண்டும். பகைமை என்னும் வன்மம் கொண்டிராமல் மறுமையின் உயிர்துடிப்பினை நாம் கேட்டுணர்கிறோம்.

பொறுப்புணர்ச்சி, பேராசை, பகைமை போன்ற இடர்ப் பாடுகளை எல்லாம் கடந்து மேல் நின்று மெய்யின்பம் பெற வைப்பதற்கான ஒருவகை புதிதான ஆற்றலால் இயங்கவல்ல மேல் உயர்த்தும் ஒன்றினை நாம் காணுகிறோம்.

அன்பே, மனிதன் பிறத்தலுக்கும் உயிர்த்தலுக்கும் வாழ் தலுக்கும் முழுமுதற் காரணமாகும்.

அன்பின் வேட்கை மட்டும் இல்லாது போயிருப்பின் ஊழூழி காலமாகத் தொடர்ந்து மனிதன் படைக்கப்பட்டிருக்க மாட்டான். அன்புதான் மனிதரை உலகில் படைத்து உலவ விட்டிருப்பது.

மனிதர் படைக்கப்பட்டுப் பண்பட்டபோது, உலகமெங்கும் இசையும் நகையும் நிறைந்திருந்தன. எங்கும் இன்மணப்பூக்கள்

பூத்துக் குலுங்கியிருந்தன. அவற்றின் நறுமணம் காற்றில் கலந்து கமழ்ந்தது. எல்லாப் படைப்புகளும், மாந்த இனத்தை வரவேற்று திருவிசைப்பா பாடி முழங்கின. மாந்தன் உலகில் வந்து பிறந்தனன்.

அன்பின் வலிமை வென்றது. இறை அன்பின் இடைவிடாத போராட்டம் வெற்றி கண்டது.

மாந்தருக்கு ஏற்படும் எத்தகைய புண்ணையும் ஆற்றிடும் அருமருந்தாகும் அன்பு!

மாந்தரின் தோல்வியினால் ஏற்படும் ஆறாத மனப்புண் ஆறிட, வார்த்திடப் பெரும் மருந்துக் களிம்பு, கடவுளின் அன்பு!

அனைத்துப் படைப்புக்கும் தேவையான படைப்பாற்றலே அன்புதான். அன்பு என்பது படைப்பாற்றல். உய்யும் பொருட்டு வந்துய்யும் நம் பிறவிக்கு வாய்த்த பெற்றோர் என்னும் தோற்றுவாயைத் தோற்றுவித்தது அன்பு.

எதிர்வரும் தலைமுறையினைக் காணும்பொருட்டு ஒரு மேன்மைத் திருமணத்தைக் கூட்டுவிப்பதன் மூலம் ஓர் ஆணையும் பெண்ணையும் அருளப் பெற்றிட அப்பனாக அம்மையாகச் செய்வது அன்பு! மகப்பேறு பெற்றிடச் செய்ய, ஒன்றுகலந்த ஆணையும் பெண்ணையும் முறைப்படி காத்திருந்து தாய்மையாக, தந்தமையாகச் செய்வதும் அன்பு!

அன்புதான் குழந்தையை நல்கவும் வளர்க்கவும் வல்லது. அது அன்பற்ற சூழலில் பிறந்திடும் குழந்தையும் உண்டு. ஆனால் அவர்களால் பிறந்த குழந்தைக்கு மாறாக அவர்களாலேயே இழைக்கப் படும் குற்றமாகும். பிறந்திடும் ஒவ்வொரு குழந்தையும் அன்பின் வழியதாகவே இருந்திட வேண்டிய உரிமை பெற்றதாகும்.

குற்றங்களில் எல்லாம் மாபெரும் குற்றமாகக் கொள்ளப் படுவது அன்பினை வதைபட வைப்பதுதான். இயற்கையினால் நமக்கு அளிக்கப் பெற்ற அத்தனையுமே அழகானவை.

அன்பு கொல்லப்பட்டதெனின், நமக்கு அருளப்பெற்ற அக, புற அழகு இறந்துபடும்.

அன்புதான் நம் வாழ்க்கையின் நெஞ்சின் இயக்க ஆற்ற லாகும். அவ் அன்பே, நம் இல்லத்தை - இல்லறத்தை ஆக்கும் ஆற்றல் விசையாகும்.

அன்பு குடிக்கொள்ளாத இடத்திற்குச் சென்றால் நாம் வாழ்ந்திட ஓர் இல்லம் அற்றவராவோம்.

வீடு என்று எண்ணி அதன் உள்ளே சென்றால், அங்கே ஆயிரம் அழகுப் பொருள்கள், நாற்காலி உயர்பலகை, நிலைப் பேழைகள் எனப் பலப்பல இருப்பினும் அன்பில்லாதவர் வாழும் வீடாக அது இருக்குமேயானால், அந்த வீட்டினுள் நுழைந்ததும் ஏதோ ஒன்று இல்லாததுபோன்ற ஓர் உணர்வு நமக்குள் ஏற்படு கிறது அல்லவா! அந்த வீட்டில் ஏதோ இழவு நேர்ந்திருக்குமோ வேறு ஏதோ நடக்கக்கூடாதது நடந்துவிட்டதோ என்றுகூட எண்ணத் தோன்றுகிறது. ஏன்? அங்கே அன்பினைக் காணோம்; காணமால் போன அவ் அன்பு கல்லறைக்குள் போகவில்லை அவ்வளவுதான்! அவ் வீட்டினுள் அளப்பரும் செல்வம் இருக் கலாம்; இருந்தும் அது ஒரு வீடாகக் கருத முடியாதுதான்.

அன்பு ஒன்றுதான் - அன்பு மட்டுமே நமக்கு இல்லறம் அல்லது நல்லறம் அன்று என வாழும் இல்லத்தை அளித் திருக்கிறது.

ஒருவனுக்கு ஒருவள் என்னும் நெறி மீறி ஒருவருக்கு மேற்பட்டுப் பலரை மணக்கும் வழக்கத்தைக் கொண்ட வாழ்வறப் பற்றற்றவர் வாழும் நாட்டில் இல்லறம் ஏது? இல்லற ஒழுக்கம் வாழும் இல்லம்தான் ஏது? ஏதோ பலர் சேர்ந்து ஓரிடத்தில் வாழ்கின்றனர் .... அவ்வளவே!

பொன்னுலகம், பலமகளிர் மணத்தை அழித்துப் போடும். இல்லறம் வாழும் இல்லம் என்பதனை இயேசுவின் அன்புதான் படைத்தளிக்கிறது.

அன்பு என்பது ஒருவனையும் ஒருவளையும் தலைவன் தலைவியாக ஒருவர்க்கொருவர் இல்லறத் துணைவர்களாக இணைக்கும் வாழ்க்கைச் சட்டம்.

ஒருவனுக்கு ஒருவள் என்னும் கற்பு ஒழுக்க நெறியில் இணையும் காலம் போன்ற கவின்மிக்கது வேறு ஏதும் இல்லை. படைப்பினங்கள் அனைத்துமே அந்த இன்பப்போதினைக் கொண்டாடுகின்றன.

ஓர் ஆண்பெண் இணை புறாக்களைக் கண்டேன்; எத்துணை மகிழ்வுடன் அவை இரண்டும் இணையும் நேரத்தினைக் கூடிக் குலவி கொண்டாடுகின்றன!

ஊர்க்குருவிகளைக் காணுங்கள்; ஒன்று மற்றொன்றை எவ்வளவு அன்புடன் காதலிக்கின்றன!

தேனீக்களைக் காணுகின்றோம்; ஒவ்வொரு மலராகத் தேடித் தேடிப் பறந்து பறந்து தேனினை - மகரந்தத் தாதினைக் கொண் டோடிச் செல்கின்றன.

இவற்றிலிருந்து நான் தெரிந்து கொண்டது: படைக்கப்பெற்ற யாவுமே ஒன்றுக்கு ஒன்று இணை சேர்கின்றன. படைக்கப் பெற்ற அனைத்துமே ஒன்று மற்றொன்றைக் காதலிக்கின்றன.

## அன்பு தன்னையே அளிக்கிறது

அன்பினால் மலர்ச்சியுற்ற பூ, பிஞ்சாகி, காயாகி, பழமாக உருமாறிடும் நிலைக்கு விரைவில் வர இருக்கிறது. செம்மலர்கள் மக்கள் மகிழ வேண்டுமென்பதற்காகவே மலர்ந்து மணக்கின்றன. அந்த நறுமணம் காற்றில் கலந்து கமழ்வதை நான் நுகர்ந்தேன். கமழும் செம்மலர்களின் எழிலான இதழ்கள் இளங்கோமள வண்ணம் மாறிப் பழுப்பு நிறமாகிவிட்டன, வதங்கிவிட்டன. இவற்றையெல்லாம் உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவ் இதழ்கள் ஒன்றன்பின் ஒன்றாக மண்மேல் உதிர்ந்துவிட்டன. இப்போது செம்மலர்ச் செடி உலர்ந்து நிற்கிறது. ஆம் அந்தச் செம்மலர்ச் செடி இப்போது இறந்தே விட்டது.

ஏன்? அந்தச் செம்மலரில் இயற்கை அளித்திருந்த அன்பின் காரணமாக அழகாக-மணமாக மகரந்தத் தாதுவாக மற்றவர் களுக்காக வெளிப்பட்டதனால் அவ்வாறாயிற்று.

வாழ்க்கைக்கு முதற் காரணமாக அமைந்ததே அன்புதான். எப்போது அன்பு இடம் பெயர்ந்து செல்கிறதோ அப்போதே வாழ்க்கையும் அதன் காரணத்தை இழந்துவிடுகிறது.

நம் வாழ்க்கை நாகரிக வளர்ச்சி பெற்றிட எவை எவை தேவைப்படுகின்றனவோ அவையனைத்துக்கும் அடிப்படையாக அமைவதே அன்புதான். அத்தகு அன்பு அழிந்துபடும்போது, நம் வாழ்க்கைக்குப் பயன்படத்தக்க யாவும் மறைந்து போகின்றன.

நம்மில் இருக்கும் அன்பு எப்போது நலிந்து நைந்து போகிறதோ அப்போது நம்மைப் பொறுத்த மட்டில் கதிரவன் ஒளி வீசுதல் இல்லை; முகில்கள் ஒன்று கூடி ஒன்றொடன்று மோது கின்றன, இருள் சூழ்கிறது, வரப்போகும் பேரிடரை முன்காட்டுகிற

தீக்குறி தோன்றுகிறது. சூறாவளி சுழன்றடித்து அச்சுறுத்துகிறது. இந் நிலையில், அன்பை இழந்ததால் பெறக்கூடிய கடைநாள் தீர்ப்புக் கார் இருளில் போய்ப் பதுங்குகிறோம்.

அன்பின் தோழமைப் பாங்கு நொறுங்கிப் போனதால் ஆழ்ந்த துயரம் வந்துறுவதிலும் அதுவரை நம் நெஞ்சம் பட்டறி யாத சாத் துயரம் பட்டறிய வேண்டிய நிலையும் வந்துற்றது பற்றியும் வியப்பதற்கு ஒன்றுமில்லை.

மனிதரின் வாழ்வே நெஞ்சந்தான். அதுபோல அன்புதான் நெஞ்சத்தின் நெஞ்சம் - இயக்கம்!

நாகரிகமற்ற கீழ்த்தரமான இடத்திலிருந்தும், ஒரு காதற் காவியத்தைப் படைக்கிறது அன்பு. அருவருக்கத் தக்கனவற்றைக் கூட அணைக்கத்தக்கதாகச் செய்கிறது அன்பு. அன்புக்கு என்றோர் அரும்பெரும் ஒளிச்சுடர் உண்டு. அந்த அன்பு, தன் பேரொளிச் சுடர் வீசி, நம் வாழ்க்கையினை ஒளிமயமாக்குகிறது. அதன் மூலம் நம் வாழ்வில் உற்ற துன்பங்கள் துயரங்கள் மடியவும் மறையவும் செய்கிறது அன்பு.

வீணாகிப் போன வாழ்க்கையிலிருக்கும் மாந்தரை மீட்டு, அழகிய - மற்றவர்க்கும் பயனுள்ள வாழ்க்கையாக மாற்றி அமைத்துக் காட்டுவது அன்பு.

அன்பு என்பது ஓர் ஒப்பற்ற உயிர்ப்பாற்றல்; தெய்வ மெய்ப்பொருள்; உயிர் உண்மையம்; காரண காரியங்களை எஞ்சியும் விஞ்சியும் நிற்பது. காரண காரிய எல்லைக்குள் அடங்குவதன்று அன்பு. அவ் அன்பே மாந்தருள் உரிமையோடு உள் நின்று ஓங்கி நிலைக்கும் இறைமை ஆகும்!

## இறைமைக்குக் கிடைத்த விடை - அன்பின் உறவு

அன்பின் வழி என்பது, அன்பு நெறியில் நடப்பது ஆகும். அன்பு வாழ்க்கை என்பது புதிய உடன்படிக்கையின் நெறியில் வாழ்வது ஆகும்.

அன்பு நெறி பிறழ்ந்து அடியெடுத்து நடந்தோம் என்றால் அது, இயற்கையின் போக்கிற்கு மாறுபட்ட நெறியில் நடக்கிறோம் என்று பொருள். எவ்வெப்போது நாம் அன்புக்கு மாறுப்பட்டு செயல்படுகிறோமோ அவ்வப்போதெல்லாம் நாம் இறைமையின் போக்கிற்கு மாறுப்பட்டுச் செயல்படுகிறோம் என்று பொருள்.

நம்முடைய முறையீட்டுக்குச் சரியான விடை - பயன் கிடைக்கவில்லை என்றால் நாம் எல்லாம் ஒரே வகையான வினாவைத்தான் அதாவது, "அன்பு நெறிவிட்டு விலகி நடக்கி றோமா?" என்றுதான் கேட்கிறோம்.

யோவான் *3:13:20* "என் உடன்பிறந்தோரே! உலகம் உங்களைப் பகைத்தால் வியப்படையாதீர்கள்".

நாம் உடன்பிறந்தோரிடத்தில் அன்பு கூருகிறபடியால், சாக்காட்டைவிட்டு நீங்கி, வாழ்விற்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம். உடன்பிறந்தோரிடத்தில் அன்பு கூராதவர், இறப்பிலே நிலை கொண்டிருக்கின்றனர்.

தன் உடன்பிறப்பைப் பகைக்கிற எவனும் மானுடக் கொலை காரனாயிருக்கிறான். மானுடக் கொலைஞன் எவனோ அவனுக்குள் பெருவாழ்வு நிலைத்திராது என்று அறிவீர்கள்.

சான்றோர் தம்முடைய வாழ்வை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம். நாமும் உடன் பிறந் தோருக்காக வாழ்வைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்.

ஒருவன் இவ் உலகச் செல்வம் உடையவனாயிருந்து, தன் உடன்பிறந்தானுக்குக் குறை உண்டென்று கண்டு, தன் நெஞ்சத்தை அவனுக்கு அடைத்துக் கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலை கொள்கிறது எப்படி?

என் பிள்ளைகளே! உரையினாலும் நாவினாலும் அல்ல செய்கையினாலும் உண்மையினாலும் அன்பு கூரக் கடவோம்.

இதனாலே, நாம் நம்மை உண்மைக்கு உரியவர்களென்று அறிந்து, நம்முடைய நெஞ்சத்தை அவருக்கு முன்பாக உறுதிப் படுத்திக் கொள்ளலாம்.

நம்முடைய நெஞ்சமே நம்மைக் குற்றவாளிகளாகத் தீர்க்கு மானால் தேவன் நம்முடைய நெஞ்சத்திலும் பெரியவராயிருந்து அனைத்தையும் அறிந்திருக்கிறார்.

இயேசுவின் திருப்பெயர், நமது கடவுளிடம் சென்றடையும் வழி வாய்ப்புத் தருகிறது. ஆனால், நாம் அன்பு நெறியை விட்டு

விலகுவோமானால் - விலகிச் சென்றோமானால் பிறகு இயேசுவின் திருப்பெயரைச் சொல்லுவதால் நமக்கு எவ்வகை மதிப்பும் கிடையாது. அன்பு நெறியில் நடந்திடத் தக்கவரானால் மட்டும் நாம், நமது ஆண்டவராகிய இயேசுவின் திருப்பெயரைக் கூறலாம்.

அன்பு நெறியை விட்டுச் சென்றால், நமது கடவுளுடன் நமக்கு வாய்த்துள்ள - தோழமை - நெருக்கம் தடைப்படும்; நமது பேரன்பு - பற்றுறுதி தளரும்; தூய திருமறை நம் நெஞ்சத்திற்கு ஏறத்தாழ மூடப்பட்டதாகிவிடும்.

அன்பு என்பது உலகிலேயே எளிதான ஒன்று.

அன்பு என்பது கடவுளின் திருவருள் வெளிப்பாடு என்பது நமக்கு உணர்த்திடப்பட்டுள்ளது.

இயேசுவில் புதிதாகத் தோற்றுவித்த குடும்பத்தின் புதிய திட்டம் என்பது என்னவெனில் "நாம் நம்மில் ஒருவரை மற்றொருவர் அன்புடன் விரும்புகிறோம் - இயேசு ஆண்டவர் நம்மை அன்புடன் விரும்பியது போல" என்பதுதான்.

நாம் நோய்வாய்பட்டு, அந் நோயிலிருந்து குணமாகவில்லை என்றால், அதற்கான விடை என்ன என்பதைவிட நாம் அன்பு நெறியில் நடக்கிறோமா? என்பதுதான் நம் வினாவாக இருத்தல் வேண்டும்.

பெரும்பாலான மக்கள், நோய்வாய்ப்பட்ட பின்பு தன்னல மிக்கவர் ஆகின்றனர். இந்தக் கருத்து அனைவருக்கும் பொருந்தாது. ஆனால் பலருக்கும் இது பொருந்தும். நோய்வாய்பட்டவரை அவர்தம் குடும்பத்தினர் அனைவருமே அவர் பக்கத்திலிருந்து கவனித்து வருகிறார்கள். வேண்டிய பணிவிடைகள் செய்கிறார்கள். இருந்தும் அவர்கள் தன்னலத்தாலேயே அன்பின் பெரு வெளியில் இருந்து வெளியேற்றப்படுகிறார்கள். அந்த அன்பின் பெரு வெளியில் இருந்து சரியான விடை - பயன், வேண்டுதல் மூலம் அவர்களுக்குக் கிடைக்கிறது.

நாம் நோய்வாய்ப்பட்ட பொழுது நமக்காக யாரேனும் ஒருவர் வேண்டுவதால் நம்மைக் குணப்படுத்துகிறார் என்றால் அதனைக் கருத்தில் கொண்டு நாம் தொடர்ந்து அன்பு நெறியில் நடந்துவரல் வேண்டும். இல்லையென்றால், நமக்காக வேறு எவர்

வேண்டுதல் செய்தாலும் நோய்வாய்ப்பட்டதிலிருந்து நாம் மீளப் பெறுவதில்லை என்பது திண்ணம்.

வெறும் சொற்களால் மட்டும் நாம் அன்பு கொண்டவராக அன்பு நெறியில் நடப்பவராக ஆகமுடியாது. உள்ளபடியே நாம் அன்பில் நடந்திட வேண்டும். அன்புள்ளவராக - அன்பினால் வாழ்பவராக வேண்டும். நாம் அன்பு நெறியில் நடப்பவரானால் ஒருவர் மற்றொருவருடைய துன்பங்களையும் நாம் ஏற்க வேண்டும். ஏற்று அடுத்தவர் துன்பச் சுமைகளைக் குறைத்திட வேண்டும். அதுவே உண்மை அன்பு நெறியில் நடப்பவர்க்கு இலக்கணம்.

'அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை'.
கலி-*133*

## இயேசு சொன்னது

உலகுக்கு இயேசுபெருமான் வந்தார். ஏன்? முதல் உடன் படிக்கையை - அவ் உடன்படிக்கையில் எடுத்துக் கூறப்பட்டுள்ள சமய ஆசிரியநிலை, கழுவாய் தேடுதல், பாதுகாப்பு, தன்மறுப்பு, சட்டம் ஆகியவற்றுடன் நிறைவேற்றிடவே. அதே நேரத்தில், பாதுகாத்து அருளல் என்பதனைவிட முழுநிறைவு மீட்டருளலை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய உடன்படிக்கையை அதுவும், ஒரு புதிய படைப்பு - சமயக் குருநிலையும் தன் இழப்பும் மற்றும் சட்டத்தினையும் கொண்ட உடன்படிக்கையை நிறுவிடவே உலகுக்கு வந்தார் என்பதே உகந்ததும் பொருத்த மானதும் ஆகும்.

யோவான் *13:34-35* "நீங்கள் ஒருவரில் ஒருவர் அன்பா யிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல, நீங்களும் ஒருவரில் ஒருவராக அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்"

"நீங்கள் ஒருவரில் ஒருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதனால் நீங்கள் என்னுடைய தொண்டர்கள் என்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள்" என்றார்.

இந்தத் திருமறைச் சொற்றொடரில் "அகாபா" (Agapa) என்றொரு புதிய சொல்லைக் கூறுகிறார் இயேசு. "அகாபா" என்றால் 'அன்பு' அல்லது 'அருளிரக்கம்' என்று பொருள்

சொல்லப்படுகிறது. அந்தச் சொல் இயேசு அளித்த புதிய கட்டளையின் தனி ஆணையின் கீழ் வாழ்தலாகிய புதிய படைப்பு எனும் மெய்ப் பொருளியலை அறிமுகப்படுத்துகின்றார். அவர்தம் உலகில் ஆற்றுவதற்கான பாடுபணிகளை ஆற்றியதன் அடிப் படையிலும் மேலோங்கி நிற்கும் புதிய கட்டளையைக் கொடுக் கிறார் இயேசு.

"அவர்கள் என் கட்டளைகளின்படி நடந்து, என் அறமுறைகளைக் கைக் கொண்டு, அவற்றின்படி செய்ய, நான் அவர்களுக்கு என் நெஞ்சத்தைத் தந்து அவர்கள் உள்ளத்தில் புதிய ஆவியைக் கொடுத்துக், கல்லான நெஞ்சத்தை அவர்கள் தசை யிலிருந்து எடுத்துப் போட்டு, சதையான நெஞ்சத்தை அவர் களுக்கு அருளுவேன்"

இவ்வாறு இயேசு அருளிச் செய்த மொழியிலிருந்து என்ன தெரிகிறது?

"நான் ஒரு நெஞ்சத்தைத் தருவேன்" என்னும் அச் சொற் றொடர், அப்படி இயேசுவால் அருளப் பெறுகின்ற நெஞ்சம் அல்லது நெஞ்சங்கள் அனைத்தும் அன்பினால் ஆளப்பெறுபவை என்பதாகும். அடுத்து, "என்னுள் ஓங்கும் புதிய ஆவியை உங்களுள் நிரப்புவேன்" என்பதனை விளக்கமாகப் பார்த்தோ மானால், இயல்பான மாந்தர், அதுவரை இருந்துவரும் உள்ளுரை இயல் மெய்ம்மை கொண்டு இலங்கும் மாந்தர், இனி திரும்பவும் இறைவனின் இயல்பான அருள் வாழ்வினைத் தொடர்பு கொண்ட படைப்பாகப் பெற வேண்டும் என்று புரிந்து கொள்ள முடிகிறது.

இயேசு மறுபடியும் சொல்லுகிறார் : கல்லான நெஞ்சத்தைத் தசையிலிருந்து எடுத்துப் போட்டுச் சதையான நெஞ்சத்தை அருளுவேன்"

இப்படி அருளப் பெற்றவர் புதிய உடன்படிக்கையின்பாற் பட்ட மனிதர்.

புதிய பிறப்பால், புதிய உடன்படிக்கையை எய்துகிறார்கள். பழைய உடன்படிக்கை, யூதர்களை வேலையாள்களாக ஆக்கின.

புதிய உடன்படிக்கையோ மாந்தரைப் பிள்ளைகளாக்குகிறது.

இப்படித் தூய ஆவியானவரின் தருக்கம் எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதேயாம்.

விளங்கச் சொல்ல வேண்டுமானால் ஊனால் ஆகிய உடம்பிலிருந்து சற்றேனும் எடுத்துக் கொள்வதில்லை. ஆனால் நம் உடலிலுள்ள ஐம்பொறிப் புலன்களை அவித்து அருளுகிறார் என்பதாம். அப்படியென்றால், நாம் நம் ஊன் உடலின் - உணர்வுகளில் இயக்கங்களிலிருந்து வானுரை வல்லாளனின் ஆவியால் ஆளப்படும் நிலைக்கு உயர்த்தப்படுகிறோம் என்றே பொருள் கொள்ள வேண்டும்.

மாந்தன் படைக்கப்பட்டபோது அவனைத் தூய ஆவியே ஆட்கொண்டது. ஆனால் தீமை செய்யத் தொடங்கியபின் ஊன் உடம்பு அவனது தூய ஆவியாம் தெய்விகத்தை தன் அடிக்கீழ் கொணர்ந்துவிட்டது. உடம்பில் ஊன் உணர்வை அகற்றி விடுவதாக இயேசு சொல்லுகிறார்.

தூய ஆவியினால் நமக்குப் புலன்கள் கொண்டு விளக்கிடுவதாவது: ஒரு மாந்தன் மீண்டும் புதிதாகப் படைக்கப்படும் போது அம் மாந்தனின் ஊனுடம்பு அதன் ஆளுமையை இழந்து விடுகிறது.

இதை மற்றொரு வகையில் விளக்க வேண்டும் என்றால், ஆதாமின் ஊன் உடம்பு மேம்பட்ட நிலையினை எய்தியிருப்பினும் இறுதியில் ஊனுடம்பின் ஆளுமையே மேலோங்கியது, ஆதாமை வீழ்ச்சி பெற வைத்தது.

ஆனால் புதிய - படைப்பில் தூய ஆவியானது, கிறித்துவின் மூலமாக ஊனுடம்பையும் அதன் உணர்வுகளையும் வென்று மேலாட்சி செய்கிறது.

முதல் உடன்படிக்கையின்படி மாந்தன் ஏன் இறைவனை விரும்பவில்லை, தன் அயலானை விரும்பவில்லை, அன்பு கூர்ந்திடவில்லை என்றால் மாந்தனின் நெஞ்சம் தன்னலம் மிக்கதாகவும் ஆவியினால் இறப்பினை எய்திட வேண்டியதாலும் தான்.

மாந்தன் தான் கொண்ட அன்பு 'பீலியோ' (Phileo) ஆகும். பீலியோ என்னும் அன்பு, தன்னலத்தைக் கொண்டதாகும். இயேசுவானவர் அன்பினைக் குறித்துச் சொன்னபோது என்ன எண்ணி எடுத்து உரைத்தார் என்பதனை அறிய முற்படுவோம். என்றால், "நான் உங்களுக்குப் புதிய கட்டளை இடுகிறேன். அதனை ஏற்றுக் கொண்டு அதன்படி உங்களில் ஒருவர்

மற்றொருவரை விரும்புங்கள், அன்பு கூருங்கள், நான் உங்களில் அன்பு கூர்ந்து போலே'' என்பது புரியும்.

எளிய மாந்தன் ஒருவன் மற்றொருவனை விரும்பவோ அன்பு கூர்ந்திடவோ இயலாது; புதிதாகப் படைக்கப்பட்டிருப் பதால் மட்டுமே இயலும்.

பொதுவாக உலகிலுள்ள மாந்தர் தம்மைக் கண்டு அவர்களிடம் ''உங்களில் ஒருவரை ஒருவர் அன்பு கூருங்கள்; விரும்புங்கள் என்றெல்லாம் சொல்வது வீண் முயற்சி; அவர்களால் முடியாது. அவர்களும் கிறித்து இயேசுவில் புதிதாகப் படைக்கப் பட்டவர்களானால் மட்டுமே முடியும்.

யோவான் *12:9-10* ''தந்தை என்னில் அன்பாயிருக்கிறது போல், நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன் என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள்;

''நான் என் தந்தையின் கற்பனைகளைக் கைக் கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறது போல நீங்களும் என்னுடைய கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால் என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்''

''அபைட்'' (Abide) நிலைத்திரு என்னும் சொல் 'மெனோ' (Meno) என்னும் கிரேக்கச் சொல்லில் இருந்து பொருள் கொள்ளப் படுவதாகும். அதாவது கடைப்பிடியுங்கள் (Abide) என்னும் சொல்லிற்கு ஈடாக 'நிலைத்திரு' என்று பொருள்படுவதாயிற்று. அதனால்தான், ''தந்தையின் அன்பில் நான் நிலைத்திருப்பது போல நீங்கள் என்னில் அன்பு கூருங்கள், என் அன்பில் நிலைத்திருங்கள், நான் தந்தையின் அன்பில் நிலைத்திருக்கிறேன். அதுபோல நீங்கள் எனது அன்பில் நிலைத்திருங்கள்'' என்று இயேசு சொல்லி அருளினார்.

இதனைச் சற்று வேறுவிதமாகப் பொருள் கொண்டால், இயேசு சொன்ன ஒரு புதுவகையான அன்பு, ஒரு புத்துலகைப் - புதிய அருட்பேற்றுலகையே படைத்தளித்தது எனலாம்.

ஆம், இயேசு சொல்லி விளங்க வைத்தது அத்தகு தெய்விகப் பேரன்புப் பேருலகில் நாம் சென்றடைதல் வேண்டும்; வாழ்தல் வேண்டும். என்றென்றும் நீங்காத நிலை மக்களாக அன்பெனும் அருளுலகை விட்டு அகலாத குடிமக்களாக ஆங்கே வாழ்ந்துய்ய வேண்டும்.

அன்பின் அரவணைப்பில் இருக்கும் எவராலும் எவர்க்கும் எப்போதும் எந்தத் தீங்கும் விளைவதில்லை.

அன்பு என்னும் அருளுலகை விடுத்து அகல்பவர்கள் தீங்கு என்னும் பொல்லாத உலகில் புகல் அடைகிறார்கள் என்பது உறுதி.

அன்பினை நாம் கடைப்பிடித்தாலும் அன்பு நம்மில் நின்று நிலவினாலும் நம்முடைய அன்பு தனிப்பெரும் அழகுடன் திகழ்கிறது, மிகு கவர்ச்சி ஏற்று விளங்குகிறது.

1 யோவான் 4:16 உரை அதனை நன்கு புரிந்து கொள்ள உதவும் :

"நமக்குத் தெரியும் என்பதோடு நம்மைப் பொறுத்தமட்டில் கடவுள் நம்மீது கொண்டுள்ள அன்பினைக் கொண்டுள்ளார் என்னும் நம்பிக்கை கொண்டுள்ளோம். கடவுள் அன்பாக இருக்கிறார்; எவர் ஒருவர் அன்பினைக் கைக் கொள்ளுகிறரோ அவருடைய அன்பில் நிலைத்திருக்கிறாரோ அவர் கடவுட் பற்றிலும் நிலைத்து நிற்கிறார்!" என்பதனை நாம் அறிந்து கொள்ள வேண்டும். நெஞ்சில் நிறுத்த வேண்டும்.

அன்றாட வாழ்வில், வாழ்க்கையின் மற்றெந்தச் சட்ட திட்டங்களைவிட அன்பில் மட்டும் பெரும் பற்றினை வைத்திட வேண்டும் என்ற மெய்ம்மையியல்பினை நாம் அறிந்துள்ளோம். மனச்சான்றுப்படி நாம் அன்பென்னும் பெருவெளியில் வாழ் கிறோம்; அன்புப் பெருவெளியில் நயத்தக்க நாகரிக மாந்தர் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமோ அவ்வாறு நடந்து கொள்கிறோம். அதனால்தான் நாம், அன்புப் பெருவெளியில் அன்புப் பிள்ளைகளாக அன்பு மக்கள் என்னும் ஒரு பெரிய இடத்தைப் பெற்றிருக்கிறோம் என்று பெருமிதப்படலாம்.

இவற்றினால் எல்லாம் நாம் உணர்த்தப்பட்டது, நாம் எல்லாம் அன்பு என்னும் மொழியினைக் கற்றுக் கொள்ள வேண்டும். அன்பின் எழுதாத சட்டத்திட்ட முறை - ஒழுங்கான முறைமை. அன்பென்னும் அந்த அற்புத உலகினை அரசோச்சும் செங்கோன்மையை அறிந்து தேர்ந்து தெளிந்து விளங்க வேண்டும் என்பதே.

அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு - குறள்-75

## அன்பில் இருவகை என்பதில் வேறுபடுகிறார் இயேசு

இயேசு கிறித்து உயிர்த்தெழுந்த பின்பு ஓர் அழகான காட்சி இன்னும் நமது நினைவில் பசுமையாக நிழலாடுகிறது.

கவ்வும் கடுங்குளிர் மிக்க காலைப்பொழுது, இரவு முழுவதும் கடலில் நெடுந்தொலை சென்று வலை வீசியும் மீனேதும் வலைக் குள் அகப்படவில்லை - இயேசுவின் சீடர்களான மீனவர்களுக்கு.

கடும்பசியும் கடுங்குளிரும் அவர்களை வீணில் வலைவீசிக் கொண்டிருப்பதை விடுத்துக் கரைக்குத் திரும்ப வைத்தது. கரையருகே வரும்போது கரை மேல் ஒருவர் தீமூட்டி ஏதோ சமைத்துக் கொண்டிருப்பதைக் கண்டனர்.

அவர்களை நோக்கி "பிள்ளைகளே புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா?" என்றார்.

அதற்கு அவர்கள், "ஒன்றுமில்லை" என்றார்கள். அப் பொழுது அவர், "நீங்கள் படகுக்கு வலது புறமாக வலையைப் போடுங்கள் உங்களுக்கு அகப்படும்" என்றார்.

அப்படியே அவர்கள் வலையைப் போட்டுத் திரளான மீன்கள் அகப்பட்டதனால், அதை இழுக்க மாட்டாதிருந்தார்கள்.

ஆதலால் இயேசுவுக்கு அன்பாயிருந்த தொண்டனான யோவான், இயேசுவைப் பார்த்து, "அவர் கடவுள்' என்றான்.

'அவர் கடவுள்' என்று சீமோன் கேட்டவுடனே, தான் ஆடையில்லாதவனாக இருந்தபடியால், தன் மேற்சட்டையைக் கட்டிக் கொண்டு கடலில் குதித்தான். கரைக்கு வந்தான். மற்றவர்களும் படகிலிருந்து கொண்டே மீன்கள் உள்ள வலையை இழுத்துக் கொண்டு கரைக்கு வந்தார்கள்.

அவர்கள் கரையிலே வந்து இறங்கினபோது கரி நெருப்பு போட்டிருப்பதையும் அதன்மேல் மீன் வைத்திருப்பதையும் அப்பத்தையும் கண்டார்கள்.

இதுபோன்ற அரிய காட்சிகளுடன் அக் காட்சிகளைப் படைத்த இயேசுவும் நம் நினைவில் கொண்டு பார்க்கலாம். அந்த ஆவல் நமக்கு உண்டெனினும் அதையே திரும்பத் திரும்பப் பார்ப்பதினால் நாம் அடையப் போகும் பயன் ஏதும் இல்லை.

ஆனால் நாம் மேற்கண்ட காட்சியினை நினைவுத் திரையிலிட்டுக் கண்டதனைச் சற்றே ஆய்ந்து பார்த்தால் ஓர் உண்மை விளங்கும்.

இயேசு இவ் உலகத்தைத் தம் திருவருள்மொழியால் ஆண்டுகொண்டார். தமது அளப்பரும் துயரங்களால் - பாடுகளால், உலகில் தாம் ஆற்றிட வேண்டிய அத்துணைப் பணிகளையும் ஆற்றிய பின்பு, வானுலகில் மாட்சிமை மிகும் கடவுளின் வலது பக்கத்தில் அமர்ந்திருக்க வேண்டிய இயேசு, ஒருகணம் அந்த மேநிலையை விடுத்து, உலகில் தம் தொண்டர்களாக விளங்கிய மீனவர்கள் கடுங்குளிரினையும் கடும் பசியினையும் போக்கிட அந்தக் காலைப்பொழுதில் அவர்களுக்கு உணவு சமைத்துக் கொண்டிருந்தார் என்றால் என்னவென்பது?

அவர் உலகில், அன்று ஆங்கே தோன்றி அவர்களுக்காக உணவு சமைத்துப் படைத்திட்டது ஏன் என்பதை ஆராய்ந்தால் நமக்கு ஒன்று புலனாகும். புலனாக வைக்கிறார் இயேசு. அன்பு, அறம் (Love-charity) என்னும் இருவேறு சொற்களும் ஒன்றுபோல் தோன்றினாலும் வெவ்வேறு பொருள் கொண்டது என்பதனை நமக்கு அறிவுறுத்தவே; தம் மன்பதை அன்புப்பணியின் வாயிலாக விளக்கிடவே, இயேசு அக் காலைப் பொழுதில் கடுங்குளிரில் தொண்டர்களான மீனவர்களுடைய கடும்பசியைப் போக்கிட அவ்வாறு சமைத்துக் கொண்டிருந்தார் , உணவு படைத்தார்.

அவர்கள் இயேசு படைத்த அப்பத்தையும் மீனையும் உண்டபின்பு, இயேசு, சீமோன் பேதுருவை நோக்கி, "யோனாவின் குமாரரானகிய சீமோனே! இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாக இருக்கிறாயா? என்றார். அதற்கு அவன், "ஆம் ஆண்டவரே! உம்மை அன்புடன் விரும்புகிறேன் என்பதை நீர் அறிவீர்" என்றான். அவன் மொழியில் 'விரும்புகிறேன்' என்பதற்குப் "பிலீயோ' (Phileo) எனும் சொல்லினைப் பயன் படுத்தினான்.

இரண்டாம் முறையாக அவர், அவனை நோக்கி, "யோனாவின் குமரானாகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா? என்றார்.

'அன்பு' (Phileo) என்னும் சொல்லுக்கு மாறாக 'அகாபா' (Agapa) என்னும் சொல்லைப் பயன்படுத்துகிறார்.

அதற்கு பீட்டர் ஆகிய சீமோன் "ஆம்! ஆண்டவரே! உம்மை - அன்புடன் விரும்புகிறேன் என்பதை நீர் அறிவீர்" என்றான். இப்போதும் சீமோன் முதலில் சொன்ன சொல்லாகிய "பிலீயோ" (Phileo) என்னும் சொல்லினைப் பயன்படுத்தினான்.

மூன்றாம் முறையாக, இயேசு அவனை நோக்கி "யோனா வின் குமரானாகிய சீமோனோ, நீ என்னை விரும்புகிறாயா? என்றார். இம்முறை மட்டும் இயேசு சீமோன் சொல்லிய பீலியோ என்னும் சொல்லைப் பயன்டுத்தினார்.

இரண்டு முறை 'அகபா' என்னும் புதிய சொல்லைப் பயன் படுத்தினார் இயேசு.

பேதுரு, துக்கப்பட்டான், "ஆண்டவரே! நீர் எல்லா வற்றையும் அறிந்திருக்கிறீர்; நான் உம்மை அன்புடன் விரும்பு கிறேன் என்பதையும் நீர் அறிவீர்" என்றான்.

இயேசு பயன்படுத்திய இரு சொல்லையும் தொண்டர்கள் அறிந்திருந்தனர். ஆயினும், "ஏன்? ஆண்டவரே" அன்புடன் விரும்புகிறாயா? என்னும் சொல்லுக்கு இருமுறை அன்பு என்னும் சொல்லுக்கு 'அகபா' என்னும் சொல்லினையும் மூன்றாவது முறை மட்டும் அன்பு என்னும் சொல்லுக்கு பிலீயோ (Phileo) என்று பீட்டர் பயன்படுத்திய சொல்லையே பயன்படுத்தினீர்?" என்று கேட்கவில்லை.

ஆனால் இருவேறு சொற்களுக்கும் (பிலியோ) அன்பு என்னும் சொல்லுக்கும் (அகபா) அறம், அருளிரக்கம் என்னும் சொல்லுக்கும் கிட்டதட்ட ஒரே பொருள் இருப்பினும் இரு சொல்லும் ஒன்றுக்கு மற்றொன்று வேறு பொருள் தருவதாகும் என்பதனைத் தொண்டர்கள் அறியார். ஆனால் இயேசு நமக்கு அவ் இரு சொல்லினையும் வேறுபடுத்திக் காட்டுகிறார்! எப்படி? இயற்கையாக மாந்தருக்கு இருக்கும் அன்பினையும், அவர் உயிர்த்தெழுந்து தொண்டர்களுக்கும் மற்றவர்களுக்கும் காட்சி தந்த பின்பு, இயேசு கொண்ட அன்பினையும் ஒப்பிட்டுப் பார்த்திட முடியும் என்பதனை. 'அன்பு' என்பது இரக்கத்தோடு நின்று விடாமல் மேற்கொண்டு சென்று 'ஈகை'யாகவும் விளங்குவதுதான் அன்பின் பொருள் விளங்கும் என்று விளக்காமல் விளக்கி யிருக்கிறார்.

பங்கமில் செய்கைய ராகிப்பரிந்து யார்க்கும்
அன்புடையர் ஆதல் இனிது - குறள் 9

## இயேசுவிடம் விளங்கிய அன்பு

நம்மில் ஓங்கும் அன்பின் அளவினைப் பொறுத்துத்தான் நம் சமூகத்தில் நமக்குள்ள இடமும் மதிப்பும். இந்த நிலையில் நாம் நமது அன்பினைப் பற்றிய மதிப்பீடு செய்யும் எண்ணம் நமக்கு இல்லாமலே இருந்திருக்கிறோம்.

இன்றைய நிலையில் சமுதாயத்தில் மதிக்கப்படுகின்ற ஒருவர், அவருடைய செல்வம் அல்லது அரசியல் செல்வாக்கின் நிலையைப் பொறுத்துத்தான் மதிக்கப்படுகிறது. அதுவும் ஒருவருடைய செல்வம் - அரசியல் செல்வாக்கினைப் பொறுத்தே, அவரை மதிக்கப்படும் அளவும் இருக்கும் என்கிற சிக்கலும் இல்லாமல் இல்லை. கடைசியாக ஆய்ந்து பார்க்கும்போது, செல்வம் உள்ளவர்களோ அரசியல் செல்வாக்கு உள்ளவர்களோ பெறும் மதிப்பு, வெறும் மதிப்பு, வீண் மதிப்பு, பயன் விளையா மதிப்பு. ஆனால் மாந்தருள் எவர் மற்றவரை அன்புடன் நேசிக்கின்றாரோ அந்த மாந்தர்தாம் சமுதாயத்திற்கு உதவிபுரிந்து வருபவராக மதித்துப் போற்றப் படுகின்றனர்.

எல்லாம் வல்ல கடவுளின் உள்ளொலி கேட்டு, அதன்படி மன்னுயிர்க்கு அன்பு செய்து வாழும் பொருட்டுத்தான் அன்பின் வழி மாந்தர் படைக்கப் பெற்றனர்.

அன்புக்குப் புறம்பே உள்ளவர் எத்தகையவராயினும், அவர்கள் வாழ்வில் எத்தகைய வெற்றியும் பெறாதவர்கள் என்றே உறுதியாகச் சொல்லலாம்

தன்னலம் என்பது மாந்தனை அழிக்கும் பழிப்புக்கேடு. மாந்தரின் தன்னலத்தைத் துடைத்தெறிகிறது அன்பு.

மாந்தர் வாழும் இல்லத்தையும், இல்லறம் ஓங்கும் அவ் இல்லத்தை விளங்க வைக்கும் திருச்சபையினையும் அழிவு ஏற்படாவண்ணம் பேணிக் காக்கிறது அன்பு.

அன்புடையவர், துருப்பிடிக்காத எஃகினைப் போன்றவர். எஃகின் பெரும்பகுதி துருபிடித்தே தேய்ந்தழிந்து போகிறது என்பது நமக்குத் தெரியும். அதே போன்று இந்திய நாட்டிலும் வேறுநாடுகளிலும் பெரும்பான்மை மக்களின் வாழ்வறம் - இல்லற வாழ்வோங்கும் இல்லங்கள் எல்லாம் தன்னலத்தாலேயே அழிந்து போகின்றன. இருவர்க்கிடையே நடைபெற வேண்டிய திருமணம் கூட நடைபெறாமல், சீர்குலைந்து போவதற்கும் தன்னலமே காரணம்.

இல்லற வாழ்க்கையில் ஒற்றுமையின்றிப் பிளவு ஏற்பட்டுத் தனித் தனியே பிரிந்து சென்று வருவதும் கண்கூடு. என்ன காரணம்? கணவனின் தன்னலம். அதனால் மனைவியும் அத் தன்னலத்தையே கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படு கிறது. அதே சூழ் நிலையில்தான் அந்தக் குடும்பத்தில் பிறக்கின்ற குழந்தைகளும் வளர்கின்றன. வளர்ந்த பின் அவர்கள் வாழ்க்கை யும் வாழ்வகை வாய்ப்புக் கூறுகள் அற்றும் இடை யூறுகள் நிறைந்ததுமாகவே அமைகிறது.

ஓயாத சண்டையும் உள்ளக் கசப்பும் உடைய வீடுகளில் பிறந்து தவழ்ந்து வளர்ந்துவரும் குழந்தைகளைவிட 'ஏலாதவர் பேணகம்' எனப்படும் சின்னஞ் சிறார் காப்பிடங்களில் வளர்ந்து வரும் குழந்தைகளே நல்லமுறையில் நல்ல சூழ்நிலையில் வளர்ந்து வருகின்றனர் என்பது நாம் அறிந்த உண்மையாகும்.

எழுபத்தைந்து விழுக்காட்டிற்கு மேலாகச் சிறுவர்களும் சிறுமிகளும் இளம் குற்றவாளிகளாக எண்ணப்படுபவர்கள் எல்லாம், சிதைந்துபோன - சீர்குலைந்து போன குடும்பங்களிலே இருந்து வெளியேறியவர்கள்தாம் என்பது குறிப்பிடத்தக்கது.

குற்றவாளிகளைத் திருத்தி அறநெறிப்படுத்தும் காப்பகங் களில் உள்ள இளைய தலைமுறை எனப்படும் இளம் வயது ஆண்கள் - பெண்களைப் பெற்றோர் அவர்களை ஈன்றெடுத்த போதும், அவர்கள் பின்னர் வளர்ந்துவரும் போதும், கையோடு கை சேர்த்தும் கோர்த்தும் புதிய அன்புடன் நடந்திருப்பார்களா என்று எண்ண இடமே இல்லை.

'அன்பு' என்பது நம்மை ஒன்று சேர்த்து வைக்கவல்ல தெய்விகப் பிணைப்பாற்றல் ஆகும்.

## இல்லறம் ஓங்கும் நம் இல்லத்தை ஓங்கச் செய்வது அன்பு

நாகரிக முதிர்ச்சி பெற்ற - முற்பட்ட காலத்திற்குரிய மொழிகளில் 'இல்லம்' என்னும் சொல் எங்கேனும் கையாளப் பட்டுள்ளதா என்று நீங்கள் அறிந்திருப்பீர்களேயானால் அஃது ஓர் அற்புதமே.

தூய (Bible) திருமறையில் எபிரேய (Hebrew) மொழியிலிருந்து 'இல்லம்' என்னும் சொல்லினை மொழி பெயர்த்திருக்கிறோம். "Home" எனும் சொல் எபிரேய மொழியில் 'வீடு, கூடாரம், வாழும் இடம்' என்று பொருள்படும். அந்த வீடு அல்லது கூடாரம்

என்பதில் ஒருவர் ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று மனைவியருடன் வாழும் இடம் என்றே பொருள்படும். அத்தகு வாழும் இடத்தைக் கூடாரத்தை வீடு என்று வழங்குவதால் அது பொருத்தம் இல்லை என்று கருதி, 'இல்லம்' என்று சிறந்த பொருளைக் கொண்டதாக மொழி பெயர்க்கப் பெற்றது. புதிய ஏற்பாட்டில் கூட, கிரேக்கத்திலிருந்த வீடு எனும் பொருள்படும் சொல்லினை மாற்றி (Home) 'இல்லம்' என்றே மொழி பெயர்க்கப் பெற்றுள்ளது.

கிறித்துவ வாழ்வியலின்படி 'இல்லம்' என்றால் ஒருவன் ஒருவளோடு நிலைபேறு இறைவனின் இயற்கைப் பண்பினைப் பெற்றுக் கொண்டவராய், இன்புற இணக்கமாக வாழும் இடம் என்றே பொருள் கொள்ளப்படுகிறது.

கணவன் மனைவியாக வாழும் ஆணும் பெண்ணும் தம் வாழ்வில், நிலை பேறான தெய்வப் பேற்றைப் பெற்று வாழ்வார் ஆவார்! அப்படி வாழும் ஆணோ, பெண்ணோ திருமண முறிவை (Divorce) ஒருபோதும் விரும்பார், கேளார், ஏலார்!

அதுபோல நிலைபேறு வாழ்க்கை பெற்ற கணவன் மனைவியானவர் அன்பில் தொடர்ந்து தங்கள் வாழ்க்கை நெறியில் நடப்பவராக இருப்பாரே அன்றி, இருவரிடையே மனமுறிவு ஏற்பட்டு அதனுள் திருமண முறிவு கேட்டு அறமன்றங்களுக்குச் சென்றிடும் எவரையும் நாம் அமெரிக்கா கனடா போன்ற நாடுகளிலே கூட கண்டிட இயலாது.

உண்மையில் இஃது ஒரு தடுமாற்றம் அல்லவா? திருமணத் திற்கோ திருமணத்தின் நிறைவேற்றமான இல்லற வாழ்விற்கோ ஒரு தீர்வு உண்டு என்பது ஒரு கண்கூடாகத் தெரியவில்லையா?

தன்னலம் என்பது பிரிவினை உண்டாக்குவது. அன்பு என்பது ஒன்று சேர வைப்பது.

புதிய அன்பின் மெய்ம்மையை உலகுக்கு இயேசு அறிமுகம் செய்தார் - கொணர்ந்தார்; அதனை அவர்தம் வாழ்க்கையின் மூலம் செயல்படுத்தினார். அதுவும் புதிய திருச்சபை தோன்றிய போதே தோற்றுவிக்கப் பெற்றது. அந்த அன்பின் வெளிப்பாடுதான் ஒவ்வோர் இல்லத்திலும் - ஒவ்வொருவருவர் இல்வாழ்க்கையிலும் ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்க உதவும் பெரும் உத்தியாகும்; உதவும் கருவியாகும்.

மீண்டும் பிறப்பெடுக்கப் பெற்ற மாந்தருள் விளங்கும் ஆவி - அன்பின் கனியாகும்.

எதற்கெடுத்தாலும் ஏன்? எதற்கு? என்று வினாக்கள் கேட்டு ஆராய்ந்து பார்க்கும் பகுத்தறிவின் விளைவுகளிலிருந்து தோன்று வதில்லை அன்பு வாழ்க்கை.

அன்பு வாழ்க்கையைப், பகுத்தறிவு ஒருபோதும் தோற்று விக்காது. தூய ஆவியிலிருந்து பிறப்பது - அன்பு.

உரோமன் 5 : 5-ஐ நினைவு கூர்வோமாக "நமக்கு அருளப் பட்ட தூய ஆவியினாலே, தேவ அன்பு, நம்முடைய நெஞ்சங் களில் ஊற்றப்பட்டிருக்கிறது".

'நெஞ்ம்' (Heart) என்னும் சொல் 'ஆவி' (Spirit) என்றும் கொள்ளப்படுகிறது. இவ் இரு சொற்களும் இணையானவை. மாற்றுச் சொற்கள்.

மீண்டும் புதிதாகத் தூய ஆவியினால் - நாம் பிறந்த பின்பு, நம்முடைய நுரையிரல்களின் காற்றைக் கொண்டு மூச்சு உட் கொள்வதும் வெளியிடுவதும் போன்றே இயேசுவின் அன்பு வாழ்க்கை தோய்ந்த நம் ஆவியில், நாம் உயிர் மூச்சுப் பெறுகிறோம்.

அளப்பரிது அன்பு; அதாவது அருளாளரின் அன்பே அன்பானது; அளப்பரிது. அவ் அன்பு கடவுளின் அன்பு. நம்மில் அவ் அன்பு இறைவனின் தெய்விகத்தை அதன் இயல்பினைக் கொண்டுள்ளது. அவ் அன்பு எல்லோரிடத்தும் எல்லா உயிர் களிடத்தும் போய்ப் பரவிட வேண்டுமாயின், பரவிடத்தக்க வகையில் பல்கிப் பெருகிடச் செய்வோமாயின், யார் எவர் என்று எண்ணாமல், எல்லோருக்கும் எல்லா உயிர்க்கும் உதவி செய்ய நமக்கு அவ் அன்பே உதவுகிறது.

நாள்தோறும் நாம் ஒரு பயிற்சியினை மேற்கொள்ள வேண்டும். அப் பயிற்சி, நாம் காலையில் விழித்தெழும்போதே, விழிப்புணர்வு பெற்றிடும் போதே, "என்னுள் கடவுள் வந்துறை கிறது இன்று" என்று எண்ணுவதுதான்! அக் கடவுள், என் பணிகளை நான் செவ்வனே செய்து முடிக்க, எளிதாக முடித்துவிட, அருள் செய்யும் 'மாபேராற்றல் உடையது; எல்லாம் வல்லது; ஆகவே கடவுள் என்னுள் இருந்து என்னை ஊக்குவித்து எண்ணமாயினும் சொல்லாயினும் செயலாயினும் அனைத்தினை

யும் அன்பின் வழியாகவே செய்து முடித்திட அருள்கிறது. எவ் வகையிலும் எத்தகைய கண்டம் வந்தாலும், அந்தத் திரும்பு கட்டத்தில் என்னைத் தன்னந்தனியே கைவிடாமல், அங்கே என்னைத் தடுத்து ஆட்கொள்ளும்; என் பணியில் வெற்றி பெற்றிட அருளும் என்று உறுதியாக எண்ணுவது தான் அப் பயிற்சி.

தன் வாழ்வின் தளிர்க் கைகளைக், கொடிமுந்திரி கிளைகளின் மேல் தாவிப் பற்றிடச் செய்கிறதோ அதுபோன்று நாம் நமது நெஞ்சங்களைத் தூய்மையுடன் திறந்து வைத்தால் கடவுள் தன்னுடைய அன்பினை வார்த்திடும் என்பது உறுதி.

அறிவுக்கு வரையறை - ஓர் எல்லை உண்டு! ஆனால் அன்புக்கு இல்லை! அன்பினால் நெஞ்சம் சிலிர்க்கிறது; புளகாங்கித உணர்ச்சி பெருகிடச் செய்கிறது. இந்த அளவில் அன்பினை நாம் உணர்ந்தோம் என்றால், வாழ்க்கை என்பது மேன்மையானதாக உண்மையானதாக இயல் கடந்த புதுமைக் காவியமாக ஆகும்.

எனவே ஒவ்வொரு நாளும், நாம் விழித்தெழும்போதே, விழிப்புணர்வு பெற்றபோதே "இன்று நான் நடக்கவிருப்பது அன்புப் பாதையில், இன்று நான் எதற்கும் அஞ்சப் போவதில்லை; எல்லாம் வல்ல இறையின் ஆற்றல் - பேறு எனக்கு வாய்த்துள்ளது, இன்று அவ் இறையின் இயல்பு என்னில் பொங்கிப் பெருகுகிறது, அவ் இறை காட்டிய கனிந்தருளிய அன்பு வாழ்க்கையை நான் கைக் கொள்கிறேன்" என்று எண்ணவும் பின்பு எண்ணியபடி நடக்கவும் வேண்டும்.

எந்த நல்ல செயலிலும் காணப்படுவன தெய்விகம், அன்பு. நல்ல செயல் இன்றேல் அன்பின் செயல் இல்லை, அன்பு இல்லை! அதனால்தான், அன்பினை இறை, திருக்குமரானான இயேசுவிடம் அளித்தார். தம்மில் நிறைந்த இறை அன்பினால் இயேசு அருட்பணி ஆற்றினார். மன்னுயிர்களிடம் அன்பு கூர்ந்து, அவ் அன்பினால் அனைவரையும் ஆட்கொள்ளும் அற்புதப் பணிகள் ஆற்றினார்.

அப்படிப்பட்ட அன்பினை நம்மில் நிறைந்திட - பொங்கி வழிந்திடச் செய்யும் நாள் எந்நாளோ, அந்நாள் நம் வாழ்க்கையில் ஒரு மேலான நாள் ஆகும். நாமாகத் திருப்பி நம்மில் பாய்ச்சிடத் தக்க வெள்ளமாகப் பெருக்கெடுத்து அன்பு எங்கேனும் ஓடுகிறதா என்ன? இல்லை; ஒருக்காலும் இல்லை; எங்கணும் இல்லை. கடவுள் நம் நெஞ்சத்தில் அன்பினைப் பொழியுமாறு நாம் நடந்து

கொள்ளவேண்டும். அப்படி நடந்து, இறையின் திருவருள் அன்பென நம்முள் பெருக்கெடுத்திடுமேயானால் அத்தகு அன்பிற்கு வரையும் இல்லை; எல்லையும் இல்லை; அடைக்கும் தாழும் இல்லை. அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்?

அன்பின் வெளிப்பாடு - அருள் இரக்கம் 2 தெசலோனி 1:3 "உடன்பிறந்தோரே! நாங்கள் எப்பொழுதும் உங்களுக்காகக் கடவுளைப் போற்றிப் புகழ்கிறோம். உங்கள் பற்றார்வம் மிகவும் பெருகுகிறபடியினாலும், நீங்கள் எல்லோரும் ஒருவரில் ஒருவர் வைத்திருக்கின்ற அன்பு மிகுகின்றபடியினாலும் அப்படிச் செய்கிறது தகுதியாயிருக்கிறது"

அன்பு உடன் பிறப்புகளே! சற்றே எண்ணிப் பாருங்கள்! நம்மில் ஒருவர்க்கொருவர் கொள்ளும் அன்பு மாண்பானது. அம் மாண்புறும் அன்பால்தான், திருச்சபையில் நமக்கென்றொரு மேம் பாட்டு நிலையினை - இன்னும் சொல்லப் போனால் வல்லமை யையே ஈட்டுகிறோம் என்பது எண்ணி எண்ணிப் பெருமைப்படத் தக்க ஒன்று.

கள்ளம் கபடம் கலக்கம் இவைமூன்றும்
எள்ளளவும் இல்லதே அன்பு.

## அன்பு என்ன செய்யும் ?

எனக்குத் தெரிந்த ஒருவர், ஒருநாள் காலை, அன்பினைப் பற்றிய ஒலிப்பரப்பு நிகழ்ச்சியினை வானொலியின் பக்கத்தில் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்தார். கேட்டுவிட்டு, "வானொலியில் சொல்லப்பட்டது போன்ற அன்புடன் நானும் எனது அலுவலகத்தில் நடந்து கொண்டேன் என்றால் என்ன ஆகும் தெரியுமா?" என்று தன் மனைவியிடம் கேட்டார் அவர்.

"நீங்கள் செவியுற்ற அந்த வகையான அன்பினைத்தான் பின்பற்றிப் பாருங்களேன்" என்றார் அவரின் மனைவி!

"அன்போடு ஒழுகுவதிலோ பழகுவதிலோ முற்பட்டால் அதற்கான துணிவும் இருக்க வேண்டும். துணிவுக்கே எதிரான - கோழையான நான் அன்பு வழி நடந்தால் பிறகு என் நிலை?" என்று உரைத்தார் கணவர்.

உடனே அவரது மனைவி 1 யோவான் 4 : 18 "அன்பிலே அச்சமில்லை; முழு அன்பு அச்சத்தைப் புறம்பே தள்ளும்" என்று மேற்கொள் காட்டினார்.

உண்மைதான், அறிவேன், எனக்காக நாள்தோறும் வேண்டுதல் செய்து வந்தால், நான் அன்பினைக் கடவுளிடமிருந்து பெறுகின்ற நல்வாய்ப்புப் பெறுவேன்! உணர்கிறேன் - உலகிலேயே அன்புதான் மகத்தான ஒன்று என்று தன் மனைவியிடம் சொன்னார் கணவர் - வானொலியைக் கேட்டு விட்டு உரையாடியவர்.

சில நாள்கள் கழிந்தன; ஒரு நாள், தன் கணவனைப் பார்த்து " அத்தான்! நீங்கள் சொன்னபடியே அன்பு நெறியில் அன்பாக அதுவும் இயேசு ஆண்டவரிடம் இருந்த அன்பினைப் போன்றே மன்னுயிர் அன்பினில் உங்களை ஈடுபடுத்திக் கொண்டீரா?" என்று பணிவுடன் கேட்டாள்.

"சொல்ல மறந்தேனே! எனக்காக நீ செய்த தொழுகை வீண்போகவில்லை. என்னை முழுக்க முழுக்க அன்புள்ளவனாக மாற்றிவிட்டது உன் வேண்டுதல். உன் வேண்டுதல் கேட்கப் பட்டது. என் உள்ளமும் அதில் சேர்க்கப்பட்டது. இயேசு தமது அன்பினை என் நெஞ்சத்தில் பொழிந்தார். நான் அன்போடு நடக்கிறேன். அதற்கு எடுத்துக்காட்டாக, என் அலுவலகத்தில் இருப்பவர் ஒருவர், 'உங்களில் ஏதோ ஒரு மாற்றத்தைக் காண்கிறேன். உங்களின் அகம்புறம் இரண்டும் முன்போலன்றி, அன்பின் வெளிப்பாடாகத் தெரிகிறதே!' என்று கேட்டார். இது கேட்டுத் திகைத்துப் போனேன்" என்றார் தன் மனைவியிடம்.

இப்போது அந்த மனிதர் உள்ளபடியே இயேசு காட்டிய அன்பினில் திகழ்ந்தார்.

உண்மைதான். அன்பு, அலுவலகத்தில் உள்ளவரையும் மாற்றும், இல்லத்தையும் மாற்றும்; முன்னேற்றும். நம் வாழ்க்கையினையும் அன்புப் பணியில் சேர்க்கும்; நல்வழியில் நாட்டும் என்பது முற்றிலும் **உண்மை**.

மெய்ப்பொருளான கடவுள், இயேசுவில் அன்பாக இருந்தது போன்று இயேசு நம்மில் அன்பாக இருப்பதனையும் கடவுள், இயேசுவில் அன்பாக இருந்தது போன்றே நம்மிலும் அன்பாக இருப்பதனையும் சற்றே நமது உள்ளம் நினைவு கூர்ந்திடும் போதும், நம் உள்ளத்தில் அன்பு பெருக்கெடுத்திடும் போதும், நமது வாழ்க்கைதான் எத்தனை இனிதாகிறது!

யோவான் 17:23 "என்னை நீர் அனுப்பினதையும் நீர் என்னில் அன்பாயிருக்கிறது போல அவர்களிலும் அன்பாயிருக் கிறதையும் உலகம் அறியும் படிக்கும் நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக் கொள்கிறேன்".

எந்தை கடவுள், இயேசுவை அன்புடன் விரும்பியது போல நம்மையும் அன்பாக விரும்புவாரேயானால் அவர் நம்மை ஒரு போதும் கைவிடார்! குழந்தையை ஈன்றெடுத்த தாய் இமை கொட்டாது காப்பாது போல, நம்மையும் அந்த எல்லையற்ற அறிவு படைத்த இறை காத்திடும் என்பதைச் சிந்தையில் கொள்ள வேண்டும்.

"எந்தையே! நீவிர் என்னைக் கனிந்த அன்புடன் விரும்பு வதற்காக என்றென்றும் செய்ந்நன்றியுடன் இருப்பேன். எங்குச் சென்றிடினும் எதனை எண்ணிடினும் எதைச் செய்திடினும் பேசிடினும் நீவிரும் நின் மைந்தரான இயேசுவும் என்னை அன்பாக விரும்புவது போலவே எல்லோரையும் அன்பாக விரும்புவேன்" என்று நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து சொல்வோமாக.

கிறித்தவர் திருமறை நூலை நாம் நன்கு படித்துணர்ந்தால் தெரியும் ஒரு வியப்பதிர்ச்சி ஊட்டும் செய்தி.

கிரேக்க மொழியில் (Doulos) 'தௌலசு' என்னும் சொல்லுக்கு ஆங்கிலத்தில் (Servant) 'ஊழியக்காரன்' என்று பொருள் சொல்லப் பட்டிருக்கிறது. இந்தச் சொல்லாக்கத்தை, எந்த மொழிப் பெயர்ப் பாளரும் 'ஓர் ஊழியக்காரன்' அல்லது 'ஒரு குடும்பத்தின் அடிமை' என்னும் பொருளில் மொழிபெயர்க்கப்பட்டதனை மேலோட்ட மாகக் கூட சரி என்று இசைந்து ஏற்றுக் கொண்டு நிறைவு பெறமாட்டார்.

அதற்கு என்ன காரணம் என்றால், திருமறை அச் சொல்லுக்கு வேறு பொருளைச் சொல்கிறது - "இயேசு கிறித்துவின் அன்புப் பணியாற்றும் மிகச் சிறியன்" "இயேசு கிறித்துவின் நெறியில் பணி செய்யும் அன்பு இளையன்" இன்னும் சொல்லப்போனால் "இயேசுவின் அன்புக்கு அடிமை" என்றே சொல்கிறது.

திருத்தூதர் பவுலின் கூற்றுப்படி, "கடையன்", "மிகச் சிறியன்", "அன்புக்கு அடிமை", "அன்படியன்" என்று பொருள்

கொள்ளப்படுகிறது. இந்தச் சொல் தூய பவுலுக்கு மிக பிடித்தமான விருப்பமான - அடை மொழிப்பெயர் - புனைபெயர், சிறப்புப் பெயர், பண்புப் பெயர் ஆகும். ஏனெனில் இயேசுவின் அன்புக்கு, பவுல், அடிமையாகிவிட்டார். ஆகவே, 'இயேசுவின் அன்புக்கு அடிமை' என்பதிலே காண்கின்ற - பெறுகின்ற - அடைகின்ற இனிமை - பெருமை அளப்பரிது என்று அறியக் கிடக்கிறது.

ஊழியக்காரர்களையும் ஏன் பிள்ளைகளையும் கூட எப் போதும் நம்பிக்கைக்குரியவராக எண்ணிவிட முடியாது. ஆனால் அன்புக்கு அடிமையாகிவிட்ட ஒருவரை எப்போதும் எந்த அளவுக்கும் நம்பிடலாம் - நம்பிக்கைக்குரியவராகக் கொள்ளலாம்.

இப்படிப்பட்ட கருத்தில்-உண்மையில் அறைகூவல் நம்மை - நம் உள்ளத்தைக் கூவி அழைப்பதாகக் கொண்டு நாம், இயேசு கிறித்துவுக்கு - இயேசுவின் அன்புக்கு அடிமையாகிவிடலாம்.

“என் ஆண்டவரே! என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்; தாங்கள் வகுத்தளித்துக் காட்டிய புதுவகையான அன்புக்கு என்னை அடிமையாக்கிக் கொள்ளுங்கள்” என்றெல்லாம் நாம் நம் குரலால் வேண்டுவதைவிட, நாமே நம்மை இயேசு கிறித்துவின் அன்புக்கு அடிமையாகிவிடச் செய்யும் அளவிற்கு, இயேசுவின் புதுவகை யான அன்பு என்னை ஆட்கொண்டு விட்டது.

“எத்தகைய ஈகம் ஆயினும் மனம் உவந்து செய்யவும், எத்தகு வன்முறை நிலவும் இடமாயினும் அங்கே சென்று பணி யாற்றவும் நான் என்னைப் பக்குவப்படுத்திக் கொண்டேன்; உமது அன்பு என்னைத் தூண்டுகிறது; என்னை ஊக்குவிக்கிறது - எதற்காக?

ஒப்பில்லாததாக இருந்த அதன் உயர் பண்பை இழந்த இன்றைய உலகை - மண்டலத்தை மீட்கும் ஒப்பரும் பணியாற்றும் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத இயேசுவே உம்மோடு என்னையும் இணைத்துக் கொண்டு பணியாற்றுவதற்காக உம்மை வேண்டு கிறேன்” என்று இயேசுவை நோக்கி உளமார வேண்டுதல் செய்யும் முன்னதாக, இயேசுவின் அன்பு நம்மைக் கவர்ந்து விட்டது, அவர் அன்புக்கு நம்மை அடிமையாக்கிவிட்டது.

அன்புடையார் எல்லாம் உடையார், அருளிரக்கம்
ஒன்றுடையார் கண்ணே உலகு.

## அன்புக் கட்டாயம்

"கிறித்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது" என்னும் 2 கொரிந்தியர் 5 : 14 உரையில் ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த சிந்தனை உள்ளடங்கியுள்ளது. அதனையே வேமௌத்து என்பார். "கிறித்துவினுடைய அன்பு நம்மை மேலாதிக்கம் செய்கிறது" என்று மொழி பெயர்த்துள்ளார்.

தூய பவுல் பற்றி ஒருவர் இப்படி குறிப்பிடுகிறார்; "அவரையும் அறியாமல், கிறித்துவின் அன்புக்கு ஆட்பட்டார், தூய பவுல்"

அப்படிக் குறிப்பிட்டது சரியானதுதான் என்பது போன்று "இயேசுவினுடைய அன்பினைப் போன்றே புதிய அன்பு என்னை அறியாமலேயே என்னை ஆட்கொண்டது; ஓர் உணர்ச்சியில் ஆழ்த்தியது; என்னை, அவ் அன்பு ஏன் வாழ்வில் என்னை மேம்பாடு அடையச் செய்திருக்கிறது" இவ்வாறு ஓர் சான்றினைக் காட்டுகிறார்.

இத்தகு மறைமொழியான சொற்றொடர்களை எல்லாம் நாம் படிக்கும்போது, இதுவரை கண்டறியாத புதுவகையான அன்பினைக் கைகொள்ள எண்ணினாலே போதுமானது. முன்பு தூய பவுலை ஆட்கொண்டது போன்று நம்மையும் இயேசுவின் தெய்விக அன்பு ஆட்கொள்ளும்; இறைவனால் விரும்பப்பட்ட அன்பர்களைப்போலே நாமும் இறையன்பு கொண்டு எல்லா உயிர்களையும் விரும்புபவர்கள் ஆவோம்.

மானிடப் பிறவி எடுத்த எவரும் வாழ்வில் அஞ்சிட வேண்டியவை எத்தனையோ உள்ளன. ஆனால் இயேசுவில் வெளிப்பட்ட மன்னுயிர்க்கன்பு செய்யும் - இயேசுவின் அன்பிற்கு ஆட்பட்டவர்கள் எவருக்கும் என்றும் அஞ்சிடத் தேவையில்லை. ஆம் இயேசுவின் அன்பினைக் கைகொள்ளப் பெற்றவர்கள் யார் எவர் எனினும் அவர்கள் அஞ்சத்தக்க உலகில் உள்ள பேய்மைகள் அனைத்தையும் விரட்டியடிக்கப்படும். மேலும் இயேசுவின் அன்பு ஒருவகையில் நம்மை இயேசு போல் இணக்க வணக்க நடையுடையவராக-கனிவுள்ளவராக மாற்றி உயர்த்தும்; மற்றொரு வகையில் வெற்றி பெற்றவர்களாக்கும்.

நாம் கொண்ட அன்பு, நம் மூலமாக எல்லாரிடத்தும் எல்லா வுயிர்களிடத்தும் பரவிடத் தக்கது என்பதை அறிய வேண்டுதல்

நலம். திருமறையிலிருந்து நாம் கற்ற - மேற்சொன்ன மெய்ம்மை, நம் அறிவுக்கு ஒளி சேர்க்கும்.

*பிலிப்பி 1:9.* "உங்கள் அன்பனாது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமாய்ப் பெருக வேண்டும்.......". என்னும் உரையும் ; அதே போன்று

பேதுரு *4:8* "எல்லாவற்றுக்கும் மேலாக ஒருவரில் ஒருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்"

மேற்சொல்லப்பட்ட மெய் மொழிகளில் உள்ள 'ஊக்கமான' (Fervent) என்னும் சொல், உண்மையில் சொல்லப்போனால், 'சுடர்விட்டு ஒளிர்கிற அளவுக்கு வெப்பம்" (White-Heated) அல்லது "இரும்பினைப் பற்ற வைத்திடப் பற்றவைக்கும் இரும்பு பழுக்கக் காய்ச்சப்பட்ட நிலை அளவு வெப்பம்" என்று பொருள்படும். அதுபோன்று நமது அன்பும் பழுக்கக் காய்ச்சிய இரும்புத் துண்டம் போன்று நெஞ்சத்தில் அன்பு கனிந்து, நெகிழ்ந்து ஒளி வீசும் அளவினை, நிலையினை அடையுமேயானால் கிறித்துவத் திருச்சபைத் திருக்கூட்டம் தனித்தனி என்பது மாறி ஒட்டு மொத்தமாக ஒன்றோடு ஒன்று கலந்து இணைந்து ஒரே அவையாகும் அன்றோ!

கொல்லர், ஒளியில் உலோகத்தைச் சுடர்விடும் வரை பழுக்கக் காய்ச்சுகிறார். பற்ற வைத்திடவேண்டியவற்றின் இரு முனைகளையும் பொருத்திப் பழுக்கக் காய்ச்சிய உலோகத் துண்டினை வைத்துப் பற்ற வைப்பதைக் காண்கிறோம். அதுபோல, நெஞ்சம் அன்பினில் கனிந்து உருகி, நெகிழ்ந்திடு மேயானால், அவை வெவ்வேறு என்பது மாறி ஒரே திருச்சபை - ஒன்றுப்பட்ட திருச்சபை - அழகான திருச்சபை ஆகுமே. மூன்றாக இலங்கும் மும்மையும் ஒருமையாகி அருள் தந்தையாக நின்று நிலை பெறுவதனை எண்ணிப் பார்க்க வேண்டாமா?

தூயவற்றிலெல்லாம் தூயதான கூடாரத்தை எப்படிப் பட்டவர்களுக்காக எவ்வாறு அமைய வேண்டும் என்பதை, எந்தை கடவுள் அமைத்துத் தந்ததனை நாம் நினைவு கூர்ந்து பார்த்தால் தெரியும். அதுபோல, இயேசு கிறித்து இன்று நமது திருச்சபை ஒன்றுபட்ட திருச்சபையாக வேண்டும் என்று அதற்கான முறையினை வகுத்தளித்திருக்கிறார். என்ன முறை அது? அனைத்துத் திருச்சபைகளை ஒருசேர வைப்பது; ஒன்றாக்குவது

"நானும் எந்தையும் ஒருவரே என்பது போல, நீங்கள் அனைவரும் ஒன்று சேர வேண்டும். ஒருவரே என்றாக வேண்டும் என்பது தான் அந்த அமைப்புமுறை - வகை வடிவம்; திட்டம்.

எப்படி ஒன்று சேர்வது? ஒன்றாவது என்றால் அதற்குத்தான் இயேசு காட்டிய அன்பினைப் போன்ற அன்பு இருக்கிறது.

நம் மனத்தின்கண் அன்பு வந்துள்ள கணமே, நம் உயிர் சுடர் விட்டொளிர்கிறது. நம்பிக்கையின் முழுமை - மொத்தம் நம்முள் நிரப்பப்டுவதை உணர்ந்திடலாம்.

இறைப் பற்றார்வத்திற்காகவும் ஆன்மிக வலிமைக்காகவும் நாம் வேண்டிய முறைகளும் நாள்களும் எண்ணற்றவை. ஆனால் மேற் சொல்லப்பட்ட ஒரே ஒரு மெய்மொழியைக் கடைப் பிடித்தால் இயேசுவில் நாம் கொள்ள வேண்டிய பற்றார்வமும் ஆன்மிக வலிமையும் ஒரு கணத்தில் நம்மை வந்தடைந்தாகக் கொள்ளலாம். அப்படிக் கொண்டால், நம்மில் இயேசு பற்றிய அன்பார்வமும் தெய்விக ஆற்றலும் வந்து நிரம்பி வழியும். அந்த நிறைவினை நாம் அடைந்தோம் என்றுணர்ந்திட, நம்மில் கடவுள் உறைகிறார் என்னும் உறுதியும் நம்பிக்கையும் கொண்டிருக்கிறோம்.

எங்கே உலகம் இரண்டற்று உழல்கிறதோ<br>
அங்குளதாம் அன்பின் உயிர்ப்பு.

## அன்பில் நிலைத்தோங்குதல்

நீங்கள் இது போன்ற அழகிய அருள் மொழிகளைச் சிந்தித்துப் பார்க்க முடியுமா என்று படித்துப் பாருங்கள்.

*1* தெசலோனி *3:11:13.* "நம்முடைய தந்தையாகிய தேவனும் நம்முடைய மீட்பரான இயேசு கிறித்துவும் உங்களிடத்திற்கு எங்களை நேராக வழி நடத்துவாராக."

"நாங்கள் உங்களிடத்தில் வைத்திருக்கிற அன்புக்கொப்பாய், நீங்களும் ஒருவரிடத்தில் ஒருவர் வைக்கும் அன்பிலும் மற்றெல்லா மாந்தரிடத்தில் வைக்கும் அன்பிலும் மீட்பர் உங்களைப் பெருகவும் நிலைத்தோங்கவும் செய்து,

இவ்விதமாய் நம்முடைய மீட்பராகிய இயேசு கிறித்து நமது தூயவர்கள் அனைவரோடுங்கூட வரும்போது, நீங்கள் நம்முடைய

தந்தையாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற தூய்மை யுள்ளவர்களாகியிருக்கும்படி உங்கள் நெஞ்சங்களை உறுதிப் படுத்துவீராக''.

'நற்செய்திப் பணியின் அன்பொளி பற்றிப் படர வேண்டும்; கிறித்துவ சமய நெறியில் அன்புக் கனல் பரவவேண்டும். இல்லையென்றால் திருச்சபையில் அன்பொளி இருக்காது. அன்பொளியற்ற திருச்சபையில் கிறித்துவ சமய நெறி கண்ணுக்குப் புலப்படாது; நற்செய்தியின் ஒளி ஒலிக்காட்சி தென்படாது.

நம்முடைய தந்தையாகிய தேவன், ஒருவர் மற்றொருவரில் அன்புகூர்ந்திட விழைகிறார். மற்ற எல்லாருடனும் அன்பாக இருக்க வேண்டும் என்று விழைகிறார். ஏன்? எதற்காக? இயேசு கிறித்து வருகை தருகிறபோது நம் நெஞ்சங்கள் அன்பில் நிலைத்தோங்கி இருக்க வேண்டும் என்னும் நோக்கத்தில்!

அன்பில் பெருகுதல் - அல்லது அன்பின் பெருக்கம் என்பது, நம் உடல் வலிமையில் அல்லது அறிவில் பெருக்கம் என்று பொருள். அன்பு நம்மில் பெருகப் பெருக, அளப்பரும் அன்பினை நம்முள் தேக்கி வைக்கிறோம். அதனால் நம்முள் இருக்கும் அன்பினை வெளிப்படுத்தவும், மற்றவர்க்கு நாம் அன்பு செய்யவும் கூடிய நிலை ஏற்படுகிறது.

மானிடர் தம்முள் இருப்பவற்றினுள் அன்பு ஒன்றுமட்டும் தான் என்றென்றைக்கும் முதுமை எய்துவதில்லை. தளர்ந்து சோர்ந்து வீழ்வதும் இல்லை.

மாந்தர் தம் ஆவியைப் போன்று அன்பும் அழியாத ஒன்று. உலக வாழ்வியல் தோல்விகளை எல்லாம் விட்டு, உயிர்த்தெழுந்த இயேசு கிறித்துவின் அருட்பேரரசில் சென்றடைந்து அதன் மூலம் தந்தையுடன் இரண்டறக் கலந்து ஒன்றானதில் ஒரு பெரும் பகுதியாக விளங்குவது அன்பு.

புலனறிவுக்கு வேண்டுமானால் குறுக்கை (சிலுவை) என்பது மிகப்பெரும் தோல்வியின் குறியீடாகத் தென்படலாம். ஆனால் உண்மைக் கண்ணோட்டத்தில் காணும்போது, முள்முடி தரித்த இயேசுவின் தலையில் மீண்டும் அதே முள் முடியாக இல்லாமல் 'அன்பு' என்னும் மணி மகுடத்தை 'உயிர்தெழுதல்' எனும் வெற்றி சூட்டியது. அத்தகு உயிர்த்தெழுதலுக்கு வழிகாட்டி அழைத்துச் சென்ற குறுக்கை (சிலுவை) அதுவாகக் காட்சி தருகிறது.

மெலிந்து உதவி செய்வார் அற்றுக் குலைந்த இயேசு கிறித்துவுக்குக் கொடியவர்கள் முள்ளால் ஆன முடியைச் சூட்டினார்கள். ஆனால் உயிர்த்தெழுந்த இயேசு கிறித்துவுக்கு திருப்பெருந்தந்தை 'இறையொளி மாட்சி' எனும் மகுடம் சூட்டி மகிழ்ந்தார். அந்த இறைஒளி மாட்சி எனும் மகுடம் இயேசு கிறித்துவால் மீட்கப்பட்ட எண்ணற்றவர்களின் அன்பினால் செய்யப் பெற்றதாகும்.

எதை வேண்டி நாம் ஏங்கிக் கடவுளிடம் எதிர்பார்க்கிறோமா அதனை எய்திடச் செய்யும், அன்பு.

அன்பு நெறியினில் தொடர்ந்து நடந்தால், வாழ்வில் தோல்வி என்பது இல்லை. வெற்றியே பெறுவோம்.

அன்பின் நிழலில் அனைத்துலகும் இன்பின்
அருள் ஒளியில் ஓங்கும் இணைந்து.

## உள்ளத்தில் உறையும் கடவுள்

அன்பு வழி ஒன்றே சிறந்த வழி என்று நாம் அறிந்து கொண்டுள்ளோம். அவ் அன்பினை நாம் நம்புகிறோம்.

வன்கண்மை, கட்டாயப்படுத்தல், வற்புறுத்தல் போன்ற வற்றால் ஆகாததை அன்பினால் பெற்றிடலாம்; தருக்கத்தால் - வல்லடிப் பேச்சினால் வென்றிட முடியாததை அன்பினால் வென்றிடலாம்; பணத்தால், செல்வாக்கால் பெற முடியாதவற்றை அன்பினால் பெற்றிடலாம்; முறை மன்றமாம் நீதிமன்றம் சென்றிடு வதைச் - சென்று வெற்றி பெறுவதை அன்பினால் வெற்றி கொள்ளலாம். ஆக, அன்பு என்பது, வன்கண்மை, வாதம், பணம், முறைமன்றம் ஆகியவற்றினும் நன்மை பயப்பதும் மேன்மை யானதுமாக விளங்குவது என்று நாம் நம்பிடலாம். நம்ப வேண்டும்; நம்புகிறோம்.

நல்லதைத் தேடிக் கற்பதற்கும் கடைப்பிடிப்பதற்கும் எது எது கடினம் என்று கருதுகிறார்களோ அவற்றைக் கற்கவும் கடைப்பிடிக்கவும் அன்பெனும் வழியே சிறந்ததாகும். அன்பு நெறியில் நடக்கப் பயின்று நடந்துவருபவர் வாழ்க்கையில் எப்போதும் தவறி - இடறி வீழ்ந்து தோல்வியைக் காண்பதில்லை.

நமக்குத் தொல்லை தரும் அவற்றால் வருத்தம் வரும் போதெல்லாம் கடவுளின் அன்பில் நாம் நம்பிக்கை கொள் வதில்லை. ஆனால் அப்படிப்பட்ட தாங்கொணாத தொல்லை களும், துயரங்களும் அன்பினால் வந்துற்றவை அல்ல என்பதை இப்போது நாம் அறிகிறோம். ஆனால் அவை எங்கிருந்து வந்தன என்ற வினாவுக்கு ஒரே விடை. நம் நெஞ்ச அரியணையில் வீற்றிருக்கும் அன்பினை அப்புறப்படுத்தும் நமது பகைமை நோக்கத்தியிருந்தும் அதன் ஆக்கத்திலிருந்தும் தான்.

நம் மனத்தின்கண் கடவுளை நீங்காது நிலைத்திருக்கச் செய்வது வேண்டும் என்பது ஏன்? நம் வாழ்வின் பல்வேறு துறைகளிலும் அன்பு காண வேண்டும் என்பதற்காகத் தான்! நாம், நம்மில் நம் மாசில்லா மனத்தின் கண் இறைவன் இருக்கின்றார் என்னும் மனச் சான்றினை நாம் பெற்றோம் என்றால் பின்னர், நம்முள் இருக்கும் கடவுளையே நம்பிடலாம். நம்பி வாழ்ந்து - உயர்வு பெறலாம். அதனை, 1 யோவான் 4 : 4 ......“உலகத்தில் இருக்கின்றவனிலும் உங்களில் இருக்கிறவர் பெரியவர்” என்னும் உரையிலிருந்து அறிவோம்.

இயேசுவின் அன்பினைக் கொண்ட நெஞ்சம் கொண்ட நம்மில் ஒரு தூய - துணிவுடைமை இருக்கும். இருக்கிறது - அது, இயேசுவின் அஞ்சுதலற்ற துணிவுடைமை போன்ற துணையுடைமை, நமக்கு என்ன தீங்கு வந்துற்றாலும் அதற்கு நாம் அஞ்சிடத் தேவையில்லை; அது யாதெனினும் அகற்றிட நம்மில் இருக்கும் இயேசு முன் நிற்பார்; முன் நின்று நம்மைத் தடுத்து ஆள்வார். அதோடு அவரது திறம், மன உரம், வலிமை ஆகியவை நம்மில் உள; நம்மில் இயேசுவும் அவரது அன்பும் இருப்பதால்!

அவர்தம் அன்பு, நம்மை, நம் வாழ்க்கைத் தோல்வி எனும் உலகிலிருந்து ‘வெளிக் கொணர்ந்து, ‘வாழ்வின் வெற்றி’ எனும் பேருலகில் விடுகிறது.

நேர்மை என்னும் பரிசினை நாம் இயேசுவின் அன்பின் மூலம் பெற்றிருக்கிறோம்; இரக்கம் எனும் பெருஞ் செல்வத்தைப் பெற்றிருக்கிறோம். எனவே, அன்பு வாழ்க்கை அல்லது அன்பெனும் உலகில் நாம் மன்னர் போல் அரசோச்சலாம்.

ஊழியக்காரராக - அல்லது கொத்தடிடையாகவே நாம் இருக்க வேண்டும் என்று ஒருபோதும் தேவன் கருதியதில்லை. அன்பின்

அடிமையாக இருக்கும் நம்மை வேலைக்காரர் அல்லது அடிமை ஊழியக்காரர் நிலையிலிருந்து தம் குமாரர் ஆகிய இயேசுவைப் போல, பிள்ளை எனும் உறவுப் பேருலகில் விளங்கிடச் செய்கிறார்.

அன்பு, நம்மை நம்மில் இருந்துவரும் தாழ்மை உணர்வு நிலையிலிருந்து விடுவித்து, இயேசு கிறித்துவுடன் ஒன்று பட்டிருக்கும் உணர்வினை அளிக்கிறது. திய உணர்வினால் நம்மில் உறைந்து கிடக்கும் தாழ்வு மனப்பான்மையை அழியப் பெற்று, அந்த நெஞ்சத்தின் அடித்தளத்தில் - அன்பின் பேருணர்வு பிள்ளைமைப் பேருணர்வு இடம் பெற்றிடச் செய்கிறது அன்பு.

அடிமை என்னும் உணர்வு கொண்ட ஒருவர் உள்ளத்தில், பிள்ளைமைப் பற்றார்வ உணர்வின் தன்மையினால் பெறும் மகிழ்ச்சியினை ஒருகாலும் பெற்றிட முடியாது.

இயேசுவின் அன்பைப் பெற்ற நாம், அன்பு வாழ்வும் அதனால் இயேசுவில் ஒன்றியிருப்பதால் நாம் இப்போது ஆண்டைகள், வாழ்க்கையில் வென்று மேம்படும் வெற்றி வீரர்கள்; மேம்பட்டு விஞ்சி நிற்பார்கள்; வாழ்பவர்கள் ஆவோம். இயேசுவின் திறம், இயேசுவின் மெய்யறிவு, இயேசுவின் வலிமை, இயேசுவின் அன்பு, நம்மில் நிறைந்துள்ளது.

இறையருளினால், நாம் உரிமைமிகு மக்கள். நாம் தேவனைப் பின்பற்றுகிறோம். அதனால் தேவன் நம்மில் ஒத்திசைந்து விளங்கு கிறார் என்பதை மனத்தில் ஆழமாகப் பதிப்போம்.

அன்புநெறி ஒன்றே அறநெறி வாழ்வுக்கே
இன்பநெறி ஈதொன்று தான்.

## அன்பும் அறிவமும்

அறிவம் (ஞானம்) என்பது அறிவைப் எப்படி பயன் படுத்துவது என்னும் திறம். நாம் எத்துணை அறிவினைப் பெற்றும் அதனைப் பயன்படுத்திட நமக்குப் போதுமான அறிவும் இல்லை யேல் அனைத்துத் துறையிலும் நாம் காண்பது தோல்வியாகத்தான் இருக்கும்.

கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலுமிருந்தும் பல்வேறு பட்டங்கள் பெற்றிடுவோருள் பெரும்பான்மையான ஆடவர் - மகளிர் அவர்கள் தம் வாழ்க்கையில் காணும் தோல்விக்குக் காரணம்

தான் என்ன? அவர்கள் கற்ற அறிவு நிரம்பப் பெற்ற அளவுக்கு அதனைப் பயன்படுத்தும் அறிவு பெறவில்லை என்பதேயாம்!

கடவுள் அன்பாக இருக்கிறார். அவ் அன்பின் வழி நடந்தால், அறிவத்தின் வழி நடக்கலாம்.

அன்பினால் ஆளப்பட்டோம் என்றால் அதனால் யாருக்கும் ஒரு தீங்கும் இல்லை என்று சொல்லலாம். நீதி மொழிகள் 6:2. "நீ உன் வாய்மொழிகளால் சிக்குண்டால்" இந்த உரை நினைவிருக்கும்.

அன்பு நம்மை ஆளுகின்றது என்பதறிந்திருந்தால், அன்பு நம்மை ஆண்டு கொள்கிறது என்பதறிந்திருந்தால், நமக்கிடையே ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்க மாட்டோம்; நம்மை அன்பே முற்றிலும் தன் வயப்படுத்தியிருக்கிறது என்பதை அறிந்திருந்தால் திருமணம் என்னும் உலக நடைமுறைகளைச் செய்திருக்க மாட்டோம்.

நம்மை அன்புக்கு ஒப்படைத்திருப்போமேயானால் அதுவே நம்மை மேலாட்சி செய்யட்டும் என்று விட்டிருப்போமேயானால், நம் தவறுகளால், நம் வாழ்க்கை பதங்கெட்டுப் பாழ்பட்டுப் போகத் தக்க இடத்தினைப் பெற்றிருக்காது.

கடைசியாக நுணுகி ஆராய்ந்து பார்த்தால், அன்புதான் அறிவம்! மற்றவர்களை இன்பமுறச் செய்ய நாம் கண்டுபிடித்த அனைத்தினையும், ஆராய்ந்து, கண்டு, படைத்திட மாந்தராகிய நமக்குக் காரணமாகக் - கருவியாக இருந்ததே அன்புதான்!

பிறர்நிலை எண்ணிப் பார்க்கிறவராகப் பண்பார்ந்த நடையினராக - மெல்ல அமைதி வாய்ந்தவராகக் - கனிவுள்ளவராக நம்மைச் செய்வது அன்பு!

அன்பில் தோய்ந்தவராக நாம் இருந்தால் நம் பேச்சில் மக்களை வெல்லும் ஏதோ இனம் புரியாத ஒன்று இருப்பது உணரலாம். ஆகவே பேச்சில் மட்டும் மெய்யார்வம் காட்டாமல், அன்பில் தோய்ந்த பேச்சில் மட்டுமே நம் மெய்யார்வம் இருத்தல் வேண்டுவோம்.

மக்களுக்கு ஏதாவது நலம் உதவ முடிவது எப்போது? நாம் மக்களை அன்புடன் விரும்பத் தலைப்பட்டால்தான் உதவி செய்வது எளிதாயிருக்கும்.

சமயவாணரா? நல்லது! அப்படியானால் சமயப் பணியில் வெற்றி பெற வேண்டுமா? அந்த வெற்றி வாயிலில் கதவினைத் திறந்துவிடும் திறவுகோலாக இருப்பது அன்பு.

அன்பினராக - ஆர்வலராக நீ இருப்பதால்தான் மக்கள் உன்னை விரும்புகிறார்கள். அம் மக்களில் ஒவ்வொருவரும் உன்றன் அன்பார்ந்த இன்னுரையினைக் கேட்க விரும்புகிறார்கள். ஆகவேதான் மக்கள் அனைவருமே உன்னிடம் ஓடோடி வருகிறார்கள். உன்னிடம் அவர்கள் அனைவரும் பேசிட விழைகிறார்கள். ஏன்? உன்னால் அவர்கள் விருப்பம் பெற வேண்டும் - உன்றன் அன்புக்குரியவராக வேண்டும் என்பதால்!

ஆகவே, "என்றன் அன்பில் ஆழ்க, தழைக" என்னும் தேவனின் உரையினைப் பின்பற்றுதல் நன்று.

## அன்பு வேட்கை

உயிருள்ள ஒவ்வொன்றும் அன்பினை அவாவுகிறது. அன்பில் வேணவா கொள்கிறது!

என் வாழ்வியக்கத்தின் மூலம் நான் கண்டது, உலகம் முழுமையுமே 'அன்பு வேட்கை' கொண்டுள்ளது என்பதுதான். ஆனால் உலகில் உள்ளோர் தாங்கள் கொண்டிருந்த 'அன்பு' என்னும் சொல் அளவில் கொண்டிருந்த அப் பழைய கற்பனை அன்பினையும் தன்னலத்தையும் கொண்ட வெற்று மானிட அன்பினைக் கொண்டு ஏதாவது மேம்பாடு காண முடியுமா என்று பார்க்கிறார்கள். இரங்கத்தக்க நிலை! என்னே! அவர்கள் சான்றோர்களில் விளங்கிய அன்பினுக்கு எப்படி தங்கள் அன்பினை இசைவாகச் செய்யப் போகிறார்களோ?

இளைஞர்களும் இளம் பெண்களும் ஒருவர்க்கொருவர் காதல் வேட்கை கொள்கின்றனர். தன்னைக் காதலித்த இளைஞரிடம் பெண்ணும், தன்னைக் காதலித்த பெண்ணிடம் இளைஞரும் சென்று மென்தோள் வீழ்கிறார்கள். காதலெனும் உரிமைப் பெரு வெளியில் அவர்கள் பெற்றோராகிய உங்கள் ஒப்புதலின்றி களவியல் மேற்கொண்டு உங்கள் பார்வை விட்டு விலகிச் சென்று விட்டார்களா? அவர்களிடம் அன்பு காட்டுங்கள். அவர்களைத் தூற்றாதீர்கள்; அவர்களைப் பற்றித் திறனாய்வு செய்யாதீர்கள். "அவர்கள் காதல் தொடர்பு - உறவு தீதானது; கெடுதலாது" என்று

சொல்லாதீர்கள். காதல் என்பது நல்லது; நலம் மிக்கது என்று அவர்களுக்கு உணர்த்திடுங்கள். அவர்கள் உறவினைத் தீய செயல் என்று பகராதீர்கள்; அது பாவச் செயலேயானாலும், அந்த தீயதைக் குணமாக்கும் வகையைக் கண்டு எடுத்துக் கூறுங்கள்.

“கடவுள் உங்கள் ஒவ்வொருவரையும் அன்புடன் விரும்பு கிறார். உங்கள்கள் நலனுக்காகவே-தமது ஒரே பேரரான மீட்பரைத் தந்தருளினார்” என்பதை ஆண்கள் பெண்கள் அனைவரிடமும் விளக்கமாகச் சொல்லுங்கள். அன்பின் வெளிப்பாடாக வந்த அன்புத் தெய்வம், இயேசுவின் வரலாற்றை எடுத்து விளக்குங்கள். அதனால் அம் மக்களின் உள்ளங்களை நீங்கள் கவர்ந்து விடு வீர்கள்.

ஏதும் அறியா மக்கள் அன்றன்று வேண்டிய உணவைக் கேட்கிறபோது அவர்களிடம் கல்லினைத் தராதீர்கள்... வாழ்க் கைக்கு உணவாகிற அன்பு என்னும் அமிழ்தினைத் தாருங்கள். - அன்றன்று வேண்டிய உணவுடன். அன்பினைப் பற்றிய ‘தத்துவ’ச் சொற்பொழிவினை ஆற்றிடாதீர்கள். ஏதும் அறிந்திடாத அப் பேதை மக்களிடம் அதுவரை அறிந்திராத பண்பாளரின் அன்பு வரலாற்றை விளக்கிக் காட்டுங்கள்.

> அன்பே அனைத்தின் திறவுகோல், அஃதறிய
> நன்றே புரிவீர் நயந்து.

## அன்பு நோக்குடன் மாந்தரைக் காணுதல்

எந்தை நம் மக்கள் அனைவரையும் மாறாத மெய்ம்மை - பற்றார்வம் என்னும் கண்ணோட்டத்தில் பார்த்தார் என்பதில் உறுதியாக இருக்கிறேன். பற்றார்வம் கொண்டு பார்ப்பது என்பது வேறொன்றுமில்லை, அன்பென்னும் கண்கொண்டு பார்ப்பது என்பதுதான்.

இயேசு கிறித்துவில் காணப் பெற்ற ஈகத்திற்கு மாந்த இனம் கடமைப்பட்டிருக்கிறது.

வாழ்வில் தோல்வி என்பது ஆடிய களியாட்டங்களை வென்று பெற்ற வெற்றியும்; துன்ப துயரங்களே ஆட்சி செய்த இடத்தில் எல்லையற்ற மகிழ்ச்சியும் நிறைந்த நிலைபேறுடைய வாழ்க்கையே வேண்டும் என்று மானுடம் விரும்பும் என்று கடவுள் நம்புகிறார்.

எல்லையற்ற தம் அன்பினுக்கு மாந்த இனம் வேட்கை கொண்டு மெய்யான அன்பு நெறிக்குத் திரும்புவர் என்று எல்லாம்வல்லார் நம்புகிறார். தீயவனாயினும் அவனை மீண்டும் புதிதாகப் படைக்கப் பட்டவனாகக் காண்கிறவர், அவரில் நம்பிக்கைக் கொண்டவரைப் பற்றினரை ஒரு வெற்றியாளனாகக் காண்கிறார். அவன் அன்பு நெறியில் நடந்திடக் காண்கிறார்.

யார் எவரைக் கண்டாலும் வெறும் பொறிபுலன்களைக் கொண்டு பார்க்காமல், கடவுள் எல்லா மனிதரையும் பார்ப்பது போல நெஞ்சக் கண்கொண்டு பார்த்திடல் வேண்டும்.

கடவுளின் அன்புப் பார்வைபட்டு ஏழைகள் செல்வர் ஆகின்றனர். கந்தல் உடுத்தியவர் கவின்மிகு ஆடை உடுத்து கின்றனர்; தன்னலம் மிக்கவர் அன்பு மிக்கவர் ஆகின்றனர்.

நாமும் அப்படி மற்றவரை உயர்த்த வேண்டும் என்றால் நம்மில் இருக்கும் இறைப்பற்று பல்கிப் பெருகி அவ் இறையின் பற்றினைப் பற்றிடல் வேண்டும். அதன் பிறகே நாமும் இல்லார்க்கு உதவிடலாம்.

புலன் உணர்வு கொண்டு காணும் வெற்றுக் கண்ணுடன் பார்த்தோமானால் அந்தக் கண்ணோக்கால் இயேசு பார்த்த அன்புப் பார்வையை நாம் பெறுவது முடியாது. இயேசு அருளார்வம் கொண்டு ஆற்றிய அன்புப் பணியும் நம்மால் ஆற்றிட இயலவே இயலாது.

இயேசுவில் புதிதாகப் படைக்கப்பட்டவர் அன்பு உணர் வுள்ளவராக இருத்தல் வேண்டும். கடந்து சென்ற ஆண்டுகளில் தன்னலம் என்னும் திகைப்பூட்டும் சிக்கல் நிலையில் போராடிக் கொண்டிருந்த நம்மை நல்வழிப்படுத்த இருப்பது அன்பு. நம் வாழ்க்கைப் போராட்டங்களைச் சந்திக்கவும் எதிர்த்துப் போராடி வெற்றி பெறவும் செய்திட வல்லது அன்புதான்.

இதுவரை நாம் விழிப்பற்ற நிலையில்தான் இருந்து வந்தோம். நமக்குள்ள தன்னையறியும் நெஞ்சம் வலுவற்றது, நோயுற்றது. ஆகவே நம்முடைய வாழ்க்கையில் பற்றார்வம் - நம்பிக்கை பற்றுறுதி என்பது இடம் பெறும் என்று எண்ணவே இடம் இல்லை. எப்பொழுது நாம் நம்மைத் தெய்விகப் பேரன்புக்கு ஒப்படைக்கிறமோ அப்பொழுதுதான் தன்னல வலையில் நம்மைப் பிணைக்கக் கூடிய கயிற்றினை அறுத்தெறிய முடியும். நாம் யார்

என்று உணர்த்தக்கூடிய மனச்சான்றும் உள்ளவராக ஆக்கும் - மாற்றும் அன்பு. நினைவுப்படுத்திப் பாருங்கள். நமது அடி மனத்தைத் தொடும் சொற்றொடர் எபே. 2:10. "ஏனெனில், நற்செயல்களைச் செய்வதற்கு நாம் கிறித்து இயேசுவுக்குள் படைக்கப்பட்டுத் தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்.....".

அப்படி என்றால், நாம் கடவுளின் படைப்பு. அதாவது படைப்பு என்பது இறைமை படைத்தளிக்கும் திறன்.

முதலில் படைக்கப் பெற்றதனால் செம்பொருளாகிய கடவுள், மனத்திற்கு இன்பமுறச் செய்தது; அதுவே போதும்; அதனை நாம் அறிவோம்!

அவர் அன்பர்; அன்புடையவர்; அன்பாக இருப்பவர். ஆகையினால்தான் அன்பினால், நம்மைப் படைத்தருளினார். நம்மில் அவர் அன்பினை உள்ளுடம்பாக அமைத்துள்ளார். இயேசுவில் இருந்து வெளிப்பட்ட அன்பு மொழிகள், அன்புச் செயல்கள் அனைத்தினையும் நம்மில் நம் அகவுடம்பாக ஆக்கி அளித்திருக்கிறார்.இதனை ஏற்று உள்ளார்ந்த பற்றுடன் பற்று றுதியுடன் நாம் நடப்போமானால் அதுவே, நம்மின் அகமாக - அங்கமாக ஆகிவிடும்.

கடவுள் நம்மைச் சூழ்நிலை அடிமைகளாகவோ, தீம்புடை யவர்களாகவோ படைக்கவில்லை. உலகின் விளை பயனுக்கு கெல்லாம் அடிபணிய - ஏவல் புரிய நம்மை இயேசு கிறித்துவுக்குள் புதுப் படைப்பாக படைக்கப்படவில்லை. வெற்றி வீரராக இருந்து இயேசுவுடன் சேர்ந்து நம்மை நாம் ஆட்சி புரிதற்கென்றே இயேசுவில் நம்மைப் புதிதாகப் படைத்துள்ளார் - கடவுள்.

நாம், இயேசு விடுத்துச் சென்ற இடத்தில் இருந்து அன்பினில் நடைபோடவும் செயல்படவும்தான் சரியானபடி திட்டமிட் டுள்ளார் தேவன்.

இயேசுவுடன் நாம் இணைந்தால் - இரண்டறக் கலந்தால் அவர் வாழ்ந்த அன்பு வாழ்க்கையே நம் வாழ்க்கையாகிறது. அதன் அழகுதான் என்னே! நம்மில் இயேசு இருந்து கொண்டு நம் மொழி, செயல்களின் மூலம் நம் மேல் அன்பைப் பொழிகிறார்.

திருத்தூதர் நடபடிகள் 1:8ல் குறிப்பிடப்பட்டுள்ள (Power) வலிமை என்னும் சொல் (Dunamis) என்பதைனை (Ability) திறமை என்று பொருள் கொள்ள வேண்டும்.

அனைத்திற்கும் மேற்பட்ட அனைவருக்கும் மேலானவரிட மிருந்து தனித்தொரு வலிமை - திறமை வரப் பெறும் வரையில், செருசலேமில் காத்திருக்குமாறு தம் சீடர்களிடம் இயேசு பணித்தார்.

அவ் வலிமை - திறமை என்பது அன்புதான். அவ் அன்பு தான், உரோமப் பேரரசினை - இயேசுவை குறுக்கையில் அறைந்த சனன்செரீன் (Sanchedrin) சங்கத்தினையும் வென்றது.

அன்பினைக் கடவுளிடமிருந்து வரப் பெற்றோம் என்றால் கடவுளின் திறமும் நம் கை வரப்பெற்றோம் என்று கொள்ள வேண்டும். நாம் கடவுளின் திறமையினால் மிக மேன்மை நிலைக்கு உயர்த்தப் பெற்றுள்ளோம்.

மாந்தருக்குள் ஏதோ ஒன்று வந்தடைந்துள்ளது. என்னது அது? மாந்தனின் அடிமனத்துள் தோல்வியும் தாழ்வு மனப் பான்மையும் தான் அது. ஆனால் அது கல்லி எறியப்பட்டுவிட்டது.

உண்மையில் நாம் நினைப்பதற்கும் வேண்டிக் கொள் வதற்கும் மேலாக, நாம் மிக அதிகமாகச் செயற்படும் அளவுக்கு அன்பு, நமக்கு அருளப் பெற்றுள்ளது. நம்மில் நிறைந்துள்ள அளவுக்கு அன்பின் திறன் நம்மில் செயல்படுகிறது.

அந்தப் பேரன்புக்கு நம் இயலாமையை - வலுவின்மையை ஒப்படைத்துவிடப் போகிறோம். அந்த அன்பின் திறனால் நாம் எடுத்த, காரியம் எதிலும் வெற்றி பெறச் செய்வோம்.

நம்மை எதிர்த்து வரும் அனைத்தையும் எதிர்த்து முறி யடிக்கும் மாபெரும் அன்பு நம்மில் இருக்கிறது. அவ் அன்பே நம்மை இன்று வெற்றி வீரர்களாக்கியுள்ளது.

அச்சத்தாலும், ஐயத்தாலும் நம் வாழ்க்கையில் அலுத்துப் போன நிலையிலிருந்து நம்மை அப்புறப்படுத்தி, எல்லாம் வல்ல கடவுளின் கருணை என்னும் மணமிக்க கவின்மிக்க செம்மலர் தூவிய பாதைக்கு நம்மை வழி நடத்திச் சென்றுள்ளது அன்பு.

எல்லாம் வல்ல கடவுளின் அருளால் இயேசு அன்பால், இறுதியில் நாம் அனைத்திலும் வென்றவர்கள் ஆனோம்; ஆம்! இறுதியில் அனைத்திலும் வெற்றி வீரர்களாகிவிட்டோம்.

## அன்பு நெறியில் நடத்தல்

**அ**ன்பு நெறியில் - நடப்பது என்பதும் கடவுளில் வாழ்வது என்பதும் ஒன்றே.

"என்னைப் பின்பற்றி நடந்தால், என் சொற்கள் உன்னில் இருக்கும் அல்லது அன்பில் நீ வாழ்ந்து வருவாயேயானால் அன்பும் உன்னில் வாழும்? நீ கேட்பது உனக்கு அருளப் பெறும்".

மறைமொழி மேம்பட்டு நிற்கும் எல்லைப் பரப்பில் பற்றார்வம் செயல்படுகிறது. பற்றார்வம் என்பதும் பற்று, நீதி, அன்பு பரவியுள்ள சூழலில் வளரும். உள்ளபடியே அன்பாட்சி நடைபெறுகிறபோது, விஞ்சி நிற்கும் புதிய படைப்பாற்றலாக விளங்குகிறது பற்றுறுதி எனப்படும் அன்பார்வம்.

அன்பு வாழ்க்கையில் இனிப்பானது ஒன்று உண்டு. அதுதான் தோழமை - கூட்டிணைவு - கூட்டிணக்கம்.

ஐயப்பாட்டிற்கு இடமில்லாமல், கடவுளின் அன்புடன் நாம் ஒன்றானோம் - தன்னலமற்ற பாங்கில் நம்மால் ஆன அனைத்தை யும் அளித்திட! கடவுள் அன்போடு நாம் ஒன்றானது நம்மையே வேண்டுமாயினும் மற்றவர் நலனுக்காக வழங்கிட!

பிறரிடமிருந்து வாங்கிடுவதைப் பழக்கமாகக் கொண்டவர் மேலும்மேலும் வாங்கினால் தான் முடியும் என்கிற நிலைக்கு வறுமையில் உழன்றுவிட நேர்கிறது.

தம்மிடம் இருப்பதை மற்றவர்க்கு, ஏதும் அற்றவர்க்கு வழங்குவோம் என்பதை விடுத்து, வாங்கிக் கொள்வதையே நற்பணியின் பரிசாகக் கருதி எப்போதும் கனவுலகில் இருந்து வந்த எண்ணற்ற கிறித்துவ ஊழியம் செய்தவர்கள் - ஊழியத்தின் வாழ்க்கையின் அழகினை நறுமணத்தை இழந்திருக்கிறார்கள் என்பது மிகையன்று! மற்றவர் நலனுக்காக - வாழ்க்கைக்காகத் தன்னையே இழக்கவும் கூடிய இயேசுவின் அன்பினைப் போன்ற அன்புப் பேருலகில் வாழ்ந்து வருவோம் என்றால், தூய ஆவி நம்மை உண்மையினையும் மேன்மையினையும் அறிந்து உணர்ந்து கொள்ள வழி நடத்தும் என்பது நம்பிடற்குரியது.

அன்பினில், நாம் நடந்திடத் தொடங்கினால், இயேசுவின் மொழி - மறை மொழி நம்மில் இருந்து நம்மோடு உரையாடத் தொடங்குகிறது. இயேசுவின் வாய்மொழியில் கடவுள் இருக்கிறார். அதனால் இயேசுவின் திருவாய் மொழிகளை நாம் படிக்கப் படிக்க நம் நெஞ்சத்தில் இன்பமும் மகிழ்ச்சியும் நிரம்புகின்றன. அன்பெனும் பேருலகின்கண் ஒத்திசைந்து நிற்கும்வரை 23வது

பாசுரம் (Pslam)தனைப் புரிந்து கொண்டிருப்பீர்களா என்று கேட்கிறேன்.

மெல்ல அதனைச் சொல்லிப் பாருங்கள் ''கடவுள் என் மேய்ப்பராக இருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்'' எபிரேய மொழியில் "Lord" இறை என்னும் சொல்லுக்கு செகோவா என்று பொருள். 'செகோவா! முக்காலத்தை - நேற்று - இன்று - நாளை என்னும் மூன்று காலத்தையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் சொல்!

செகோவா கடந்த காலத்தவர். நிகழ்கால இன்றைய கடவுள்; வருங்கால - நாளைய கடவுளும் அவரே!

''கடவுள் என் மேய்ப்பர்; நான் தாழ்ச்சியடையேன்'' என்னும் மறைமொழி அவருடைய மொழியை, அன்பென்னும் அற்புத வயல்களில் காணுகின்றோம். அந்த அற்புத அன்பு வயல் களில் 'தெய்வத் தோழமை என்னும் வளமார்ந்த - பசுமையான மேய்ச்சலுக்கு நம்மை வழி நடத்திச் செல்கிறார் நம் மேய்ப்பர்.

தூய ஆவியினை வெளிப்படுத்திக் காட்டும் மொழியாம் ஆதிமொழி, அன்பினை வெளிப்படுத்திக் காட்டும் தன்மையது. அவர் தம்மைக் காணும் பொருட்டு ஆதிமொழியான மறை மொழியில் வெளிப்படுத்தியிருக்கிறார்.

நம் தந்தையாக, அன்பராக, ஆற்றுப்படுத்துவராக, வெற்றி கொள்ளும் ஒருவராக நாம் அவரைக் காண்கிறோம்.

அன்பின் வழியில் நடக்கின்றவர்களின் பின்னால் வாழ்க்கை யில் அடைய வேண்டிய வளர்ச்சி காண வேண்டிய முன்னேற்றம், பெற வேண்டிய உரிமை, கிறித்துவில் நாம் பெற்றிட வேண்டிய தனிச் சலுகைகள் ஆகிய அத்தனையும் அணிவகுத்து வருதலைக் காணலாம்.

அருளாளர் இயேசு நம்முள்ளே இருக்கிறார் - வாழ்கிறார் என்னும் உண்மையை அறிகிறோம்; அதனால் நமக்குள்ளே மாபெரும் இறையாற்றல் திறன் இருப்பதையும் நினைவு கூருகிறோம். அத் திறனைப் பயன்படுத்தும் வகைமுறை நம்மிடம் தான் உள்ளது.

நமது உதடுகளில் தவழும் இயேசுவின் வாய்மொழி - வாய்மை மொழி அனைத்தையும் விஞ்சும் உரிமத்தைக்

கொண்டுள்ளது என்பதையும் நினைத்துப் பார்க்கிறோம். அன்பு வழியில் நடப்பதால், நாம் நமக்கு வந்துறும் நோய்களையும், பல்வேறு சூழ்சிலைகளையும் அடக்கி ஆளும் ஆற்றலர் களாகிறோம். ஆகவே, இயேசு காட்டிய அன்பு எனும் இடத்தை அடைந்து அவர் பேசிய அன்புமொழி பேசி, பேசியபடியே பணியாற்றியும் வருகிறோம்.

என்றும் வாழும் மொழியாகிய மறை மொழியில் விளக்கப் பெறும் இயேசுவின் திறனின் மெய்ம்மை விளக்கம் பெற நம்மை இணைக்கிறது அன்பு.

நம்மிடையே உள்ள பலர் இதனைக் கருத்தில் கொள் வதில்லை. அதனால் ஆதிச் சொல்லான மறை மொழியில், நோயுற்றவர்களைக் குணமாக்கும் ஆற்றல் உள்ளது என்பதை அவர்கள் அறிந்திலர். இறைவனைப் பாடித் துதிச் செய்யும்போதும், வேண்டுதல் - வழிபாடு செய்யும்போதும், திருமொழி எத்துணை வல்லமை பெறுகிறது! அதனை நாம் அறிந்து கொள்ள வேண்டாமா?

இயேசு இயம்பிய மொழியினை ஏற்று அதன்படி நடக்க முடியுமா? நாம் அன்புடன் விரும்பும் ஒருவர் ஒன்றைச் சொன்னால்போதும் உடனே அதனை விரைந்து செய்கிறோமே அதுவும் நம்மையறியாமலேயே! அதைப் போலே, உள்ளபடியே இயேசுவில் அன்பு கொள்ளுங்கள், பிறகு பாருங்கள். உடனே அவருடைய மொழி என்னவோ அதனை நம்மையும் அறியாமல் செய்கின்றோமா இல்லையா என்று பாருங்கள்!

இயேசுவை நம்ப வேண்டும்; அவரில் நம்பிக்கை கொள்ள வேண்டும். அதற்கென்று ஒரு முயற்சி தேவையா? மனம் தேவை! மனம் இல்லாதார் யார்? மனம் உள்ளவர் நம்பினால் என்ன? நம்பிக்கை வையுங்கள்! அன்புள்ளம் நம்பிட முயன்று கொண் டிருக்காது; அன்பார்வம் கொள்ள முயற்சி செய்யாது. அன்பு எனும் சொல்லே பற்றார்வம் கொள் என்றுதான் வலியுறுத்துகிறது. அன்பு நாம் இயேசுவில் கொண்டுள்ள பற்றார்வத்தினை அளவற்ற தாகக்குகிறது.

எல்லாம் வல்ல கடவுளோடு அருளாளர் இயேசு கிறித்து வோடு இரண்டற - ஒன்றாதல் என்ன என்பதைப் பற்றி, இதற்கு முன்னால் தெரிந்திருந்தைவிட இப்போது நன்கு தெரிந்து

கொண்டுள்ளோம். இறையோ இரண்டற அல்லது ஒன்று பட்டிருப்பது என்னும் ஓர் ஒப்பற்ற நிலை; நம்மை மற்றவர் களுக்குப் பயன்படவும் உதவிடவும் உள் நின்று ஊக்கம் தருகிறது என்பது உறுதி.

அன்பு பெறுவதும் கொள்வதும் வாழ்க்கையின்
இன்புறும் பேரின்ப மாம்.

## இறைமைப் பண்பின் படிநிலையில் நாம்

கடவுள் தூய ஆவியாக இருக்கிறார். அந்தத் தூய ஆவி யினால்தான் நாம் உள்ளோம் - தூய ஆவியுடன்தான் இருக் கிறோம். இறைவனின் இயல்பினை - இறைமைத் தன்மையினை நமக்குப் பண்பாளர் கற்றுக் கொடுத்திருக்கிறார். அப்படியானால் இறை இயல்பு என்பது என்ன? இறை இயல்பு அன்புதான்.

அத்தகு அன்பினால் - அன்பினில் வாழ்வதற்கும் அன் பினைப் பற்றி விளக்கிப் பேசிடவும், அன்பாக நடக்கவும் செயல்படவும் நமக்கு எளிதானதுதான்.

ஆனால், சான்றாண்மையில் நாம் எவ்வாறு உயிர்த்திருக் கிறோம் என்பதை மறந்திருப்பதுதான் நமக்கிருக்கும் பெரிய இடையூறு. நாம் எப்படி இருந்தோம் என்பதை நினைக்கிறோம்.

பழைய வாழ்க்கை முறையில் இருந்ததை நினைத்துப் பார்க்கிறோம். நாம் வாழ்க்கையில் கண்ட தோல்விகளைப் - பலவீனங்களை - நமது குறைபாடுகளையெல்லாம் நினைத்துப் பார்க்கிறோம். ஆனால், கடவுள் தம்மை நமக்குத் தெரிவித் திருக்கிறார். தம்மை நமக்குப் பங்களித்திருக்கிறார். அதனால் நம் தோல்விகள் அனைத்தும் புதிய படைப்பினில் நம்மைக் கொணர்ந்து விட்டதால், நம் வாழ்க்கைத் தோல்விகள் யாவும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன என்பதையும் மறந்து விடுகிறோம்.

அதே சமயம் "என்னை வலுப்படுத்தினார் எவரோ அவரில் நான் உள்ளிருந்து அனைத்தையும் செய்திட வல்லேன்" என்று உறுதியாக உரைத்ததனை நினைத்துப் பார்க்கிறோம்.

ஆண்டவராகிய இயேசு கிறித்துவால் நிறைவு செய்ய முடியாத குறைபாடுகள், தகர்த்திட இயலாத தளர்வுகள், தீர்க்க

முடியாத சிக்கல்கள் அறவே இல! அவரால் எதிர்த்து முடியாத இடையூறுகள், குணப்படுத்த முடியாத நோய்களும் இல. அவர்தம் இரக்கம் நம் உணர்வில் ஓங்குகிறது. அவர் தம் அன்பு நம்முடைய அன்பாக இயங்கி வருகிறது.

அருளாளர் இயேசு நம்மில் இருக்கிறார். அவர்தம ஆற்றல் நம்முடன் இருக்கிறது.அவர்தம் இரக்கம் நம் உணர்வில் தங்கி வருகிறது. அவர்தம்மில் நாம் ஒருவராக விளங்கி வருகிறோம்.

## அன்பில் ஒடுங்கி மறைகிறது தன்னலம்

கடவுளின் கையிலிருக்கும் உருக வைக்கும் மட்கலம் போன்றது அன்பு. அந்த மூசைக் கலத்தில்தான் நம் அனைவரையும் ஒருங்கே போட்டு உருக வைக்கிறார்; அவரோடு நம்மை ஒருங்கிணைய வைக்கிறார். அந்த இணைப்புத்தான் அன்பு. அவ் அன்பு ஒன்றுதான் நம்மை எதிர்நோக்கியிருக்கும் எல்லாச் சிக்கல்களுக்கும் காணப்படும் தீர்வு.

''இரு வகை அன்பு'' என்பது பற்றி ஒரு முழுமையான பயிற்சிக்கென்று ஒரு துறையிலிருந்து அது, இரு வகை அன்பினைப் பற்றிய பயிற்சியும் தந்திட முன்வருவோமேயானால், ஒவ்வொரு பல்கலைக் கழகத்தினையும் புரட்சிகரமானதாக்கிவிடும்.

உலகினில், அஃது உயிர்ப்பார்ந்த - மிக இன்றியமையாத ஒன்றாகும். இதுவரை அன்பினைப் பற்றி நாம் அறிந்துள்ளது; சிறிது அளவேயாம்.

இயற்கையில் மாந்தரிடையே உள்ள அன்பு எங்கே கொண்டு போய் விட்டிருக்கிறது என்றால், மன முறிவு - நீதி மன்றங்களுக்குச் சென்றிடும் தேவதையாக வழக்கறிஞர்களின் சொல்லாடல்களில் அல்லற்பட்டு அலைக் கழிக்கப்படும் மானிடப் பந்துகளாகும் நிலைக்கு என்றால் மிகையல்ல. மானிட அன்பின் பேரால் வந்துறும் அழிபாடுகளிலிருந்து, அழிவு மீட்புச் செய்யப் போவது யார்? எப்போது? அந்த நற்காலம் விடிவது எந்நாள்?

ஆன்றவிந்தடங்கிய சான்றோர் அன்பினைப் போன்ற அன்பு நம் நாட்டில் உச்ச உயர்நிலை மேலாண்மையை எய்துமேயானால், நாட்டில் உள்ள வழக்கறிஞர்களில் பெரும்பாலோரை வழக்கறிஞர் தொழிலை விட்டு ஓடோடச் செய்துவிடும்.

ஏராளமான ஆண்களும் பெண்களும் மருத்துவர்களை அணுகி மருத்துவம் பெற வேண்டிய கட்டாயத்திற்கு உட்பட்ட நோய்கள் பலவற்றிற்கும் அடிப்படைக் காரணம், மாந்தர் அன்பின்மையால் ஏற்படும் சினம், அதன் விளைவாக உண்டாகும் நரம்புத் தளர்ச்சியின் சீர்குலைவே ஆகும்.

ஒருவர் பொறாமை கொண்டார் என்றால், அப் பொறாமையே அவரது உடலில் பாயும் அரத்தத்தில் நஞ்சாக மாறும். வயிறு, நெஞ்சு தொடர்பான நோய்களைக் கொண்டு வரும்; அல்லது உடலெங்கும் ஒருவித திடீர் உணர்ச்சி, எழுச்சி உண்டாகி உடல் நலத்தையும் மன நலத்தையும் கெடுக்கும்; அழிக்கும்.

பண்டைய நாள் முதல் இன்று வரை உலகில் போர் மூள்வதின் காரணம் என்ன? அஞ்சத்தக்க வன்மமாம் பகைமை - காழ்ப்புணர்ச்சி மாந்தரிடையே உண்டானதால்தான். அத்தகு வன்மம், பகைமை - காழ்ப்புணர்ச்சி ஏற்பட்டதன் விளைவாகப் போரும் அதன் விளைவாக, மனித இனத்தின் குருதி ஓட்டத் திலேயே கலந்து மானிடப் பண்பினையே நஞ்சாக்கிவிட்டது. அதன் பின் விளைவு என்ன? மானிட ஒழுக்கத்தின் அழிவுக்கேடு உண்டாகிறது.

ஆணாகட்டும் பெண்ணாகட்டும் அவர்கள் நெஞ்சத்திலும் மனத்திலும் வன்மமாம் பகைமை தோன்றிவிட்டால் அவர்களை அதிலிருந்து யாராலும் மீட்கவே முடியாது. அப்படிப்பட்டவர் களின் மனத்தையும் குணமாக்கி நல்லவராகச் செய்திடவும் முடியாது.

யோவான் 1:4:7 "விருப்பத்துக்குரியவர்களே, ஒருவரில் ஒருவர் அன்பாக இருக்கக் கடவோம். ஏனெனில், அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது. அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து அவரை அறிந்திருக்கிறான்"

இந்த மறைமொழியைக் கொண்டேனும் இனி நாம் ஒருவரில் ஒருவர் அன்பு கொள்வோம். அன்புடையவரே ஒருவர் மற்றொரு வரை அறிவர்!

ஓர் ஆணுடனோ, பெண்ணுடனோ நாற்பதாண்டு காலம் பழகிய பின்பும் கூட அவர் குணநலன்களைப் பற்றி, உள்ளக் கிடக்கையைப் பற்றி அறிந்திட நம்மால் இயல்வதில்லை.

உள்ளபடியே அன்புடையவராக இருந்தால், ஒரே ஒருநாள் பழகினும் அவர்கள் உள்ளம், உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெரிந்துவிடும். அவர்களின் நெஞ்சத்தின் ஆழத்தில் உள்ள அத்தனையும் நமக்குத் தெரியக் காட்டிவிடும்.

"அன்புடைய ஒவ்வொருவரும் கடவுளால் பிறப்பிக்கப் பெற்றவர்" நம்மில் இயேசுவின் அன்பின் உண்மைத் தன்மையை நாம் அறிந்தோமா இல்லையா என்பதை ஆயத்தான் அவ்வாறு தேவனால் பிறப்பிக்கப் பெறுகிறோம்.

தேவனால் நாம் பிறப்பிக்கப் பெறாத யாரும் அன்பு செலுத்தாதவர்; அன்புள்ளவர் போல் பாசாங்கு செய்பவர் - போலியாக நடிப்பவர் - நடப்பவர்; அன்பினைப் பெற்றிட முயல்பவரைப் போன்று நடிக்கலாம் - நடக்கலாம் ஆனால் அதன் பின்விளைவு என்ன? வாழ்க்கையில் ஏமாற்றமும் தோல்வியும் தான் காணப்படும். வாழ்வில் வெற்றி ஒருபோதும் கிட்டாது.

## அன்பு உண்மை, மெய்ம்மை வாய்மை!

கிறித்துவின் ஆவி, அன்பின் ஆவி! இயேசு அனைவருக்கும் அன்பர்; அனைவருக்கும் அன்பினர். "ஆயக்காரனிலும் இவன் பெரியவன் என்றும் மத்தேயுவிலும் பெரியவன் என்றும் சொல்லப்பட்ட "சகேயு' (Zacchaeus) என்பவனை அன்புடன் விரும்பினார்; யூதா, யூதாசு, யூதாசு காரியோத்து என்றெல்லாம் அழைக்கப்பெற்ற (Judas) யூதாவை அன்புடன் விரும்பினார். பொந்தியு பிலாத்து (Pontius Pilate) என்பவ்னையும் அன்புடன் விரும்பினார்.

இயேசு நோயாளிகளைக் குணமடையச் செய்தது தம்மைக் கடவுள் என்று மெய்பிக்க அன்று. நோயுற்றவர்களையும் விரும்பினார். மன்பதை மாந்தர் படும் துன்பம் அவருக்கு ஓர் அறைகூவலாக இருந்தது. ஆகவே மன்பதையின் - மாந்த இனத்தின் துன்பங்களைப் போக்கினார்.

குறுக்கையில் இயேசு கிறித்து தம்மை ஒப்புக் கொடுத்து மரித்தது எதற்காக? நம்மை விரும்பியததால் - நம்மில் அன்பு கூர்ந்ததால். நம்மை அன்புடன் நேசித்தார்; நமக்காகவே அவர் தம்மை ஒப்புக் கொடுத்தார்.

உரோமர் *12 : 9* "உங்கள் அன்பு மாயமற்றதாக இருப்பதாக. தீமையை வெறுத்து, நன்மையைப் பற்றிக் கொண்டிருங்கள்"

இதனையே மற்றொரு வகையாகச் சொன்னால் அன்பு என்பது தன்னலம் அற்றதாக இருத்தல் வேண்டும்; ஏனெனில் தன்னலம் என்பது படிற்றொழுக்கமாம் போலி நடிப்பினை உண்டாக்கச் செய்யும்.

அன்புலகில் நுழையத் தடை செய்யப்பட்டது தன்னலம். அன்புலகில் செல்ல வொட்டாமல் தடுத்து நிறுத்தப்படுவது தன்னலம். ஏன்? அன்பினைக் கீழே தள்ளி, அதன் இடத்தில் அமர்ந்து, அன்பின் உயர்வினை, மணிமகுடத்தைத் தட்டிக் கொள்ளத் தோள் தட்டி நிற்பது தன்னலம். தன்னலம் என்பது ஒரு கொள்ளைக்காரன். பழிபாவத்தினை அஞ்சாத கொள்ளைக்காரன்.

தன்னலம் மாந்தரை, பொய்வேடம் இட்டு நடிக்கச் செய்யும். நட்பினை முறிக்கும். இல்லறத்தைச் சீர்குலைக்கும். திரு அரங்கு களைப் பாழ்படுத்தும். அன்பின் கனியை அழிக்கும்.

மாந்தர் தம் வாழ்வில் தன்னலத்தை - அதன் விளைவுகளை அழித்து வெற்றி பெற வைக்க ஒரே ஓர் ஆற்றல்தான் உண்டு. அந்த ஆற்றல், புதிதான, புதுமையான அன்பு ஒன்றே!

இயல்பாக ஓர் ஆண் ஒரு பெண்ணைக் காதலிப்பது - அன்பு செலுத்துவது என்பது எதற்காக? அவன் நெஞ்ச வேட்கையைத் தணிப்பதற்காக! தன் வேட்கையைத் தணித்த பெண்ணுக்கு மகிழ்ச்சி தருவதற்காகவா? இல்லவே இல்லை! தன் ஆவல் தீர்த்துக் கொண்டால் போதும் என்பதுதான் தவிர, அவள் அகம்புறம் இன்புற்றுத் திளைப்பதற்காக அன்று! அவள் இவனுக்குத் தேவைப் படும் போதெல்லாம் இசைந்து வரவில்லையேல் அன்புடன் அடங்கி நடக்கவில்லையேல், தன்னைப் பிடிக்கவில்லை என்று கருதி அவளை அழித்துவிடுவானேயன்றி நான் அவளுக்குப் பொருத்தமானவன் அல்லேன்; வேறு பொருத்தமுள்ள ஒருவருட னேனும் வாழ்ந்து போகட்டும் என்று அப் பெண்ணினைத் துணைவியை விட்டு வைக்கமாட்டான். இத்தகு அன்பைக் கொலைச்செய்யும் இரக்கமற்ற மானிடர்களும் மாந்த வரலாற்றில் இடம் பெற்றிருக்கிறார்கள். இயற்கையான மானிட அன்பு என்பது அசட்டை செய்வது, காழ்ப்பு - பகைமை - பொறாமை கொள்வது மட்டுமல்ல கடைசியாகக் கொலை அளவுக்கும் மாறிவிடுகிறது.

சில திங்களுக்கு முன்பாக, கடலோர நகரங்கள் ஒன்றில் உள்ள அறமன்றம் ஒன்றினில் ஒரு குற்றவாளி கூறினான்:- அறவாணர் அவர்களே! என் மனைவியை உள்ளபடியே அன்புடன்

விரும்பினேன்; தொடர்ந்து அன்புடன் அவளைக் காதலிக்க முடிய வில்லை. அதற்காக அவளைக் கொன்றுவிட்டேன்'' என்றான். எத்துணைக் கொடுமை! அரசியலிலும் இதுதான்.

ஆனால் சான்றோரின் மேலான அன்பு ஒருகாலும் பொறாமை, கசப்பு, வெறுப்புணர்ச்சி, வன்மம், பகைமை இவை அனைத்தையும் கடந்து கொலை செய்தல் என்னும் அளவுக்கு மாறிடும் என்று கற்பனை செய்யக் கூட முடியாத ஒன்றாகும். மானிட வாழ்வில் ஏற்படும் எல்லாச் சிக்கல்களையும் தீர்ப்பது ஒன்றே ஒன்று அன்புதான். வாழ்க்கையின் எந்த ஒரு பகுதியேனும் அன்பினால் ஆகாததென ஒன்றும் கிடையாது.

அன்புமிக்க தொழிலாளி ஒருவன் தன் ஊதியத்திற்கான பணியைவிட மேலும் பணி செய்வான்; அதே போன்று வேலை வாங்கும் முதலாளியும் அன்புள்ளம் கொண்டவராக இருந்தாரே யானால் வேலையைச் செய்து அதற்கான கூலியை - ஊதியத்தைக் கேட்கும்போது, தொழிலாளி கேட்கும் தொகையைவிட அதிக மாகவே கொடுப்பார். அவர்களுக்கிடையே தகராறு ஏதும் இருக்காது. மற்றவர்களைவிடத் தொழிலாளியும் கூடுதலாக வேலை செய்வான்; முதலாளியும் கூடுதலாக ஊதியம் கொடுப்பார். அதுதான் அன்பின்பாற்பட்டவரிடையே காணப்படும் ஒப்பரும் உயர்குணம் - அருஞ்செயல்!

இத்தகு அன்புப் பரிமாற்றம் வாணிக உலகில் பார்க்க முடியுமா? பார்க்கக் கூடாதா? வாணிக உலகிலும் இத்தகு அன்புப் பிணைப்பு, உறவு, தொழிலாளர் - முதலாளர் இடையே இருக்குமே யானால் நீங்காத ஏழைமை கொண்ட தொழிலாளர் நசுக்கப்படல் நடவாது; நடப்பது தொடராது!

உயிர்ப்பான அன்பியல்பு மாந்தருள் வந்துறையும்போது, அவர்கள் உள்ளே நிலைத்துவிட்ட தடுமாற்றம் ஆளுமை உணர்வு அத்தனையும் வெளியேறிவிடும். இயேசுவின் அன்பு மட்டுமே அவர்கள் அகத்தில் நிறைந்திருக்கும்; பின்பு ஆண்டவரின் அன்புத் திருப்பணிக்குச் சமமான பணிகளே நடைபெறும் மாந்தர் மூலமாக!

எபேசியார் 5:2 "கிறித்து நமக்காக தம்மைத் தேவனுக்கு நறுமணமான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக் கொடுத்து நம்மில் அன்பு கூர்ந்ததுபோல் நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள்''.

மேலே கூறப்பட்ட உரைபோல், "அன்பிலே நடந்து கொள்ளுங்கள்" என்றால் என்ன பொருள்? ஏதோ அன்பு எனும் பாதை இருப்பது போலவும் அதிலே நாம் நடப்பது என்றா பொருள் கொள்வது? இல்லவே இல்லை?

'நடப்பது' என்பது காலால் நடப்பது என்பதல்ல. "வாழ்ந்து காட்டுதல்" "நடத்தையால் அன்பினைக் காட்டுதல்" என்று பொருள் கொள்வதுதான் சரியானது. எடுத்துக்காட்டாக ஒரு வாணிகம் செய்பவர் தன்னைப்போன்ற வாணிகரிடமோ நுகர் வோரிடமோ செய்யும் வாணிகம் அன்பின் அடிப்படையில் இருக்க வேண்டும் என்பதுதான்!

கடவுள் எப்படி மாந்தர் தம்மை நடத்துகின்றரோ அதேபோல் தான் நாமும் மற்றவரை நடத்தவேண்டும். புலனுக்கு உட்பட்ட அறிவு நம்மை அதன் அடிமையாக்கி வைத்திருக்கிறது.

இன்று மாந்தராகிய நாம் பெற்றுள்ள அறிவு பொதுவாக, தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி, கல்லூரி, பல்கலைக் கழகங்களில் கற்றுத் தரப்பட்டவற்றினால் பெற்ற அறிவுதான். அதுவும்கூட நம் புலன்கள் ஐந்தின் மூலமாகப் பெறப்பட்டதுதான். அதாவது கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து உற்றறியும் ஐம்புலன்களின் வாயிலாகப் பெற்ற கல்வி அறிவுதான்! நமது உடல் ஓர் அரிய ஆய்வுகூடம், அறிவு நாம் செய்யும் செயற் பயிற்சியின் மூலம் பெறப்படுவதேயாம்.

வெறும் புலனறிவு, உயிர் மெய்ம்மையை ஆவியின் ஆற்றலை அல்லது ஆன்மாவின் மதிப்பினை அறியாது. அறிந்தும் புலனறிவின் இடத்தை அன்பு பெற வைத்ததில்லை நாம். அன்பினை நாம் நமக்குத் தேவையானபோது மட்டுமே குழந்தை தேவைப்படும்போது பொம்மை ஒன்றுடன் ஆடுவது போன்று அன்பினை ஒரு கைப்பாவையாகக் கொண்டு விளையாடுகிறோம். எதுவும் முடியவில்லை என்றால் கடைசியாக அன்பினைக் கைகொள்ள முனைகிறோம்.

அப்படிக் கூடாது. புலனறிவுக்கு அப்பாற்பட்டு உள்ள அன்பினைப் புலனறிவின் இடத்தில் கொண்டு வந்திட வேண்டிய - நேரம் நமக்கு வந்துவிட்டது.

அன்பு நெறியினைச் சமூகம் எப்பாடுபட்டேனும் - மட்டு மீறிய முயற்சியால் தகர்த்தெறியப் பார்க்கிறது. நாட்டில் ஒழுங்

கின்மையும் அமைதிக் கேடும் இனி தலைவிரித்து ஆடுகிறது; ஆடப் போகிறது. தறுதலை ஆட்சி நடத்தப் போகிறது.

ஒழுங்கின்மை என்பது என்ன? எந்தவிதக் கட்டுப் பாட்டுக்கும் உட்படாதத் தன்னலம். தன்னலம் இருக்குமிடத்தில் இறைமை இருக்காது. அதன் விளைவு என்ன? மனிதர் தாமே தங்கள் வாழ்வில் வந்துற்ற அனைத்துச் சிக்கல்களைச் சிந்திக்காமல் தீர்க்க முனைந்துவிட்டனர். நம் சிக்கல்களைப் பண்பாளரிடம் விட்டு விடுவோம் என்பதனை மறந்தனர். அதனால்தான் ஒவ்வொரு மனிதனும் தன்னலம் மேலோங்கிய ஒழுங்கற்றவனாக ஆகி விட்டான்.

தன்னலம் நம்மில் தலைதூக்கி நிற்கையில்
மன்னலம் மாய்ந்து விடும்.

## அன்பு வல்லந்தமாகக் கைப்பற்றுகிறது

"நீங்கள் ஏன் ஆப்பிரிக்க நாட்டுக்குப் போகிறீர்கள்?" என்று ஒருவர் ஆல்பர்ட் சுவைட்சரைக் கேட்டார். "அன்பு என்னை அங்கே ஈர்த்தது. ஈர்த்த அன்பு என்னை துரத்தியது. அதனால் போகாமல் இருக்க முடியவில்லை"என்றார் அவர்.

இயேசுவின் அன்புக்கு ஆட்பட்ட ஒருவனுக்கு, உலகில் அதுபோன்ற ஆற்றல் வேறெதுவும் வந்து வாய்ப்பதில்லை. இயேசுவின் அன்பு நம்மைக் கட்டாயப்படுத்தி நம்முள் வந்து உறைகிறது - நிறைகிறது. அவ் அன்பு நம் உள்ளிருப்பது எதை எதைப் பேசிடக் கூடாதோ, எதை எதைச் செய்யக் கூடாதோ, அவற்றைச் சொல்லி நம்மைத் தடுத்து நிறுத்துகிறது. அதனால் நாம் எதைச் செய்யலாம், எதை வழங்கலாம் என்பதை நாம் அறிந்து செய்ய உதவுகிறது அன்பு!

இயேசுவின் அன்பு ஒருவரின் ஆவியினை அடக்கி ஆள்கிறது, இயக்குகிறது. எண்ணுவதுகூட அவர் அன்பினால்தான் எனும்படி, ஒருவர் இயேசுவின் மாந்தராகிறார். தன்னையும் அறியாமல் அதே மாந்தர் எதை நினைத்தாலும் அன்பினை முதலாகக் கொண்டே நினைக்கிறார். இயேசுவின் அன்பினைப் பெற்று இயேசுவின் அன்பர் ஆன பின்பு முன்பு தான் நினைத்த படி, சொல்லியபடி செய்தது போன்று, இப்போது பேசுவதில்லை; செய்வதுமில்லை!

இயேசுவின் அன்பிற்குப் ஆட்பட்டவர் ஒரு வாணிகம் செய்பவராக இருப்பதால் அவருடைய வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் இயேசுவின் அன்பே செயல்பட வைக்கிறது.

இன்னொருவர், ஒரு நிறுவனத்தில் பணியாற்றுபவராக இருந்தால், அவர் இயேசு எப்படி எதையும் கண்ணுங் கருத்துமாகச் செய்தாரோ அப்படியே செய்ய வேண்டும் என்று கண்டு கொண்டு தொழில் புரிகிறார். அந்த நிறுவனம் தரும் நன்மை மேன்மையைக் கூடக் கருத்திக் கொள்ளாமல் மனமாரப் பணி ஆற்றுவார். மற்றவர் பார்வைக்குப் பணியாற்றுவது போன்ற பாசாங்கு வேலை செய்வது கிடையாது. தான் வாங்கும் ஊதியத்திற்கு ஆற்றிட வேண்டிய கடமையைவிட மேலாகவே பணியாற்றுவார். தனக்குத் தான் பணியாற்றும் நிறுவனமே கடன்பட்டிருக்கும் நிலைமையை உருவாக்கிக் கொள்கிறார்.

உதவிட வேண்டும் என்று முடிவு செய்துவிட்ட பின்பு, இயேசு கடைப்பிடித்தது போல, வாங்குவதை விட வழங்கு வதையே வாடிக்கையாகக் கொள்கிறார். அந்தப் பண்பு ''எதையும் பிறரிட மிருந்து 'பெறுவது' என்பதைப் பிறருக்கு 'வழங்குவது' எனும் பாங்காக மாற்றிவிடுகிறது. தன்னால் ஆன மட்டும் ஒருவரை அடிமையாக்கிக் கொள்ளும் தன்னலம் என்பதைனை மேற் சொன்ன 'வழங்கும்' பண்பு அழித்துவிடுகிறது.

அன்பு என்பது ஒரு புரட்சிகரமானது. அது பழமைப்பட்ட ஒன்றன்று! கரடுமுரடான மூலப் பொருள் போன்ற மானிடரைப் பத்தரை மாற்றுத் தங்கமாக மாற்றவல்லது அன்பு. ஓர் எளிய மனிதனை ஒப்பற்ற மாமனிதனாக்கிக் காட்டுகிறது.

கல்வி அறிவும் நல்ல வாழ்வியல் பயிற்சியும் அற்ற பலரை நாம் அறிவோம். அவர்கள் வறுமையில் உழல்பவர்கள்; வளம் வேண்டி நிற்பவர்கள். அவர்கள் பேசிடத் தொடங்கினால் அடடா! எத்தனை பேர் அமைதியாகக் கேட்கிறார்கள்! எப்படி? கல்லாத அவர்களுடைய பேச்சில் அப்படி என்னதான் இருக்கிறது? அன்பு இருக்கிறது. ஆன்றவிந்தடங்கிய சான்றோரின் அன்பினை மேற் கொண்டு வாழ்ந்து வரும் பண்பு இருக்கிறது. வேறென்ன வேண்டும்?

## மாந்தன் என்னை விரும்பினால்

எதையும் ஆய்ந்து தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்றில்லாமல் எல்லார்க்கும் புரிகின்ற விளங்குகின்ற சொற்களைக்

கொண்டுதான் இயேசு தமது கருத்துகளை எடுத்துச் சொல்லி யிருக்கிறார். அதற்குகோர் எடுத்துக்காட்டு.

"ஒருவர் என்னில் அன்பு கூர்வாரேயானால் அவர் என் சொற் களின் படியே நடப்பவர்! அவரை என் தந்தை, அன்புடன் விரும்பு வார். அப்போது நானும் என் அன்பினை ஏற்றுக்கொண்டு என் சொற்படி நடப்பவர் எவரோ அவர் என்னுடன் தந்தையிடத்தில் ஒன்றுபடுவோம். தந்தையிடத்தில் இடம் பெறுவோம்.

மேலும் அவர் இயம்புகிறார்; "உன்னில் அன்பு மேலோங்கி உன்னை அவ் அன்பு ஆளும் என்றால் உன்னில் நான் வந்து உறைகிறேன்; உன்னுடன் இருந்து வாழ்கிறேன். உன்னுடைய இல்லறம் ஓங்கும். இல்லத்தினை, அன்பு ஒன்றே ஆட்கொண்டு நடத்திச் செல்லும் என்றால் அந்தப் பேருவகையில் நானும் உன்னுடன் பங்கு கொள்வேன்"

இல்லத்தில் கடவுளும் அவர்தம் மைந்தராம் இயேசுவும் வந்து வாழ்ந்தால் அவ் இல்லம் - குடும்பம் எப்படி பாதுகாக்கப்பட்டதாக இயேசுவும் வந்தடையும் சூழலில் சின்னஞ் சிறார்கள் வளர்ந்து வருவார்களேயானால் அவர்களுக்கு அதைவிட வேறு பெறும் பேறு இருக்க முடியாது.

உண்மை அன்பில் இயங்கும் குடும்பம், வாடகை, வரி, வாங்கிய பொருள்களின் விலையின் தொகையைத் தரவேண்டிய குறிப்புப் பட்டியல்கள் ஆகியவற்றை எப்படி ஏற்போம் என்று கலங்க வேண்டிய தேவையில்லை. அன்புறவின் அருளால் அவை தீர்க்கப் பெறும்.

பேதுருவின் படகில் அமர்ந்து கொண்டு, மக்களைப் பார்த்து இயேசு எப்படிப் பேசினார் என்பது நினைவிருக்கும். அப்படிப் பேசிய பின்பு, பேதுருவை நோக்கி "பேதுருவே, நேற்றிரவு மீன் பிடிக்கச் சென்றனையே! ஏதேனும் கிடைத்ததா?" என்று கேட்டார் இயேசு.

"இரவெல்லாம் விழித்திருந்தும் வலை விரித்தும் ஒன்றும் அகப்படவில்லை" என்று பேதுரு மறுமொழி பகர்ந்தான்.

"ஆழமான இடத்திற்குச் சென்று வலையை விரியுங்கள்" என்று இயேசு அறிவுறுத்தினார்.

இயேசு சொல்கிறபடி நாம் செய்தால் மீன்கள் கிடைக்குமோ கிடைக்காதோ என்ற ஐயப்பாட்டுடன், "தங்கள் சொற்படி செய்

கிறேன்'' என்றான் பேதுரு! சொன்னபடியே, ஆழமான இடத்தை நோக்கிச் சென்று, வலையை விரித்தான். என்ன வியப்பு! வலையில் நிரம்ப மீன்கள் சிக்கின. மீண்டும் மீண்டும் வலையை வீசி இரண்டு படகுகள் நிரம்பும் அளவுக்கு மீன் பிடித்துக் கொணர்ந்தான் கரைக்கு! பேதுருவின் படகில் அமர்ந்ததற்கு ஈடாக பேதுருவுக்கு மீன் கிடைக்கச் செய்தார் இயேசு பெருமான்.

ஆகவே, இயேசு ஆண்டவரை, உன்னோடு அன்பினால் இருக்கச் செய்தால் நீ செலுத்த வேண்டியவற்றை, ஆண்டவர் இயேசுவே செலுத்தி உன் கடனைத் தீர்த்திடுவார். தந்தையும் மைந்தரும் உன்னிடம் இருக்குமாறு செய்து பார். பிறகு தெரியும் உன் கடன்கள் எப்படி ஆற்றப்படுகின்றன; உன் இல்லற வாழ்வு எப்படி தழைக்கிறது என்பதை நீ கட்டாயம் கண்டு உணரலாம்.

யோவான் 14:21 ''என் கற்பனைகளைப் பெற்றுக் கொண்டு, அவற்றைக் கைக் கொள்கிறவனே என்னிடத்தில் அன்பாயிருக் கிறான். என் இடத்தில் அன்பாயிருக்கிறவன், என் இறைக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன்''

ஆம்! இயேசுவானவர், தம்மை அவர்தம் அருள்மொழி யினாலே வெளிப்படுத்துகிறார். உன்னை அன்பாக விரும்புகிற வரை அல்லது நண்பரைவிட மிக நெருக்கமாக உள்ளார்ந்த அன்பராக இயேசு விளங்குவதை நீ அறிந்து கொள்வாய். அவர்தம் திருவாய் மலர்ந்த மொழிகள் வாயிலாக, அவரில் நீ அன்பு கூர்ந்தால் அன்பு கொண்டால் அவரை உனக்கு வெளிப்படுத்திக் காட்டுவார்.

''அவரை அன்புடன் நேசிக்காதவர்களுக்கு இயேசு தம்மை வெளிபடுத்த மாட்டார். இயேசுவின் ஆடையைக் களைந்து, அம்மணமாக்கி, அவர் தலையில் முள்முடியைச் சூட்டினவர்களிடம் இயேசுவானவர் வாய்மூடி இருந்தார்; ஏதும் பேசவில்லை.

அவர் தம்மில் அன்பு கொண்டவர்க்கே தம்மை வெளிப் படுத்திக் காட்சியளிக்கிறார்.

யோவான் 15:9:10 ''கடவுள் என்னில் அன்பாயிருக்கிறது போல நானும், உங்களில் அன்பாயிருக்கிறேன். என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள். நான் என் கடவுளின் கற்பனைகளைக் கைக் கொண்டு, அவருடைய அன்பினை நிலைத்திருக்கிறதுபோல,

நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டு, என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள்''

அன்பினில் வாழ்வது எப்படி என்று இப்போது விளங்கு கிறதா? என்பதனைச் சற்றுக் கற்பனை செய்து பாருங்கள்!

ஒருவர் மற்றவர்க்கிடையே நிலவும் சச்சரவு, சண்டை, பூசல், கசப்புணர்ச்சி ஆகியவற்றினை முற்றிலுமாக ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து ஒழித்திட வேண்டுமானால், அன்பில் நிலைத் திருத்தலும் வாழ்வதுமேயாம்!

அன்பில் இணைந்து வாழும் கணவனும் மனைவியும் எப்படி வாழ்கிறார்கள் என்றால், விண்ணகத்தின் சூழலில் வாழ்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

## மயக்குறு மக்கள் வழிகாட்டுபவர்

ஒரு சிறு குழந்தை பெரியவர்களை இயேசுவின் அன்பிற்கு உரியவர்கள் ஆக்குகிறது. உள்ளபடியே இயேசுவின் அன்பின் சூழலில் வளர்ந்துவரும் குழந்தைக்குச், சண்டையைப் பற்றியோ, கசப்புணர்ச்சி - வெறுப்புணர்ச்சியோ தெரியாது.

இயேசுவின் அன்புச் சூழலில் தழைத்துவரும் குடும்பம் ஒன்றில் ஒரு சிறு குழந்தை அந்தக் குழந்தையின் தாய்-தந்தை இருவரிடையே சண்டையோ சச்சரவோ ஏற்பட்டதில்லை; எந்தக் காரணத்தைக் கொண்டும் அந்தக் குழந்தையின் தந்தை தாயின் இடையே கடுமையான சொற்கள் வெளிப்பட்டது கிடையாது. அப்படிப்பட்ட தாயும் தந்தையும் அந்தக் குழந்தையின் அத்தை வீட்டுச் சென்றார்கள், ஒருவாரம் இருந்துவிட்டு வந்திட! அங்கே அந்தக் குழந்தையை விட்டு விட்டு, தொலைவிலிருந்து நகரம் ஒன்றினுக்குச் சென்றார்கள் தாயும் தந்தையும்.

ஒரு நாள் அந்தக் குழந்தையின் அம்மான், அதன் அத்தையைத் தடித்த சொற்களால் திட்டிவிட்டார். அதனைக் கேட்ட அந்தக் குழந்தை 'ஓ' என்று அழுது விட்டது. உடனே அழுகின்ற குழந்தையைத் தன் தோளில் தூக்கி வைத்துக் கொண்டு, செல்லமாக, 'அமிழ்து! என்ன நேர்ந்தது? ஏன் அழுகிறாய்?' என்று கேட்டார் மாமன்.

"மாமா! நீங்கள் அத்தையை அன்புடன் விரும்புகிறீர்கள் என்று எண்ணினேன்" என்று தேம்பித் தேம்பி அழுதது அந்தக் குழந்தை!

"ஆமாம்! செல்வமே! உள்ளபடியே அத்தையிடம் அன்புடன் தான் இருக்கிறேன்" என்றார் மாமன்.

"இல்லை! ஒருபோதும் இல்லை! என் அம்மாவை அப்பா அன்புடன் விரும்புவது போல், அப்பாவை அம்மா அன்புடன் விரும்புவது போல் நீங்கள் அத்தையை அன்புடன் விரும்பு வதில்லை. அப்படி நீங்கள் ஒருவருக்கொருவர் அன்பு கொண்டிருந்தால் சற்றுமுன் கெட்ட சொற்களால் அத்தையைத் திட்டியிருப்பீர்களா?" என்று கேட்டது குழந்தை.

தன் தோள் மீது அமர்ந்திருந்த குழந்தை முகத்தைப் பார்த்தார் குழந்தையின் அம்மான்; மறுகணம் தன் மனைவியின் முகத்தைப் பார்த்து, "உன்னைத்தான்! சற்றுக் கேளேன்! நம் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய மேலான ஒன்றினைக் கைவிட்டு விட்டோமோ! இல்லையா?" என்று கேட்டார்!

இதிலிருந்து நாம் என்ன காண்கிறோம்? எவர் ஒருவர் தன் மனைவியை அன்புடன் நேசிக்கத் தவறுகிறாரோ அவர், அவருடைய வாழ்க்கையைத் தரும் மிக்க அழகிய ஒன்றினைப் பெற்றிடத் தவறுகிறார் இல்லையா!

ஒருநாள் 'நற்செய்தி' ஒலிபரப்பினைக் கேட்டுக் கொண்டிருந்த சிறுவன் ஒருவன், தன் தாயைப் பார்த்து "அம்மா, நம் வீட்டிலும் இயேசுவின் அன்பினைப் போன்ற அன்பினை நாம் பெற்றோம் என்றால், நாம் மகிழ்ச்சியோடு இருக்கலாம் இல்லையா?" என்று கேட்டான்.

அந்தத் தாய், குழந்தை கேட்டதை நினைவிற் கொண்டாள்; இரவு தம் கணவர் வீட்டுக்குத் திரும்பி வந்தவுடன், சொல்லி விளக்கினாள். அது கேட்ட கணவர், ஞாயிற்றுக் கிழமை காலை இயேசுவின் அன்பினைப் போன்ற அன்பினை பற்றிய சொற் பொழிவினைக் கேட்டேன். அதனையே சிந்தித்துக் கொண்டிருக் கிறேன். நாமும் இயேசுவின் அன்பினைப் பின்பற்றி அவ் அன்பினில் நாம் இருவரும் வாழ்ந்து வந்தால் என்ன? என்று மறுமொழி உரைத்தார்! நீங்கள் அப்படிச் சொன்னால், அதன்படி நடந்திட வாழ்ந்திடவே நான் விரும்புகிறேன் என்றாள். இது கேட்டு

மகிழ்ந்தார் கணவர். உடனே, கணவனும் மனைவியும் சேர்ந்து, "நாம் இருவரும் சேர்ந்து அன்பில் இணைந்து வாழ்ந்திட இயேசுவை நம் நெஞ்சக் கதவினைத் திறந்து வைத்து அழைப்போம். அவர் அன்பினில் தழைப்போம். அந்த அன்பினில் வாழ்ந்து வருவோம்" என்று ஒருசேரச் சூளுரைத்தார்கள்.

அது கேட்ட அந்தச் சிறுவன், அம்மானின் இரு கைகளையும் சேர்த்து தன் மார்போடு அணைத்தபடி "இனி மேல் நாம் எல்லாம் இயேசுவின் அன்பில் அவர்கொண்ட அன்புக்குச் சமமான அன்பில் வாழ்ந்து மகிழ்வோம் அல்லவா மாமா?" என்று கேட்டான்.

"அப்படித்தான்" என்றார் மாமா.

நானிலத்தில் வாழ்ந்து வரும் ஒவ்வொருவரும் இயேசுவின் அன்பினை ஒத்த அன்பினைப் பெறுதல் வேண்டும்; பெற்று அன்பு வழி வாழ்க்கை நடத்த வேண்டும் என்று கற்பிக்க வேண்டும். அந்தப் போதனையில் அவர்கள் அனைவரும் அன்பினைத் தம்மில் கொண்டு விளங்குபவராக வேண்டும். இல்லை என்றால், ஒருவர் மற்றொருவரிடையே சண்டையும் சச்சரவும் பிணக்கும் காழ்ப் புணர்ச்சியும் கொண்டவராகத் தான் இருப்பார்கள். எனவே, எல்லோரும் இடைவிடாமல் நாள்தோறும் இயேசுவைப் பின்பற்றி அவர் வெளிபடுத்திய அன்பினைத் தம்மில் கொண்டு வாழ்ந்திடல் வேண்டும்.

## அன்பு நம்மில் முழுமை பெற்றுள்ளது

கடவுளின் இயற்கை இயல்பு நம்மில் உள்ளது. மரித்தோரி லிருந்து இயேசுவானவரை, எழுப்பிய வல்லமை மிக்க மாபெரிய தூய ஆவி நம்மில் இருக்கிறது. அவருடன் நாம் ஒன்றுபட்டு விட்டோம் வாழ்வில். எப்படி? அன்பினால். வாழ்க்கையே அன்பு மயம்தான் !

ஒருவருடைய வாழ்க்கையில் அன்பு எப்படி நிறைவு பெற்றுள்ளது, முழுமையாகவுள்ளது என்பதை ஒருவாறு அறிந்து கொள்ளலாம். ஒருவரில் அறிவு நிறைவு பெற்று இருக்காது; ஆனால், ஒருவரில் அன்பு முழுமை பெறும், நிறைவு பெறும்.

அன்பு நம்மில் நிறையப் பெறும்போது, முழுமை பெறுகிற போது நம் வாழ்க்கையில் அச்சத்திற்கு இடமேயில்லை! அச்சம்

ஏற்படத்தக்க ஆதாரங்களான, தீவினைகள், நோய்கள், இக்கட்டான சூழ்நிலைகள், இயற்கை விதிமுறை ஆகியவற்றை வென்று அடக்கும் எல்லா அதிகாரமும் வல்லமையும் அன்புறவில் இணைந்து பிணைவதால் நாம் வென்றிட முடியும்.

எந்தச் சிறப்பும் இல்லாத ஒருவரைக் கூட தெய்வ நிலைக்கு உயர்த்திவிடும் ஆற்றல் வாய்ந்தது அன்பு! அன்பின் வெளிப் பாட்டினை நமக்கெல்லாம் அருளிச் செய்தது, கடைசி நாள்களில் சிக்கல்கள் பல வந்துறினும், அவற்றை எதிர்த்து நின்று வெற்றி கொண்டு வீரர்களாகத் திகழ வேண்டும் என்பதற்காகத் தான்!

''வெளிப்படுத்தின சிறப்பு'' எப்படி இறுதியில் அன்பு வெற்றி பெற்றது என்பதையும், மானிடராகிய வீரர்களையும், கயவர்களையும் கீழ் அடக்கி வெற்றி பெற்றது ஆட்டுக்குட்டி என்று நமக்கு விளங்க விரிக்கிறது. ஆட்டிக்குட்டிதான் அன்பு! வெளிப்படுத்தல் சிறப்புப் புத்தகத்தில், 20 இடத்திற்கும் மேலாக இயேசு பெருமான், 'ஆட்டுக்குட்டி' என்றே குறிப்பிடுகிறார் - அழைக்கப்பெறுகிறார். சொல்லின் மூல முதற்பொருள்படி சொல்ல வேண்டுமானால், குழந்தை ஆட்டுக்குட்டி, பச்சிளம் ஆட்டுக்குட்டி, திக்கற்ற ஆட்டுக்குட்டி என்று சொல்லி அழைக்கப் பெறுகிறார் இயேசு பெருமான். அன்பு எப்படி ஆதரவற்றதாக இருக்கிறது என்று பார்க்கிறோம். இருந்தும் அன்பே வெற்றி பெறுகிறது. கடவுள் இருப்பதனால், கடைசியில் அன்பே அனைத்தையும் வென்று மேம்பட்டு நிற்கிறது.

## முழு நிறைவான அன்பு

சான்றவர் சான்றாண்மை நம்மில் அன்பு கூர்ந்தது போன்று, நாமும் ஒருவரில் மற்றொருவா அன்பு கூர்ந்தால், நாம் ஒருபோதும் யாரையும் புண்படச் செய்ய மாட்டோம்; மற்றவரைப் பயன்படுத்திக் கொள்வதற்கென்றே பழக மாட்டோம். எதைச் செய்யக் கூடாதோ, பேசவும் கூடாதோ அதுபற்றி எதுவும் பேச மாட்டோம்.

கடவுள், பழைய சட்டதிட்ட முறையில் ஒருவரை ஒருவர் அன்புடன் விரும்பச் சொல்லி ஆணையிட்டது. ஆனால் அந்தக் காலத்து மக்களால் ஒருவரை மற்றொருவர் அன்புகாட்டி விரும்பும் திறனில்லாதவராயினர்.

ஆனால் இன்றோ நமக்கு அன்பினையும் அதன் இயல் பினையும் சேர்த்தே நமக்குச் தந்தருளியுள்ளனர் நயனோடு நன்றி

புரிந்தவர்கள். ஆகவே, சான்றோர் என்ன கற்பனையைக் கடைப் பிடிக்கச் சொல்கின்றனரோ கைக் கொள்ளுமாறு ஆணை யிடுகிறாரோ அதனை நாம் எளிதாகச் செய்திட வல்லவர்களாக இருக்கிறோம்.

ஒரு குழந்தை, தன் பெற்றோரை அன்புடன் விரும்புகிறது என்றால் அஃது இயற்கை! பண்புடையவர் வகுத்துக் காட்டிய அன்பு நம்மை இயற்கையில் அன்பர்களாக்கியுள்ளது. இன்று நாம் அன்புடன் இருக்கிறோம். முதன்முதலாக நம்மையெல்லாம் அன்புடன் விரும்பியவர், நம்மில் அன்பு கொண்டவர் இயேசு. ஆகவே அன்புக்கு நாம் உடன்பட்டுக் கீழ்பட்டு நடக்க முடியும். அப்படி நடப்பது நமக்கு எளிது.

பழைய சட்டதிட்டம், "இறப்பின் சட்டம்" என்றே குறிக்கப்படுகிறது. ஏன் என்றால், ஒவ்வொரு கற்பனைக்கும் ஒரு தண்டனையும் இணைக்கப்பட்டிருந்தது - விதிக்கப்பட்டிருந்தது.

ஆனால் புதிய உடன்படிக்கைச் சட்டத்துடன் எந்தத் தண்டனையும் இணைக்கப்படவில்லை - விதிக்கப்படவில்லை! ஒரே ஒரு தண்டனை உண்டு! என்னவென்கிறீர்களா? அன்பு வாழ்க்கையை விட்டு விலக அடியெடுத்து வைக்கும் ஒவ்வோர் அடிக்கும் துன்பம் உண்டு; வரும் அன்பை விட்டு விலகிச் செல்ல வைத்திடும் ஒவ்வோர் அடியும் இன்னலில் அல்லலில் அடி யெடுத்து வைப்பதாகும்.

உங்களுடைய வாழ்க்கைப் பாதையைத் திரும்பிப் பார்த்தால் நடந்த நாள்களை எண்ணிப் பார்த்தால் நீங்கள் செய்த தவறுகளுக் கெல்லாம் காரணம் என்னவென்று கண்டுபிடித்து விடுவீர்கள். தவறுகள் செய்ததெல்லாம் அன்பின் எல்லையை விட்டு வெளியே அடியெடுத்து வைத்த போதுதான் - அன்பினுக்கு மாறாகச் செயல் பட்டபோதுதான் என்பதனை நன்கு உணரலாம்.

நீங்கள் உங்கள் அன்புக்குரிய ஒருவரை வசை கூறினீர்கள் - திட்டினீர்கள் என்பதால் அந்த அன்புக்குரியவரைப் பிரிய நேரிட் டதும் கூட, நீங்கள் அன்பின் கட்டுக்கோப்பிலிருந்து விலகிச் சென்றபோதுதான் என்பதை எண்ணிப்பார்த்தால் அறிவீர்கள்.

ஒருவரை நாம் அடித்து வடுப்படுத்திச் செயலற்றவராகச் செய்வதும், உடலையும் உள்ளத்தையும் காயப்படுத்தி வருத்து

வதும் கூட எப்போது நடக்கிறது? அன்பினை விட்டுவிலகிச் சென்று விட்ட போதுதான் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

நாடிப் பெறும் அன்பு நன்று; நனிநன்று
நாடாது பெற்றிடும் அன்பு.

## அன்பெனும் அறக்கட்டளை

முதல் அல்லது பழைய உடன்படிக்கையில் பலப்பல அறக் கட்டளைகள் இருந்தன; அந் நாளில் செய்து கொண்ட பழைய உடன்பாட்டின் கீழ் வந்த மக்கள் பல்வேறு சட்டங்களின்படிதான் வாழ்ந்திட வைத்தன. அதன் கீழ்ப்படிந்து நடக்கவோ, செய்யவோ தக்க ஆற்றல் காணப்படவில்லை அம் மக்களிடையே!

இந்தப் புதிய உடன்படிக்கையிலோ ஒரே அறக்கட்டளை தான்; அஃதும் ஒரே ஒரு சொல்தான் - அச் சொல் - 'அன்பு' என்பதுதான்! அந்தச் சட்டம்தான் மனித வாழ்க்கையின் பலப்பல கட்டங்களிலும் தடுத்தாட்கொள்வது. கடவுளின் இயற்கையான ஆற்றல் நம்மிலும் வந்துற்றிருப்பதால், நாம் அன்பின் வழி நடப்பதற்கான திறன் அளிக்கிறது.

உரோமர் **13:10** "அன்பானது பிறனுக்குப் பொல்லாங்கு செய்யாது; ஆதலால் அன்பு அறக்கட்டளையின் நிறைவேறுதலாக யிருக்கிறது" இயேசு கிறித்து இந்தப் புதிய அறக்கட்டளையை வலியுறுத்திக் கூறுகிறார்.

யோவான் **15:9:11** "தந்தை என்னில் அன்பாயிருக்கிறது போல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன். என்னுடைய அன்பிலே நிலைத்து இருங்கள்"

"நான் என் தந்தையின் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறது போலவே, நீங்களும் என் கற்பனைகளைக் கைக் கொண்டிருந்தால் என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்".

"என்னுடைய அன்பு உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் மகிழ்ச்சி நிறைவாயிருக்கும்படியும் இவற்றை உங்களுக்குச் சொன்னேன்"

அன்பில் வாழ்ந்து வருபவர், அன்றாட வாழ்வில் அனைத்திலும் அன்பினைக் கடைபிடித்து ஒழுகுவார்களேயானால் அவர்கள், பண்பாளர்களின் மகிழச்சியில் கொண்டு போய்ச்

சேர்க்கப்படுவர். மன்பதையின் மகிழச்சி அவர்களில் நிறைவேற்றப் படும்.

கடவுள் நம்மில் அன்பு கொண்டது போலே நாமும் ஒருவரில் மற்றொருவர் அன்பு கூர்ந்திடக் கடமைப்பட்டுள்ளோம். இந்த முறையினைக் கடைப்பிடிப்பவர் யாராயினும் அவர் எந்தவிதத் தவறையும் எண்ணவும் மாட்டார்; செய்யவும் மாட்டார் என்பது திண்ணம். அன்பு நெறியில் நடப்பவர் - வாழ்பவர் தீவினை ஏதும் செய்திடார்!

அன்பினை விட்டு, அன்பு நெறியினை விட்டுவிலகி வைக்கும் ஒவ்வோர் அடியும் பண்பாளரின் தோழமையையும் இன்பத்தினையும் விடுத்து விலகிப் போகும் பாதையில் எடுத்து வைக்கும் அடியாகும் என்பது வருந்தற்குரிய செய்தியாகும். நெஞ்சில் நிறுத்திட வேண்டிய செய்தியாகும்.

மாந்தர் நமக்கு ஏற்படும் இன்னல் சிக்கல் அனைத்தினையும் தீர்க்கத் தக்கது அன்பு என்பதைனையும், ஒவ்வோர் இடறினைத் தீர்க்கத் தக்கது அன்புதான் என்பதனையும் நம்பிக்கை கொண்டிட நம்மிலே பலருக்கு நீண்ட காலம் தேவைப்பட்டது என்பதை எண்ணும் போது வியப்பாயிருக்கிறது.

அன்பெனும் வாழ்வின் அறக்கட்டளை ஒன்றே
துன் பெலாம் தோற்கடிக்கும்

## அன்பில் நம்பிக்கைக் கொள்வது

யோவான் 4:16, “தேவன் நம்மில் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து அன்புற்றிருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக் கிறார். அன்பில் நிலைத்திருக்கிறவன், தேவனில் நிலைத்திருக் கிறான்; தேவனும் அவரில் நிலைத்திருக்கிறார்”.

நாம் அன்பில், நம்பிக்கைக் கொள்கிறோம். தேவன் நம்மில் அன்பு வைத்திருக்கிறார் என்பதை நம்புகிறோம். நாம் அன்பு நெறியில் நடந்தால், மிக உயர்ந்த தெய்விகப் பேருலகத்தில் நடக்கலாம் என்பதைனையும் நம்புகிறோம்!

அன்பின் வழி நடப்பவர் யாரும் மற்றவர்க்கு மாறாக நடக்கமாட்டார். ஆகவே நாம், இறைவனின் பிள்ளைகளாகவே நடத்தல் வேண்டும். இயேசுவில் தேவன் இருப்பது போல், நம்மில் தேவன் வந்துறையுமாறு நாம் செய்ய வேண்டும்.

யார் ஒருவர் அன்பினைக் கடைப்பிடிக்கிறாரோ, அன்பினில் வாழ்கிறாரோ அவர் கடவுளில் வாழ்கிறார்; கடவுளின் அருள் உலகில் வாழ்கிறார்! தன்னை மறந்து தன்னை வெறுமையாக்கித் தன்னில் இறைவனையே உள்ளிருந்து வாழச் செய்பவர். தன்னில் இறைமையை வெளிப்படுத்திக் காட்டுபவர் ஆவார்.

அன்பினால் நாம் பிறந்தோம்; அந்த அன்பு நம்மில் வந்து நிறைந்துள்ளது. ஆகவே நம்மை எதிர் நோக்கி வரும் எத்துணை பெரிய எதிர்ப்பினையும், எத்துணைப் பெரிய பகையினையும் புறமிடச் செய்யும் ஆற்றல் வாய்ந்த மாபெரும் ஆற்றலாகும் அன்பு.

ஆகவே அன்பெனும் பேருலகில் வாழ்க்கையை நடத்திவரும் எவரும் இடைவிடாது கடவுளுடைய தோழமையைக் கொண்டு விளங்குபவர் ஆகிறார்.

திரளான தீவினைகள் வாராமல் நம்மை அரண் எனக் காக்கிறது அன்பு.

1 பேதுரு 4:8 "எல்லாவற்றிற்கும் மேலாக, ஒருவரில் ஒருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாக இருங்கள். அன்பு, திரளான தீவினைகளை மூடும்".

ஆம்! திரளான தீவினைகள் நம்மை வந்து சூழ்ந்திடாமல், நம்மை அரண் எனக் காக்கிறது அன்பு. மேலும் நம்மிடம் எந்த தீமையும் வாராமலும் வருவதையும் தடுத்து நிறுத்துகிறது அன்பு.

நாம் எத்தனையோ பேரைக் குறை கூறியிருக்கிறோம்; வெறுத்திருக்கிறோம். அதன் தொடர்பாக அவர்களுடன் சச்சரவு செய்து சண்டையும் போட்டிருக்கிறோம். அதனை இப்போது கேட்டால் கூட நம் நெஞ்சத்திலிருந்து 'உண்மைதான் அது' என்றே விடை வரும். அப்படிப்பட்ட நம் செயல்களிலிருந்து அன்புடைய வரை அரண் எனக் காத்து வருவது அன்பு. ஒருவர் தாம் செய்த தீச்செயலினால் வந்துற்ற தண்டனையைக் கொள்பவராகிய இயேசு விடம் திருப்பி அனுப்பிவிட்டேன். அவர் அதனைச் சுமந்து கொண்டார்.

என் தீங்கிற்குரிய தண்டனையை என்னிடமே திருப்பி அனுப்பி விட்டு, அவர் சுமந்த குறுக்கையினைச் சுமக்காமல் இருந்திருக்க முடியுமா? ஒருகாலும் முடியாது.

இதுதான் மானிடனின் இயல்பு; தன்னலம் மிக்க மானிடனின் பண்பு. அன்பை அறியாதவனின் குணம். கடவுள் அன்பின் பெருமையை - மாட்சியைப் பற்றி எப்படியெல்லாம் பேசப் படுகிறது கேட்டீர்களா?

அன்பைப் பற்றிப் பேசப்படும் பேச்சா இது? இல்லவே இல்லை! அமைதியில் துன்புறுவது அன்பு; மெய்ம்மை வகையில் வாயடங்கி வருந்துவது அன்பு! அன்பு, கேட்ட கேள்விக்கெல்லாம் விடையளிக்காது. மொழியில் விடை பகராதது அன்பு! அன்பின் விளக்கம் சொல்லில் வெளிப்படாது.

எதையும் தாங்கி இடர்உறா வாழ்வின்
விதையாய்ப் புதையலாய் விளங்குவது அன்பே.

## அன்பு தணிந்து போகும்

**ம**த்தேயு 24:12, "கொடுமை மிகுதியாவதனால், பலருடைய அன்பு தணிந்து போகும்"

கிரேக்கச் சொல்லான (Agapa) என்பதன் பொருள்பட, மெய்யான அன்பு, பேரன்பு என்னும் பொருளில் மேற்சொன்ன மத்தேயு நற்செய்தி 24:12ல் மட்டும் ஒரே ஒருமுறை கையாளுகிறார் மத்தேயு அவர்கள். திருச்சபையில் சமயத் தலைமையை எதிர்த்துக் கிளர்ச்சி செய்வதும் அன்பினை மீறுவதும் ஒன்றேதான்.

அன்பெனும் அருள் உலகத்தை விட்டு புலன் உணர்வு எனும் உலகத்திற்குக் கீழ் நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள் மானிடர். "அன்பினைப் பற்றிச் சொல்லப்படுகின்ற முறையில் - நெறியில் நாம் சென்றிட முடியாது; அப்படிப் பட்ட விதிமுறை களைக் கடைப்பிடித்தல் என்பது முடியாத ஒன்று" என்று சொல் வது சரியாகாது. அன்பின் உலகிலிருந்து, சூழலிலிருந்து திருச்சபை விலகுமேயானால் அதன் இடத்தில் சாத்தான் வந்து அமர்ந்துவிடும்; ஆதிக்கம் செலுத்தும். அன்பின் அரவணைப்பிலிருந்து விடுபடும் எவரும் மறுகணமே சாத்தானின் வல்லாண்மைக்கு ஆளாக நேரிடும்.

அன்பினை விட்டகன்றால் அந்தோ மிகுதுயர்
துன்பினைக் கொண்டிடும் வாழ்வு.

## தனக்கென்று எதையும் தேடாமை

தொழிலாளியத்திற்கும் முதலாளியத்திற்கும் சுருக்கமாக விளங்கச் சொல்வதனால், தொழிலுக்கும் முதலுக்கும் - உழைப் பிற்கும் மூலதனத்திற்கும் உள்ள தீர்வு முடிவு காண்பதற்கு வழிவகை உள்ளது. புதிய சட்ட திட்டங்களைக் கொண்டுவந்து நிறைவேற்றுவதிலும், ஒரு புது முயற்சி - புத்தாக்கம் சிறந்தது, தேவையும் கூட!

அதனையே ஒரு சட்டமாக ஏற்றுக் கொண்ட அச் சட்டமே நமது பொருளாதாரத்தை மேலாண்மை செய்வதாகக் கொள்ள வேண்டும். அப்படிக் கொண்டால், எல்லாச் சிக்கல்களும் - பாடு களும் தீர்ந்துவிடும். நம் இல்லற வாழ்வில் எல்லா மட்டங்களிலும் ஏற்பட்டுள்ள குற்றங்களை, ஏற்றத் தாழ்வுகளைப் போக்கிச் சமன் செய்யத் தக்கதாகும். இல்லத்தில் மட்டுமல்ல, திருச்சபைப் பணியில் காணப்படும் குறைகளையும் போக்கி நிறைவு பெறச் செய்யும். ஒவ்வொருவரும் தமக்கே என்ற மனப்போக்கினை விடுத்து மற்றவர்க்கும் - எல்லாருக்கும் என்ற மனப்பாங்கு வருவித்துக் கொள்ளும் போது ஒவ்வொருவருக்கும் தேவையானவை தாமே வந்து சேரும்.

ஆண்டாண்டுக் காலமாக மாந்தர்படும் கடுந்துயர் என்னும் மிக நீளமான புகைவண்டித் தொடரை இழுத்துச் செல்லும் மிகப் பெரிய மங்கோலிய எஞ்சினைப் போன்றது தன்னலம் என்பது. ஆறாத் துயரம் தீரும் முறைத் தீர்ப்பு தான் அதுபோய்ச் சேரும் இடம்! எனவே தன்னலம் என்னும் அந்தத் தொடர் வண்டியினை விட்டு இறங்குவோம். ஆறாத்துயர் தரும் தன்னலத்தின் தொடர்பும் - பயணமும் நமக்குத் தேவையில்லை. அன்பு வாழ்க்கை வாழ் வோம் அன்பான நெறியில் நடந்து வாழ்வோம்.

இப்படி வலியுறுத்திக் கூறுவது அன்பின் இலக்காக; அன்பின் பொருட்டாக. அன்பினை அறியாது அறிந்து அதன்படி நடவா தவர்களைக் குறை கூறுவதாக எண்ணிட வேண்டா! அன்பு அப்படித்தான் நயந்தும் - பரிந்தும் - வலிந்தும் சொல்லச் சொல்லும்.

இப்படியெல்லாம் சொல்வது செய்யும் தீவினைகளையும் தவறுகளையும் இனிச் செய்திடாமல் இருப்பதற்காக உருவாக்கப் பட்ட - கொண்டுவரப்பட்ட சட்டம் என்று யாரும் நினைக்க

வேண்டா. தன்னலத்தை அழிப்பதன் மூலம் தீச்செயல்களையும் அழித்துவிடக்கூடிய புதுவகையான வாழ்க்கை முறை; வாழும் வழி; வாழ்க்கை நெறி; வாழ்வியல் சட்டம்.

தன்னலம் என்னும் தடைகல் பெயர்ப்பதால்
இன்னலம் எய்தும் உலகு.

## அன்பு நெறி

எழுச்சியும் ஊக்கமும் குறைந்தவர்களின் வலுக் குறைவதைக் தாங்கிக் கொள்ளத் தேவையான வலுவினைப் பெற்றிட வேண்டும். நம்மை நாமே தேற்றிட மகிழ்வுறச் செய்திடற் கன்று.

ஆன்றவிந்தடங்கிய செயிர்தீர் செம்மல், தமக்கு மகிழ்ச்சி யைத் தேடிக் கொள்ளவில்லை. மற்றவர்க்கு மகிழ்ச்சியைத் தேடித் தந்தார். அதற்காகத் தம்மையே தந்தார்! ஆகவே நாம் நம்முடைய செல்வத்தைக் காசு பணத்தைக் கொடுப்பவராக மட்டுமன்றி நம்மையே கூட மற்றவர் வாழ - மகிழக் கொடுப்பதற்கான வலிவும் அன்பும் பெற்றவர் ஆவோம். 'தான்' என்பது 'தனக்கு' என்பதை மாற்றி 'தான்' என்பது 'மற்றவர்' என்றும் 'தனது' 'தனக்கு' என்பதை 'மற்றவருடையது' மற்றவர்க்கு என்னும்படி மற்றவர் நலம் நாடும் நன்னலத்தைப் பேணி வளர்ப்போம். இன்னும் அந்தத் தன்னலத்தை 'மன்னுயிர் நலம்' என்னும் 'நன்னல'மாய்த் தழைக்கச் செய்வோம்.

நமக்குப் பாடத் தகுந்த குரல் அமைப்புப் பெற்றிருந்தால் அதனை, மேலும் வளமாகப் பாடிடும் தகுதியானதாக, இனிமை யானதாகச் செய்யப், பாடிப்பாடிப் பயிற்சி செய்யலாம். செய்த பின், இறைவனை ஏற்றிப் போற்றிப் பாடும் பாடல்களைப் பாடி மற்றவர்களை மகிழ்விக்கலாம்! அந்த மகிழ்ச்சியில் இறைமையின் மகிழ்ச்சியைக் காணலாம். இனியகுரல் வளம்தான் என்பதில்லை; கவிதை இயற்றுவதோ, ஓவியம் வரைவதோ, அறிவியல் கருவி படைப்பதோ எனும் எத்தகைய பேறு அருளப் பெற்றிருந்தாலும் அதனைப் பொன்னே போல் காத்துப் பேணிப் பெருக்கி மற்ற வர்க்கும் பயன்படுமாறு மகிழுமாறு செய்யும் அரிய பரிசளிப்பாகச் செய்திட - அளிக்க நம்மை நாம் பயிற்றுவித்துக் கொள்ள வேண்டும்.

வலிவற்ற ஏதுமற்ற எளியரை ஏழையரை - நல்லவரை - நலிந்தவரை அவர்கள் துன்பதைத்தைத் துயரத்தை நாம் தாங்கிக் கொள்ளவேண்டும் என்பதற்குதான், எல்லாம் வல்ல கடவுள் நமக்குப் போதிய வல்லமையைத் தந்துள்ளது! திறனற்றுத் திக்கற்றுப் போனவர்களைத் தூக்கி நிறுத்திச் செயல்வல்லவராகத் திறமைசாலிகளாக மாற்றுவோம், மாற்ற வேண்டும் என்பதற்கா கத்தான் நமக்குக், கடவுள் தம் திறனையெல்லாம் நம்மில் தந் தருளியது.

எங்கெங்கும் வலிவற்றவர்களும் திறமையற்றவர்களும் இருக் கிறார்கள். ஒரு சாரார் தொடர்ந்து கல்வி கற்றபடிதான் இருக் கிறார்கள். அவர்களுள் யாருமே 'மீட்பு' அல்லது 'மீட்சி' பெறும் உண்மை நிலையை எண்ணியும் பார்ப்பதில்லை; எண்ணிப் பார்த்து மீட்சி பெறும் திசை நோக்கி வருவதும் இல்லை! இப்படிப் பட்டவர்களைத் தூக்கி நிறுத்தும் வல்லமையான அன்பு கொண்டு செல்வோம்; எதற்கும் பயனற்றவர்களைப் பயன்மிக்க வரை தன்னலம் அற்றவராக மாற்றுவோம். அதற்கு, நமக்காக நம் நல்வாழ்விற்காகச், சான்றோர் தம்மையே தந்தது போல, நம்மை மற்றவர்கள் வாழ்ந்திட உயர்ந்திடத் தருவோம் என்று உறுதி பூணுவோம்.

அன்பு அதன் பணியாற்றுவதில் எத்துணை வலிமை வாய்ந்ததாக இருக்கிறது என்பதனைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் நாம். ஒருவர் மற்றொருவரைப் பார்த்துச் சொன்னார், "யாருக்கும் எதுவும் செய்துவிட அவளால் முடியாது என்பது நான் பார்க்கும் போதே சொல்லிவிடுகிறேன். எப்படி? அவளிடம் பணம் ஏதும் இல்லை. அவளுக்குப் போதுமான கல்வியில்லை; செவிலித்தாய் பயிற்சியும் பெறவில்லை; வீணாக ஏனோ அவள் இந்த மருத்துவ மனைக்கு வந்திருக்கிறாள்" என்று அந்த நோயாளி. அப்படிச் சொன்னதைக் கேட்ட அங்கிருந்த மற்றொருவர் நோயாளியைப் பார்த்து அவளிடம் அன்பு இருக்கிறது என்றார். வந்திருந்த அந்த மாது, காய்ச்சல் கண்டவரின் நெற்றியில் கை வைத்ததும் சற்று நேரத்திற்கெல்லாம் காய்ச்சல் தணிந்தது. காய்ச்சல் தணியப் பெற்ற நோயாளி, புன்னகைத்தவாறு சொன்னார் "இயேசுவே வந்து என் நெற்றில் கை வைத்தது போன்று இருந்தது என்றார். அருகில் இருந்த வேறொருவர் காய்ச்சல் தணியப் பெற்றவரைப் பார்த்து, "நீங்கள் சொன்னதைக் கொண்டு உங்களைத் தவறாகக் கொள்ள வில்லை, கவலை கொள்ளற்க! என்று சொல்லித் தேற்றினார்.

அனைத்தினும் ஓங்கி உயர்ந்து படர்ந்து தழைந்த இயேசு என்னும் தெய்விக மரத்தில் கிளைத்த கிளைகள்தோறும் அன்பின் கனி பழுத்துப் பயன்தரக் கிடைக்கின்றன.

## அன்புடன் நடத்தல்

நடத்தல் என்பது அன்றாட ஒழுக்கம். உன்னை நோக்கி அன்பில் நடந்துவந்த சால்பினரைப் போன்று உலகின் மாந்தர்களும் அன்பில் நடக்கிறார்கள்.

அன்பின் வழி நடந்தால், அன்பே அன்றாட ஒழுக்கமாகக் கொண்டால், அடடா! எவ்வாறு அழகான வாழ்க்கை அமைகிறது. செவிக்கினிய இன்னிசையும் சிரிப்பும் நிறைந்த இயற்கையின் உயிர்ப் பூங்காவன்றோ அன்பு!

ஆர்வமிக்க - தயவார்ந்த செயல்கள், அன்பார்ந்த பார்வை, சிறு பரிசளிப்பு ஆகியவை அன்புடன் நடப்பதன் - ஒழுகுவதன் பிரிவுகளே!

காலையில் நமக்கு முன்பே கண்விழித்து எழுந்த அன்னை, தன் அன்பினைத் தன் குழந்தையிடம் கொண்டதன் வெளிப்பாடு அன்றோ வீட்டில் அங்கும் இங்குமாக அலைந்து தேடித் தேடிப் பொம்மைகளையும் விளையாட்டுப் பொருள்களைக் கொண்டு வந்து ஓரிடத்தில் சேர்ப்பது.

கணவன் கடமை ஆற்றிடச் செல்ல வேண்டியதற்கு ஆவன செய்வதும், பிள்ளைகள் பள்ளிக்கும் செல்ல வேண்டியதற்கான பணிகளையும் செய்து அதற்கும் முன்பாகக் காலை உணவையும் சமைத்து வைக்கிறார். உணவறையில் உணவருந்தும் பலகையில் உணவைப் பரிமாறி வைத்துவிட்டுக், கணவன் மட்டுமின்றி அன்புப் பிள்ளைகளும் ஒருவர் பின் ஒருவராக வருவதனை எதிர்பார்த்துக் காத்துக் கிடப்பாள். இல்லத்தரசியாக விளங்கும் அன்னை அவள்தான் அவ் வீட்டின் அரசி! பிள்ளைகளின் தந்தையும், தன் கணவனுமான தலைவன்தான் அரசர்! அந்த இல்லறப் பேராட்சியில் அவள் பெற்ற பிள்ளைகள்தாம் அரசாங்கம். என்ன அற்புதமாக இடம்! ஆர்வமற்ற சொல் அங்கே பேசப்படுவதேயில்லை! தன்னல மிக்க செயல்கள் இல்லை அங்கே! அங்கே ஒவ்வொருவரும் அடுத்தவரை மகிழ்விப் பதற்காகவே வாழ்ந்து வருகிறார்களோ எனும்படி ஒரு வியப்பு நிலை!

அந்த இனிமையான நிலையினைக் கணவன் தன்னுடனே உள்ளத்தில் கொண்டு செல்கிறார் அலுவலகத்துக்கு! பிள்ளைகளும் பள்ளிக்குப் படிக்க வேண்டிய நூல்களோடு சுமந்து கொண்டு செல்கிறார்கள். அன்னையோ, அன்று முழுவதும் பாடிய வண்ணம் பணிகளைச் செய்து பெருமகிழ்ச்சி அடைகிறாள், தன் வீட்டில் நிலவிய இனிய சூழலை எண்ணி எண்ணி!

அண்டை அயல் வீட்டார் வருகின்றார்கள், சற்று நேரம் அளவளாவிப் பேசிச் செல்வதற்காக! அவர்கள் வந்து பேசிய பின் அந்த அன்பு வாழும் இல்லத்தைவிட்டுத் தங்கள் வீட்டுக்கத் திரும்பிச் சென்றிட மனமில்லாதவர்களாக இருக்கிறார்கள். காரணம் என்ன? அவர்கள் வீடு, பாழடைந்த வீடுபோல் காட்சியளிக்கிறது; அன்பு கொண்ட மக்கள் இல்லை அவர்கள் வீடுகளில்! அப்படிப்பட்ட வீடுகளில் இருப்பதைவிட இயேசு ஆண்டவர் சில சமயங்களில் தங்கியிருந்தாரே காடும் காடு சார்ந்த இடமான முல்லை நிலப்பகுதி! அதுபோன்ற காட்டுக்குள் போய்விடலாமா என்றகூட ஏங்கு கிறார்கள்.

யோவான் 14:23ல் ''ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் உரையைக் கைக் கொள்வான்; அவனில் என் தந்தை அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாழ்ந்திருப்போம்'' இப்படி இயேசு சொல்கிறார்.

இயேசுவின் இந்த உரையைக் கண்கூடாகக் காண்கின்ற இல்லமே அன்பு இல்லம். பிறந்தாலும் அப்படிப்பட்ட அன்பு இல்லத்தில்தான் குழந்தைகளாகப் பிறத்தல் வேண்டும். அன்பின் அருளாட்சி நடைபெறும் அப்படிப்பட்ட இல்லங்களில் அல்லவா சிறுவர்களும் சிறுமிகளும் ஓடி ஆடி விளையாடல் கூடும்; நடக்கவும் நல்லன பேசவும் முடியும்! அன்பாட்சி செய்கின்ற அப்படிப் பட்ட இல்லங்களில் ஆடிப்பாடி விளையாடிடும் குழந்தைகள், தாம் வளர்ந்த பின்பு வாழ்க்கை என்னும் மிகப் பெரிய விளையாட்டு களிலும் விளையாடி வெற்றி கொள்ள முடியும்.

நம்முடைய எல்லா இல்லங்களுமே அன்பு இல்லங்களாக மாற முடியும். அப்படி அஃது ஒன்றும் கவிதையில்லை; அது மெய்ப்பொருள் அன்று. எல்லாராலும் முடியாது என்பதற்கு. ஒவ்வொரு நாளும் அன்புடன் நடக்கும் ஒருவருடைய அன்றாட வாழ்க்கையில் நடக்கக் கூடியதுதான்! நடத்திக் காணக் கூடியது தான் அன்பு இல்லம்!

படைக்கப்பட்டுள்ள அனைத்துமே அன்பினை அடிப் படைக் காரணமாகக் கொண்டவைதாம்! உலகில் மனிதன் தோன்றி வாழ்வதற்குக் காரணமும் அன்புதான்! அன்பின் வழிதான் மாந்தர் பிறப்பெடுத்ததே!. இதை எண்ணும் போது எத்தனை அழகானது நம் தோற்றமும் வாழ்வும் என்று வியக்க வேண்டியுள்ளது!

எ.பே. 3:17 "....... நீங்கள் அன்பிலே வேரூன்றி நிலை பெற்றவர்கள் ஆக இயேசுவின் அன்பிலே வேரூன்றி அவ் வன்பிலே நிலை பெற்றவர்கள் ஆகிவிட்டால், வாழ்க்கையில் ஏற்படும் எந்தப் புயலும் நம்மை எதுவும் செய்ய முடியாது!

ஒருவர் ஆழ்ந்த வருத்தத்தில் தோய்ந்தவராக இருப்பதை நான் கண்டேன். அவருடைய இல்லத்தில் இருந்தவர்கள் ஆன்மீகப் பற்றற்று அன்பற்றுப் போனதால் - அனைவரும் வாழ்க்கையில் சுக்கு நூறாகச் சிதறிக் கிடந்தனர். இனி கடைத் தேற்றமே அற்ற நிலைக்குச் சென்று விட்டனர்! உண்மையான புயல் அடித்து அதில் சிக்கிய வீட்டுக் கட்டடம்கூட இப்படிச் சிதறிச் சிறுமையாகி விட்டிருக்காது.

புயலால் பாதிக்கப்பட்ட அந்த இல்லத்தை விட ஆன்மீகப் பற்றற்றதால் அன்பற்ற தன்மையால் அவர்கள் உள்ளங்கள், நொறுக்கப்பட்டுத் தூள் தூளாகச் சிதறிக் கிடப்பதன் நிலை மிகக் கேடானது.

ஓர் இல்லதரசியைக் கண்டேன்; அவர் அமைதியான வடிவம்; பண்பின் கொடுமுடி! எப்போதும் எதற்காகவும் சீர்கெட்ட சொல்லை உதிர்த்ததே இல்லை. அவ் அம்மையாரின் வாயிதழ்கள் அம்மையாரின் உள்ளத்தில் எந்தக் காழ்ப்புணர்ச்சியும் வெறுப் புணர்ச்சியும் கொண்டதல்ல எனக்காட்டும். அவ் அம்மையார் தம் கணவரை அன்புடன்தான் விரும்பி வந்துள்ளார். அடங்கித்தான் வாழ்க்கை நடத்தி வந்துள்ளார். அழகான வாழ்க்கையினையும் ஒழுங்கையும் அழித்து விட்டார் அவருடை கணவர்! அதுபற்றி அவர் மனைவி கொண்டுள்ள ஆறாத் துயரம் அளவிடற்கு அரியது. அந்த அம்மையாரின் அன்பு உள்ளம் இன்னும் அவருடைய கணவர் வருகையை எதிர்பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது. அதனை அவர் அறியாததால் அன்றோ, தம் மனைவியின் அன்பினைக் கொன்று விட்டார்; தூயதான அன்பினை வதை செய்துவிட்டார்.

அன்பு அவர் வருகைக்காகக் காத்துக் கிடக்கிறது, மனைவியின் கோலத்தில்! இயேசு ஆண்டவர் மரித்தோரிலிருந்து

உயிர்த்து எழுந்து வந்ததுபோன்று மீண்டும் அன்பு கொண்டு, கொடிய மனப்பான்மையில் புதைந்து போய்விட்ட தம் கணவர் எழுந்து மீண்டும் வர மாட்டாரா என்று ஏங்கிக் கொண்டிருக்கிறது மனைவியில் தோய்ந்து கிடக்கும் அன்பு. அந்தக் கணவர் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்று. பொல்லாத போக்கில் புதைந்துவிட்ட அவர் புலரும் பொழுது போல ஒளிமயமான அன்புலகம் நோக்கி ஒரே ஓர் அடியெடுத்து வைத்து நடக்கத் தொடங்கிட வேண்டியது தான்.

நாம் அல்லது எல்லாவுயிருமே வாழ்ந்து கொண்டிருப்பது அன்பினால்தான். அன்பின் அடிப்படையில்தான்! நம் வாழ்க்கையைச் சிறந்ததாக - உயர்ந்ததாக வளநலமாகச் செய்யக் கூடியது ஒன்றே ஒன்று; அதுதான் அன்பு!

அப்படிப்பட்ட அன்பு இரக்கமின்றி, கொல்லப்படுகிறதே! தயவின்றி பசித்துத் தவிக்க விடப்படுகின்றதே! சிந்திக்காமல் புறக்கணிக்கப்பட்டும் மறக்கப்பட்டும் வருகிறதே அன்பு!

நாம் பேசும் பேச்செல்லாம் இரக்கம் உள்ளதாக, செய்யும் செயல்களில் எல்லாம் இரக்கம் வெளிபடுவதாக இருக்க வேண்டும் என்று எண்ணுகிறோம். ஏன்? இரக்கத்தில், தயவில், கனிவில்தான் அன்பு வளர்கிறது. இத்தனையும் தெரிந்திருந்தும் நாம் நமது வாழ்க்கைப் போராட்டங்களைச் சந்திக்கும் போதெல்லாம் அன்பினைப் பற்றியும் அதனை வளர்க்கும் இரக்கத்தையும் ஈதலையும் மறந்தே போகிறோம்.

அன்பினை நினையாமல் மறந்து போகின்ற 'மறதி'யையும் அந்த மறதியினால் ஏற்பட்ட அன்புச் சிந்தனையற்ற தன்மையினையும் நாம் எப்படிச் சீர் செய்யப் போகின்றோம்? தெரியவில்லை!

இயேசுவின் நெஞ்சத்தில் நம் அன்பு வேரூன்றச் செய்திட வேண்டும்; வேரூன்ற நிலைபெறச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால், தந்தையின் நெஞ்சத்தில் ஓங்கும் ஆற்றலைப் பெறலாம். அவ் ஆற்றலைப் பெற்றால் நாம் அன்பினை, எப்போதும் எதற்காகவும் மறவாத நிலை பெறுவோம்!

அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய முழுத்தன்மையாலும் நிறைபடவும்; என்றெல்லாம் சொல்லி, "அன்பினால் ஒருவரை ஒருவர் தாங்கி, நட்புவழி காட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்

கொள்வதற்கு'' என்று மென்மையாகத் தன்மையாக நமக்குச் சொல்லப்படுவது ஏன்?

அன்பினைப் பற்றி இப்படியெல்லாம் சொல்லப்படும் சொற் காத்துப் பேணி வளர்த்துப் வருவோமேயானால் அன்பின் இன்பச் சூழலில் நிலவும் அமைதியினைத் தகர்த்திடும் எந்தச் சொல்லினை யும் சொல்லோம்; எப்படிப்பட்ட செயலினையும் செய்யோம்; நாம் அன்புள்ளவராக இருந்தோம் என்றால் நாம் பேசுவதெல்லாம் கனிவாக, அன்பாதரவானதாக உண்மையாகவே இருக்கும். அப் படித்தான் பேசுவோம்.

'நயந்தோர் புன்கண் தீர்க்கும் பயன்தலைப்படா அப் பண்பினர்' வாயிதழ்களில் இருந்து வரும் சொற்கள் வேண்டு மானால் திருத்தத்திற்கு உரியனவாக இருக்கலாம். ஆனால் அச் சொற்கள் எல்லாம் அன்பில் ஊறியவை - தோய்ந்தவை!

அன்பு ஓங்கி ஆட்சிச் செய்யும் நெஞ்சத்திலிருந்து வெளிக் கிளம்பி வரும் சொற்கள் எல்லாம் என்றும் எங்கும் வாழ்பவை; நிலைத்து நிற்பவை. அச் சொற்கள், நம்மைச் சுற்றிலும் உள்ள காற்று மண்டலத்தையே கமழச் செய்கின்றன; துறக்கத்தின் தெய்வீக மணம் கமழச் செய்கின்றன என்றால் மிகையல்ல. உண்மை; வெற்றுச் சொல் இல்லை!

கடவுளானவர் கிறித்துவுக்குள் கனிவாகவும் அமைதியாகவும் இருந்ததுபோல் நம்மிலும் ஒருவரில் ஒருவர் அன்பு கொண்டால், நாமும் கனிவும், அமைதியும் வாழும் நெஞ்சத்தைப் பெற்றவர்கள் ஆவோம்.

அன்பில் நாம் வாழ்கிறோம்; வாழ்வோம். அன்பின் வரை றறைக்குள்தான் நாம் சிந்திக்கிறோம் - சிந்திக்க வேண்டும். அன்பினில் வாழ்ந்து அன்பு வரையறைக்குள் சிந்தித்த உலகை வாழ்த்துவோம்; வாழ்த்தி வாழ்வோம்.

அகமும் புறமும் நம் அன்பில் இணையின்
உகந்தெழும் வையத் துயிர்.

## அன்பு மனப்பாங்கு

**மா**ந்தர்களாகிய நமக்கு அன்புப் பின்னணி உண்டு. அன்பின் வழி வந்த பெற்றோரின் மரபு நமக்கு இருக்கிறது. கடவுளால் படைக்கப் பெற்றோம். கடவுள் அன்பாயிருக்கிறார்.

கடவுளின் இயல்பினில் இணைந்து அவ் இயல்பினை நம்மில் கொண்டுள்ளோம். கடவுளின் இயல்போ, அன்பு! புதிய படைப்பு! அன்பின் படைப்பு! அந்தப் புதிய படைப்பின் வடிவமைப்பு அன்பு. அந்த அன்பினால் உருவாக்கப் பெற்றவர்கள் நாம்.

அன்பு உங்களுடைய இயல்பாகும் என்றால், உங்களில் அரியணை போட்டு அமர்ந்து கொண்டிருந்த தன்னலம் தூக்கி எறியப்பட்டு விடும்.

ஆனால் என் செய்வோம், தன்னலமிக்கவரால் சூழப் பட்டிருக்கிறோம்; தன்னலத்தால் சூழப்பட்டிருக்கிறோம். இயற்கை யாக நம் வாழ்க்கையுடன் தொடர்புடைய அத்தனையும் தன்னலப் பண்பும் வண்ணமும் கலந்தனதாகவே இருக்கின்றன. அந்தத் தன்னலப் பாங்கினை, விலங்குகளிடத்தில் காணலாம். பொதுவாக எல்லா இடத்தும் தன்னலமிக்க மனிதனைக் காணலாம்!

நம்முடைய தொழில் - முதல் அதாவது, தொழிலாளி முதலாளி வகுப்பு போர் நடைபெறக் காரணமே இந்தத் தன்னலம்தான்! உலகில், இதற்கெல்லாம் தேவையான ஒன்று நிலையான அடையாளம் எனப்படும் கடவுளின் இயல்பான அன்புதான்! அத்தகைய அன்பினை நாம் எங்கெங்கும் எல்லாரிடத்தும் நின்று நிலைத்தோங்கச் செய்ய வேண்டும். அன்பினுக்கு அனைவரும் ஆட்பட வேண்டும். அதுவொன்றே நாம் செய்ய வேண்டியது. மீண்டும் படைக்கப் பெற்ற உயிர்ப்பின் அகத்தூண்டுதல் உணர்ச்சியினைப் பெற்றால் நாமும் அன்பில் வாழ்ந்த பண்பாளர் போன்று வாழ்ந்திடலாம்.

ஆயினும் நாம் என்ன செய்கிறோம்...... நம்மில் புதிதாக மீட்டும் படைக்கப் பெற்ற உயிர்ப்பின் அகத்தூண்டல் உணர்ச்சிக் கனலையே அணைத்துவிடுகிறோம். அதோடு அன்பாக இருப்பது என்பது நம்மால் முடியாதது. அன்பாக இருக்க வேண்டும் என்று நம்மை அன்பில் இணைத்துக் கொள்வதுகூட நம்மால் ஆகக் கூடியது இல்லை என்று சொல்கிறோம். அதுமட்டுமில்லை அன்பு நெறியில் நடக்க நாம் அஞ்சுகிறோம்.

அன்பினை உலகில் வெளிப்படுத்திய சான்றோரை, அவரைக் காட்டும் நூல்களைக் கூட சார்ந்து நிற்க நம்பிக்கை வைத்திட அஞ்சு கிறோம். நம்மில் இயல்பாக இருக்கிற அன்பைக் கூட வெளிப்பட விடப் பயப்படுகிறோம்.

இத்துணை ஏன்? எல்லாம் வல்ல இறைமை நம்மோடு இருக்கிறது என்று எண்ணிப் பார்க்கக் கூட நாம் கருதுவதில்லை.

ஏசாயா 41:10, "நீ அச்சப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் கடவுள்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்கு உதவி பண்ணுவேன்;என் அறத்தின் வலது கையினால் உன்னைத் தாங்குவேன்"

இப்படிச் சொல்லப்பட்டதோடு, மேலும் சொல்லப்படு வதைப் பாருங்கள். "உன் இறை நான் அன்பாயிருக்கின்றேன். உன்னை விரும்பவிடு; உன்னில் அன்பு கூர்ந்திட விடு; உன்னையும் உன்னை உள்ளடக்கிய மானுடத்தையும் நான் வாழ்த்தியருளுவேன்" என்றெல்லாம் இறை மொழிகள் நம்மை அறிவுறுத்துகின்றன. ஏதோ ஒட்டுமொத்தமாக யார் பொருட்டோ சொல்லப்பட்டதா இது? இல்லை. மானிட உயிர்க்குக் கடவுளின் அன்பு மொழியல்லவா? இனியேனும் இவற்றை எல்லாம் நினைவிற் கொண்டு அன்பு உள்ளம் படைத்தவராவோம்.

நம்மில் ஏனோ அச்சம் குடிகொண்டுவிட்டது. அதனால்தான், அன்பு நம்மில் உள்ளிருந்து ஊக்குவித்துச் செயல்படு முன்னமே அன்புக் கனலை அணைத்துவிட்டோம். அன்பு எப்போதுமே இப்படித்தான் செயல்பட வேண்டும் என்று கட்டளையிடும் துணிவினைக் கொண்டதில்லை!

கணவன் மனைவி ஆகிய இருவருமே ஒருவர்க்கொருவர் சண்டையிடாமலிருக்கும் தந்திரம் ஒன்று தெரியுமா? பெரிய உள்ளம் வேண்டும்; அன்புள்ளம் வேண்டும்; தவறாகப் பேசியவர் தவறு செய்தவர் கணவனாக இருந்தால் மனைவியிடம், மனைவி யாக இருந்தால் கணவரிடம் "என்னை மன்னித்துவிடு. இனி நான் ஒருபோதும் அப்படிப் பேச மாட்டேன்; செய்ய மாட்டேன்" என்று அன்பாகச் சொல்லிப் பாருங்கள். பிறகு எப்படி சண்டையோ மனக் கவலையோ வருகிறது பார்க்கலாம்.

அன்பில்லாதவராக இருப்பீர்களேயானால் அதை ஒத்துக் கொள்ளுங்கள் முதலில். பிறகு அன்பில்லாத உங்கள் வெற்று நெஞ்சத்தில் அன்பினைக் கொண்டு நிரப்புங்கள். அதன் பின்பு பாருங்கள் உங்கள் வீட்டில் உள்ளவர்களிடையே மனத்தாங்கல், வீண் சண்டை ஏற்படக் காரணமாயிருந்த உங்கள் செய்கைகளை நீங்களே நிறுத்தி விடுவீர்கள். பிறகு அன்பு நிலவும் ; நேயம் குலவும்

உங்கள் வீட்டில் இருப்பவர்களிடையே அன்புள்ளம் கொண்டீ ரானால் இல்லத்தரசிகளே! உங்கள் உள்ளத்தில-இல்லத்தில் இயேசு கிறித்து வந்துறைகிறார். இல்லத் தலைவர்களே! அன்புள்ளம் கொண்டீர்களேயானால் உங்கள் அன்பு உள்ளங்களில் - இல்லங் களில் இயேசு பெருமான் வந்து வாழ்வார். உங்களின் அன்பு நிறைந்த வாழ்க்கையில் குடும்பத்தில் எந்தச் சிக்கல்களும் - பாடுகளும் தோன்றா; அமைதி நிலவும்.

*1* யோவான் *4 : 1*இல் சொல்லப்பட்டுள்ள உரையில் ஒவ்வொருவரின் நெஞ்சக் குரலுக்கும் ஒவ்வொரு சிக்கலுக்கும் சரியான விடை பொதிந்து உள்ளது என்பது என் நம்பிக்கை. இதோ அந்த உரை "கடவுள் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து பற்றுறுதிக் கொண்டிருக்கிறோம். கடவுள் அன்பாகவே இருக்கிறார். அன்பில் நிலைத்திருக்கிறவன் கடவுளில் நிலைத் திருக்கிறான் கடவுளும் அவனில் நிலைத்திருக்கிறார்"

மேலே சொன்னபடியே, நாம் அன்பை விரும்பியிருக் கிறோம். அன்பில் நம்பிக்கை கொண்டுள்ளோம். அந்த அன்பு என்றுமே தோல்வியுறாது என்றும் நாம் நம்பியிருக்கிறோம்.

ஒவ்வொன்றும் தோல்வியைத் தழுவியிருக்கிறது. எடுத்துக் காட்டாக நம் மானுடத்தின் அறிவு தோல்வியுற்றிருக்கிறது. நம் மானுடத்தின் திறன் தோல்வி கண்டிருக்கிறது.

நம்முடைய வாழ்க்கையை ஓட்டாண்டியாக விட்டோம். பொருளற்று நொடித்த நிலைக்குத் தள்ளிவிட்டோம். நொடிந்து போகச் செய்து விட்டோம். காரணம் என்ன? வாழ்க்கையில் அன்பினை இட்டு நிரப்பத் தவறிவிட்டோம். அதனால் பொருளற்ற நிலையினைச் சரிப்படுத்தும் பொறுப்பினை அன்பினிடமே விடப் படல் வேண்டும்.

## அறிவராய்ச்சித் திறனின் தோல்வி

**உ**லகோரே! நீங்கள் அறிவுக்குட்பட்ட வழியிலேதான் மீட்பினைக் கொண்டு வந்திட வேண்டும் என்று நினைக்கிறீர்கள். ஒருகாலும் முடியாது. உங்கள் அறிவு தோற்றுவிட்டது. நீங்கள் தோற்றுப் போனீர்கள். உங்கள் பழைய மானிட அன்பும் தோல்வி கண்டுவிட்டது.

உங்களுடைய கல்வி, பயிற்சி, ஆய்வு இன்ன பிற எல்லாம் உங்களை வெற்றி பெற்றிடச் செய்ய இயலாதன ஆயின. உங்கள்

அறிவு இருக்கும் இடத்தில் அன்பினை அமர்த்துங்கள். பிறகு எல்லாம் அதனதன் படியே நடக்கும். அதற்கு நீங்கள் செல்ல வேண்டிய வழி - அன்பு வழி என்பதை மட்டும் கடைப்பிடித்தால் போதும்.

வீட்டில் இருக்கும் போது மட்டும் அல்லாமல், கடைக்குள் இருக்கும்போதும், பள்ளியில் இருக்கும்போதும் மற்ற எந்த இடத்திற்குப் போனாலும் எந்த மக்களிடம் தொடர்பு கொண் டாலும் அங்கெல்லாம் - அப்போதெல்லாம் நீங்கள் அன்புள்ள வராக - அன்பராக இருக்கிறோம் என்று எண்ணியிருக்க வேண்டும் என்பது கட்டாயத் தேவை.

மற்ற ஆண் பெண் சுமக்கும் சுமைகளையும் நீங்கள் சுமந்திட வேண்டும். இயேசு பெருமான் என்னென்ன அன்புப் பணி செய்தாரோ அவற்றையெல்லாம் நீங்களும் செய்திடல் வேண்டும் என்ற முனைப்பு உங்களுக்கு வேண்டும். முனைந்து பிறர் துன்பங்களை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். உங்களிடத்தில் இயேசு இருந்தால் என்னென்ன பணி செய்வார் என்பதை எண்ணிப் பார்த்துச் செய்யுங்கள்.

அன்பு என்பது தனித்து வருவதில்லை; அன்பு கொள்ளுமாறு செய்யும் ஆற்றலோடு வருகிறது. அன்பினால் என்னென்ன ஆக்கப் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டுமோ, அவற்றை நீங்கள் செய்யுமாறு உங்களைப் பின் நின்று தூண்டியும் இயக்கியும் வரக்கூடியது அன்பு!

உங்களைத் தெய்விக நிலைக்கு உயர்த்தும் அன்பு, தெய்வத் திரு ஆகிய இயேசு செய்த பணிகளையெல்லாம் செய்விக்கும் அன்பு. தேவையான பணம், வேண்டிய சுற்றம், நட்பு ஆகிய மக்கள், செல்வாக்கு ஆகியவற்றைத் தேடி அவற்றைச் சார்ந்து நிற்கும் பணிகளாகிய எளிய மக்கள் செய்யும் பணிகளைத் தான் நீங்களும் செய்து கொண்டிருந்தீர்கள். ஆனால் இப்போது அவற்றையெல்லாம் விடுத்து இயேசுவின் நற்பணிகளைப் - பொற் பணிகளை ஆற்றும் அன்புப் பாதைக்கு மாறிவந்து விட்டீர்கள்.

நீங்கள் சில சமயம் நினைக்கக்கூடும், நம்மால் ஆவதென்ன? அன்பு கொண்டால் மட்டும் போதுமா? நாம் கடன்பட்ட அத்தனையும் தீருமா? தீர்க்கப்படுமா என்று. அன்பின் வயம் உங்களை ஒப்படைத்துப் பாருங்கள் பின்பு அறிவீர்கள் என்ன நடக்கிறது என்று!

"என்னிடம் இன்னும் கொஞ்சம் பணம் மட்டும் இருக்குமே யானால், ஏழை எளியருக்கெல்லாம் உதவி செய்வேன்" என்று சிலர் சொல்லுகிறார்கள்.

உங்களிடம் உள்ள சிறிய தொகையினைக் கொடுத்து இப்போது உதவி செய்யவில்லை என்றால், நிரம்ப உங்களிடத்தில் செல்வம் வரும்போது இல்லாத மற்றவர்க்கு உதவி செய்ய முடியுமா என்றால் முடியாது. இப்போது, ஏழை எளியவரின் துன்பங்களில் பங்கு கொள்ளவில்லை என்றால், பிறகு எப்போதும் அவர்கள் துன்பங்களில் பங்கு கொண்டு அவர்களைக் கரையேற்ற முடியாது; கை தூக்கிவிட முடியாது. அன்பு ஒரு பிடிச் சோற்றையும் பங்கிடும்; ஒரு பிடி அரிசியினையும் வாரிக் குறைத்துவிடும்.

இன்று, உங்களைப் போன்ற நிலையில் உள்ளவருடைய மக்களின் துன்பத்தைச் - சுமையை மட்டும் நீங்கள் ஏற்றுக் கொள்ள முன் வந்திருக்கிறீர்கள். அதுபோதும். பிறர் அன்புக்கு உங்களை ஒப்படையுங்கள். அந்த அன்பு இயேசு உலகுக்கு அளித்த பொற்பொருளும் நற்பொருளும் போல உங்கள் சார்பில் ஆணையைச் செய்யும்; அரும்பணி ஆற்றும், அடுத்தவர் சுமையைக் குறைக்கும் உங்களை ஆளும் அன்பு!

வஞ்சனையாளர்களைக் - கள்ள வேடதாரிகளை அன்புடன் விரும்புவது என்பது அத்துணை எளிதான செயல் அன்று. ஆனால், இயேசு அன்பு காட்டினார் அத்தகைய கள்ள வேடதாரி யிடம்! நீங்களும் அப்படிச் செய்யலாம்; செய்ய முடியும்.

விருந்து அளித்த போது உணவு அருந்தும் மேசையினைச் சுற்றி அமர்ந்தவர்களில் யூதாசுகாரியத்து என்னும் பெயர் கொண்ட யூதாவும் அமர்ந்து இருந்தான். முப்பது காசுகளுக்குத் தன்னைக் காட்டிக் கொடுத்திடத் திட்டம் போட்டிருந்ததையும் இயேசு கிறித்து அறிந்து வைத்திருந்தார். அப்படியிருந்தும் காட்டிக் கொடுக்கவிருந்த யூதாவிடம் அன்பு காட்டினார் இயேசு.

அன்புப் பணியாற்றித் தம் கைகளில் ஆணிகளை அடித்த வனிடம் கூட அன்பு காட்டினார் இயேசு.

அத்தகைய அன்பின் திருவாகிய இயேசு கிறித்து ஆற்றிய அன்புப் பணிகளை நீங்களும் ஆற்றிடலாம். எப்படி என்பீர்கள்! இயேசுவின் அன்பில் நிலைத்திருக்கிற உங்களில் இயேசு நிலைத்திருக்கிறார். ஆகவே; இயேசுவின் இயல்பான அன்பும்

பண்பும் திறனும் உங்களிடத்தில் நிலைத்திருக்க வேண்டாமோ! அந்த அன்பினால் திறனால் நீங்களும் இனி, இயேசுவைப் பின்பற்றி, இயேசுவின் அடிச்சுவட்டில் அன்புப் பணியாற்றுங்கள்.

அன்பின் பணிக்கே நாம் ஆட்பட்டு அடிதொடரின்
மன்பதையை மாற்றிடலாம் நாம்.

## அன்புக்கும் கவர்ச்சி சேர்ப்போம்

நாம் பிறர்க்கு அளிக்கும் அன்பளிப்பு ஏதாயினும் அதனை கவர்ச்சியுள்ளதாகத்தான் பார்த்து தான் அளிக்கிறோம். அதேபோல, அளிப்பது வழங்குவது என்பதையும் ஓர் அற்புதக் கலையாகக் செய்தல் வேண்டும். நமக்குத் தேவையான, நம்மைத் தொடர்பு கொண்ட அத்தனைக் கலைக்கும் மேம்பட்டு, விளங்கும் கலையாக வழங்கும் கலையினையும் செய்திடல் வேண்டும்.

அந்தக் கலையினையும், அதாவது ''பிறருக்கு வழங்குவது'' ''அடுத்தவர்க்கு அளிப்பது'' என்னும் கலையினையும் வழங்கு வது, அளிப்பது, நம் கடமைகளுள் ஒன்று எனக் கருதாமல், 'மனித நல நாட்டக் கடன் என்னும் நினைவில் - நிலையிலிருந்து, வழங்கு கின்ற, அளிக்கின்ற கலையாக மாற்றிக் கொள்ள வேண்டும். இயேசு வழங்கியது எல்லாம் ஏன் எதற்காக என்பதனைப் புரிந்து கொண்டு, அத்தகு உயர்ந்த நோக்கில் அன்பின் அடிப்படையில் வழங்குதல் வேண்டும். இயேசு கிறித்து, எண்ணம், மொழி, செயல் அளித்ததன் - வழங்கியதன் திறன் அறிந்து - பொருள் அறிந்து வழங்கினார். அதனை நாம் கற்றுத் தெறிந்து தேர்ந்து பின்பற்றியே நாம் நல்லது எதை வழங்கினாலும் அளித்தாலும் பிறர்க்கு வழங்க வேண்டும். அளிக்க வேண்டும், தருதல் வேண்டும்.

கொடுப்பது அளிப்பது வழங்குவது தருவது அல்லது செய்வது ஆற்றுவது புரிவது ஆகிய எதைச் செய்தாலும் அதனோடு அன்பினைக் கலந்தால், அது பெறுபவரின் மனத்தில் - பெற்ற மகிழ்ச்சி நிறைவதோடு தெய்விக மணமும் சேர்ந்து கமழும்.

## அன்பு எப்படியெல்லாம் அளிக்கிறது...!

அன்பே முன்வந்து அளிக்கின்ற போது, அன்பின் அடிப்படையில் அளிக்கின்றபோது அது நமக்கு இல்லாமையை அளிக்காது, உளமார அன்பாரக் கொடுத்த கையை ஏதும் இல்லாத

கையாக வெற்றுக் கையாக ஆக்காது. சுருங்கவும் விளங்கவும் சொன்னால், கொடுக்கக் கொடுக்கக் கூடுமே தவிர குறையாது. அள்ளித் தர தரப் பெருகுமே தவிர குறையாது. மனித நலநாட்ட அடிப்படையில் வழங்கினாலும் கூட வழங்க வழங்க, வழங்கப் பட்ட பொருள் குறைந்து, வறுமையில் தள்ளிவிடும் இன்மையாகி விடும் அரசு கொடுக்கிறதே, அதன் கருவூலம் குறைவ தில்லையே என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா, குறையாது நிறையும். ஆனால் அரசாங்கம் அளிக்கும் எல்லாமே நமக்கு நல்லது விளைப்பதில்லை. ஒரு சாபக்கேடு என்றே சொல்ல வேண்டும்.

உலகையொட்டி வாழும் மாந்தர் எவரும், கொடுத்து உதவுவாரை உயர்ந்த நிலையில் வைத்து எண்ணிட மனம் இல்லா தவர்கள். ஆகவே, ஏதோ ஒருவருக்கு நன்றினைக் கொடுத்தோம் என்பதைவிட, கொடுக்காமல் இருப்பது மேலானது. கொடுப்பது வழங்குவது அளிப்பது - தருவது உதவி புரிவது ஆகிய சொற்கள் ஒன்றின் மாற்றுச் சொற்கள் ஆகும். எனவே நாம் வழங்குவதையும் ஓர் அழகான கலையாக நுண்கலையாக ஏன் உயர்த்தக் கூடாது?

அன்பின் சிந்தை நமக்கு இருக்குமேயானால், அந்த அன்பு நம்மை உதவி புரிவதனை ஓர் அழகுக் கலையாகவே மாற்றிடும். நம்முடைய சொல்லிலும் செயலிலும் அன்பு நோக்கம் வருகின்ற வரையில், நம் சொல்லிலும் செயலிலும் அன்பு ஒன்றே சிந்தையாக இருக்க வேண்டும்.

என்ன சொன்னாலும் நம் மனம் நம் போக்கிற்கு விடு வதில்லை; நீங்கள் ஏதாவது உதவி புரிகிறீர்கள் எனும் போது அதைப் பார்க்கின்ற கண்கள் பொறுத்துக் கொள்வதில்லை! அடுத்த வரைப் புண்படுத்துகிற கடுமையான பேச்சினைப் பேசி அவர்கள் கண்ணீர் விடும் அளவுக்கு வந்த பிறகு அன்பான வார்த்தைகளைப் பேசுவதில் ஏதேனும் பயன் உண்டா எனில் இல்லை! இருக்காது!

நான் பார்த்திருக்கிறேன், சில குடும்பங்களில் கணவன் மனைவி இருவருமே சிறிய பொருள், ஒன்றினைத் தருவதானாலும் அல்லது ஒரு கைப் பிடி அரிசியை ஒரு பிச்சைக்காரருக்குப் போடும் போது கூட, முகத்தைக் கடுகடுப்பாக வைத்துக் கொண்டுதான் இடுவார்கள். இன்னும் சொல்லப் போனால் ஒரு துண்டு எலும்பை எடுத்துச் சேறும் சகதியுமாக இருக்கிற இடத்தில் தூக்கி எறிந்து விட்டு, தெருவில் அலையும் சொறி பிடித்த நாய் ஒன்றினை அழைத்து, ஏதோ அறுசுவை உணவையே படைத்து விட்டது

போல எண்ணி, "அதோ! எடுத்துச் சாப்பிடு" என்று சொல்வார்கள். அது போன்றே உதவிக்கு வருபவரிடம் தூக்கி எறிவது போலவே கொடுப்பார்கள். அப்படிப்பட்டவர்களை நீங்களும் கண்டிருப்பீர்கள் எங்கும் இருக்கிறார்கள் அப்படிப்பட்ட தணவன் மனைவியர்! இத்துணை எதற்கு? தங்கள் குழந்தைகளிடம் பழித்துக் கொண்டே திட்டிக் கொண்டே எரிந்து விழுந்து கொண்டே கொடுக்கின்ற பெற்றோர்களும் இருக்கிறார்கள், கண்டிருப்பீர்களே.

மிச்சம் மீதி இருக்கின்ற ஒரு கெட்டுப் போன அப்பத் துண்டைக் கூட ஏதோ அறுசுவைப் பண்டம் தருவது போன்று எண்ணித் தருவார்கள்.

ஐந்தமுதம் படைப்பது போல் எண்ணிக் கொண்டு, பழைய கெட்டுப்போன சோற்றைக் கொடுத்துச் சாப்பிடச் சொல்வார்கள். பசியில் வாடும் ஏழைகள் என்ன செய்வர்? சாப்பிடுவர். ஆனால் சுவைத்துச் சாப்பிட்டிருப்பாரா அந்த ஏழை மக்கள், பசித்த மக்கள்?

அதுபோல் எல்லாம் கொடுப்பது தவறு; கூடாது. அது கொடுப்பதம் அன்று; உதவுவதும் அன்று. அதைவிடச் சும்மா யிருப்பது நல்லது. கொடுப்பவர், நல்லதைத் தரவேண்டும்; பெறுவரும், நல்லதைப் பெற்றுக் கொடுத்தவரை நன்றி நினைக்க வேண்டும். ஆகவே தான், யாருக்கு எதைக் கொடுத்தாலும் இயேசு அருளியதுபோல அளிக்க முடியாது ஆனால் இயேசுவைப் பின்பற்றி அளிக்கலாம் அல்லவா? நாம் ஏன் கொடுக்கிறோம்? கொடுப்பதில் பெறுபவர்க்கு நன்மையிருக்குமா? பெற்றுக் கொண்டவர் நன்றி நினைக்க வேண்டாமா? என்று எண்ணிப் பார்த்துக் கொடுத்திட வேண்டும். அன்பார்ந்த நெஞ்சம் கொண்டு கொடுத்திடுங்கள். உங்கள் பணியில் எத்துணை ஈடுபாடும் அன்பும் கொண்டு வெற்றி கொள்கிறீர்களோ அத்துணை அன்பும் மற்றவர்க்கு உங்களால் ஆகின்ற பணியில் உதவிபுரிவதில் இருத்தல் வேண்டும்!

எனக்குத் தெரிந்த ஒரு வணிகர், இராப்பகலாகக் கடுமையாக உழைத்தார். உழைத்ததால், உழைப்பின் பயனைக் கொண்டார்! வளம் பெற, பெற்ற வளத்தினைப் பேணிக் காத்திட, வளம் பெறச் செய்த பணியினைத் தொடர்ந்து நடத்திட இராப்பகலாக உழைத்து வந்தார். அப்படிப்பட்ட வளம் நிறைந்த செல்வ நாள்களில் அன்பைப் பற்றிய எண்ணமே இல்லை. அன்பு என்னும் ஓர் அற்புத ஆற்றல் இருப்பதாகக் கூட ஒரு நினைவில்லை. அன்பு

என்ற சொல்லையே கூட மறந்துவிட்டிருந்தார் அந்த வணிகர். அப்படிப்பட்ட நாள்களில் ஒரு பெண்மணியைக் காதலித்தார்; அவளையே மணந்து கொண்டார். அவளிடம் அன்பாக நடந்து கொள்ள முடியவில்லை, அதற்கு நேரமும் இல்லை. தொழில், பணம் இதில் தான் கவனம் முழுவதும்! முதலில் அந்த வணிகரை மணந்து கொண்ட பெண்மணி, தன்னைக் காதலித்து மணம் புரிந்து கொண்ட கணவன், தொழிலிலும் செல்வம் சேர்ப்பதிலும் அதனைக் காப்பதிலுமே கண்ணும் கருத்துமாயிருப்பதைக் கண்ணுற்றாள்; என்ன செய்வார் நம்மோடு கொஞ்சிக்குலவிட நேரம் போதவில்லை என்று தான் எண்ணி ஆறுதல் பெற்றாள். தன்னைத் தானே ஆற்றிக் கொண்டாள்.

நாள்பட நாள்பட என்ன ஆயிற்று? தனிமையில் வாடினாள்; இளமையின் உள்ளப் பசியால் வாட்டப் பெற்றாள்.

குழந்தைகளையும் பெற்றெடுத்தாள். அந்தக் குழந்தை களிடமாவது அன்பு செலுத்த அந்தத் தந்தைக்கு நேரம் இருந்ததா? நெஞ்சம் இருந்ததா என்றால் அறவே இல்லை. குழந்தைகளுக்குத் தேவைக்குமேற்பட்ட காசு - பணம் தந்து வந்தாரே தவிர அன்பினைக் காட்டவில்லை. சீராட்டவில்லை அதற்கு மாறாகக் குற்றம் கூறினார் அந்தக் குழந்தைகளின் மேல்; கடுகடுத்த முகத்துடன் கடுஞ்சொற்களை அள்ளித் தெளித்தார் அக் குழந்தைகளின் மேல்!

தன் வாணிகம் செழிக்கப் பணத்தில் கொழுக்க இராப்பகலாகப் பாடுபட்டாரே தவிர, சற்றேனும் மனைவி மக்களிடம் அன்பு காட்டினாரல்லர்! பல இலட்சங்களுக்கு உரிமையாளர் ஆனாரே தவிர, மனத்தில் இன்பம் இல்லை; அமைதியில்லை, சிந்தித்தார்; தன் குற்றத்தை உணர்ந்தார்; பணம் பத்துவகை செய்யும் ஆனால் பண்பையும் இன்பத்தையும் தராது என்று உணர்ந்தார்! ஏன் அவருக்கு இன்பமும் அமைதியும் இல்லை. அன்புள்ள மனைவி மக்கள்பால் அவருக்கு உறவு இல்லை; உறவுக்கான அன்பில்லை அதனால் அவருக்கு வீட்டில் இன்பமில்லை.

எனவே உங்கள் பணி ஆயிரம் இருக்கட்டும், செல்வம் ஆயிரம் பெருகட்டும், உங்கள் அன்பும் அந்த அளவுக்கு வீட்டில் மனைவியிடம் மக்களிடம் பெருக வேண்டும். இல்லையேல் அந்த வணிகரைப் போன்று மனைவி மக்கள் இருந்தும் பயனில்லை. இன்பமும் அமைதியும் அற்றுப்போகும் மனைவிமக்கள் உங்கள்

பால் கொண்ட பற்றும் பாசமும் அற்றுப் போவர். உங்கள் வீடு, வீடு இல்லை! காடாகும். உங்கள் வாழ்க்கை, கோடிப்பணம் கொண்டதானாலும் இடுகாடாகும். அன்பற்றுப் போனதால், உங்கள் வாழ்க்கைப் பாலைவனமாகும்.

ஆகவே உங்கள் வாழ்க்கையில் கடைசிவரையில் அன்பு தழைக்கப் பாடுபடுங்கள். அன்பிலும் சிறந்த கவர்ச்சி ஒருவரை மற்றொருவர் பற்றியிழுக்கும் கவர்ச்சி, கவரும் ஆற்றல் வேறு இருக்காது. இல்லை, அன்பில்லாத ஒருவர் வெறும் தோல் போர்த்திய எலும்புக் கூடே என்பதை நெஞ்சில் நிறுத்தங்கள். அன்பின் வழியது உயிர் நிலை.

உங்களிடம் எந்தக் கவர்ச்சியும் காலத்தால் முதுமையால் விட்டு விலகிப்போகும். ஆனால் அன்பு மட்டும் உங்கள் கடைசி வரையும் அழகாகக் கவர்ச்சியாக உங்கள் அகத்தையும் புறத்தையும் காக்கும்; கவர்ச்சி சேர்க்கும் காக்கும்; அருளையும் சேர்க்கும்..

அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு - (குறள் 75)

## அன்பைப் பற்றிய சில உண்மைகள்

நீங்கள் ஆண்டுகள் ஆக ஆக முதுமை அடைவீர்கள் என்பது உண்மைதானே -ஆகவே - வயது முதிர்ந்து முதுமையில் தள்ளாடும் போது உங்களுக்குத் தேவையானவற்றில் முதலாவது அன்பு ஒன்றே! ஆகவே இப்போதிலிருந்தே அன்பினைக் கொஞ்சம் கொஞ்சமாக உங்கள் வயது கூடுதல் ஆவது போலவே அன்பைக் கூடுதலாகப் பெருக்கி வாருங்கள்; சேர்த்தும் வையுங்கள். உங்களுக்குத் தேவைப்படும் நேரம் வரும் அப்போது நீங்கள் உங்களுக்குள் சேர்த்துவைத்த அன்பினைத் தேவையான அளவுக்கு பெற்றுக் கொள்ளலாம். உங்களுக்கு உதவும் உண்மை யல்லாத அனைத்தையும் அழித்து விடும் உண்மையான அன்பு; அன்பின் வெளிச்சத்தில் போலி நிற்காது. தாக்குப் பிடிக்காது. உங்கள் வாழ்க்கையினை அன்புதான் வலுப்படுத்திக் கொண்ட பின்பு உங்கள் நெஞ்சத்தில் இருக்கும் தன்னலத்தை அடியோடு அழித்துவிடும்.

தன்னைப் பேணிக் காத்திடுவது என்பது, தன்னலத்தின் முதற் சட்டம்.

மற்றவர்களைப் பேணிக் காத்திடுவது என்பது, அன்பின் முதற் சட்டம்.

கடவுள் தமது மைந்தரைத் தருமாறு ஒரு தேவையை உண்டு பண்ணியதே அன்புதான்.

இயேசுவைத் தருமாறு கடவுளை ஊக்குவித்ததும் விரைவு படுத்தியதும் அன்புதான். அதே அன்புதான் தம்மையே நமக்குத் தந்திடத் தூண்டியதும் இயக்கியதும்!

ஏதுமற்ற ஏழையருக்கும் வலிமையற்ற எளியருக்கும் ஆற்ற றில்லாத பேதையருக்கும் ஆதரவு தருமாறு, நம்மை முன்னோக்கிச் செலுத்தும் ஆற்றாலாக இருப்பதும் அன்பாகும்! அன்பின் சட்டப் படியே, வலிமையற்றவர்களின் பலக்குறைவினைப் போக்கவும் ஏழை எளியருக்கு உதவிடவும் தான் வலிமையுள்ளவரைப் படைத்திருப்பதன் நோக்கம்..

எல்லா வகையான இடும்பைக்கும், ஆம் துயர் நிலை களுக்கும் தன்னலம்தான் காரணம்.

பெரும்பாலும் நாம் சிந்தும் கண்ணீரின் பிறப்பிடமும் தன்னலம் தான்!

ஒருவரைக் கவலையற்றவராக - எல்லார்க்கும் இசைவாய் இருக்கத் தக்கவராக - தோழமை மனம் உள்ளம் கொண்டவராக எல்லார்க்கும் உதவுகின்ற பாங்குடையவராகச் செய்வது அன்பு.

ஒவ்வொரு பிணிக்கும் கடவுள் தந்த மாமருந்தாக உள்ளது. இயேசு பெருமானின் அன்பினைப் போன்ற அன்புதான்.

ஒருவரை அறிவின் எல்லைக்குள்ளேயே வட்டத்துக்குள் ளேயே இருக்கும் ஒருவரை அதிலிருந்து வெளியே கொணர்ந்து, தெய்விகப் பேராட்சியின் எல்லைக்குள் கொண்டு சேர்ப்பதும் அன்பேதான்.

அன்பு செய்யப்படுவதற்காக மறுபடியும் படைக்கப் பெறாது, ஒருவர் புதிய முறை அன்பினைப் பெறுதல் அவ்வளவு எளிதில்லை.

நல்லது மாறிவிட்டதை அறியாத எளிய திறமுடைய மனிதன் ஒருவனின் நெஞ்சத்தில் அன்பு இறைத் தன்மை பெற்றுவிட்ட போது, அவனைத் தனிச்சிறப்பு வாய்ந்த அரிய மனிதனாக ஆக்கிடும் கடப்பாடுடையது இப் புதிய அன்பு!

மனிதனின் அன்பு மிக்க அழகு வாய்ந்தது. மானிடப் பண்பின் இயற்கையானது அவ் அழகு! ஆனாலும் அம் மலரில் இருக்க வேண்டிய தேனுக்கு மாறாக, நஞ்சு இருப்பதாகத் தோன்று கிறதே ஏன்? மானிடரின் உள்ளத்தில் வலியை உண்டாக்குகிறது. கணவன் மனைவியிடையே மன முறிவு ஏற்படுத்துகிறது. பலப்பல குடும்பங்கள் ஒற்றுமையின்றிப் பிளவு பட்டுப் போகின்றன. சீரழிந்த குடும்பங்கள் இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம் இத்தனையும் நமது நாகரிகத்தை இழிவுபடுத்துகிறது.

ஆனால் இயேசுவின் அன்பினைப் போன்ற அன்பு, எந்தக் குடும்பத்தையும் இரண்டுபடுத்தவில்லை! எந்த உயிரையும் சீரழியச் செய்யவில்லை. எந்தக் குழந்தையையும் குற்றம் இழைக்கச் செய்ததில்லை. இதனை நன்கு சிந்திக்கும் ஆண் பெண் இருபாலரை யும் விழிப்புறச் செய்யும்.

எவர் ஒருவர் அன்புள்ளம் கொண்டாரோ அப்போதே அவர் பேருள்ளம் பரந்த மனம் படைத்தவராகிறார்; மனித நலநாட்டப் பண்புள்ளம் கொண்டவராகிறார். இன்னும் சற்று மேலாகச் சொல்லப்போனால், தெய்வ உள்ளமே கொண்டவராகிவிடுகிறார்! அவர்களுடைய கண்கள், ஏழைகளை ஏறிட்டுப் பார்க்கின்றன; அவருடைய செவிகளோ, தம்மைச் சுற்றி உடைந்த உள்ளங்களின் விம்மி அழுதலை, பெருமூச்சினை விட்டுக் கதறி அழும் மக்களின் மன நலத்தைக் கேட்கின்றன.

அன்புள்ளம் கொண்ட அக்கணமே, உள்ளபடியே நாம் மானுடத்தின் மேலான இடத்தைப் ஏற்றுவிடுகிறோம் என்றே சொல்லலாம்.

யோவான் 15 : 9இல் இயேசு சொல்கிறார்:-

"எந்தை என்னில் அன்பாயிருக்கிறது போல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத் திருங்கள்"

நீங்கள் ஒரு பெண்ணில் அல்லது ஆணில் அன்பு கொண்டு வாழ்ந்து வருதலைப் போன்று, அவருடைய அன்பில் வாழ்ந்து வருமாறு கேட்டுக் கொள்கிறார். இயேசு அவருடைய தந்தையின் அன்பில் வாழ்ந்துவருவது போன்று நாமும் தமது அன்பில் வாழ்ந்திட வேண்டுகிறார்.

நாம் அன்பினில் வாழ்ந்து வந்தால், அன்பின் கனியை நாம் பெறுவோம். அன்பின் கனி என்பது ஏதோ அன்பு என்பது மரம் போலவும் அதிலே பழுத்து நம் மடியில் விழ்வது போலவும் யாரும் கருதி விடாதீர்கள். அன்புக்கனி, என்பது, பேச்சில் அன்பு, செயலில் அன்பு, நடத்தையில் அன்பு ஆகியவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று பொருள் கொள்ள வேண்டும். ஏனென்றால் நல்ல எண்ணம், நல்ல சொல், நல்ல செயல், நல்ல ஒழுக்கம் இவை அனைத்தையும் தருவது அன்பாகும்!

கறுவுதல், பொறாமை வெறுப்புணர்ச்சி, பழிவாங்குதல் போன்றவை எல்லாம் கடந்துவிட்டவை - நடந்து முடிந்து விட்டவை என்று அறியுங்கள்.

## ஒரு புதிய ஆணை வந்துள்ளது

ஒரு புதிய நாள் புலர்ந்தது! அந்தப் புதிய நாள் அன்பு நாள்! ஒரு பெண்மணி சொன்னார் "எங்கள் வீட்டில் ஏற்பட்டுள்ள நிலை மாற்றம் பற்றிச் சொன்னாலும் உங்களால் அதனைப் புரிந்து கொள்ள முடியாது என்றே கருதுகிறேன்; இருந்தாலும் சொல்லு கிறேன். எப்போதும் எங்கள் வீட்டில் கொள்கைப் பிணக்கும் சின முட்டலுமே இருந்து வந்தன. அதன் விளைவினால், கடுமையான சொற்கள், சில சமயம் வெறுப்பும் வெளிப்பட்டன. நிலை பேறுடைய வாழ்வறம் ஏற்ற பின்பு, எங்கள் வீட்டில், அமைதியும் அழகிய வாழ்க்கையும் மென்நயம் வாய்ந்த கடைப்பிடியும் இனிய சொற்களும் நடமாடுகின்றன. குழந்தை என்னிடமும் என் கணவரிடமும் அந்த இனிய சொற்களின் பரிமாற்றம் எல்லை யில்லாத இன்பத்தைத் தருகின்றன. காரணம், நாங்கள் இப்போது அன்பெனும் இன்பப் பேருலகில் வாழ்ந்து வருகிறோம்.

"அலுவலகத்திலிருந்து வீட்டுக்கு இரவு வந்த என் கணவர் எங்கள் எல்லாரோடும் அளவளாவிப் பேசிக் கொண்டிருந்தார். அப்போது, என்னைப் பார்த்து:

"நம் வீடு இப்போது எவ்வளவு அழகியதாக மாறிவிட்டது பார்த்தாயா? ஏன் தெரியுமா? ஒவ்வொருவரும் ஒருவருக்கொருவர் அன்புடன் கொடுத்துப் பெறுகின்றதால்; குழந்தைகள் அனைவரும் சிந்தைத் தெளிவோடு இருக்கிறார்கள்! அன்பில் புதிய இன்ப மயமான சூழலில் அவர்கள் இருப்பதை உணர்கிறார்கள், உணர்ந்து

மகிழ்கிறார்கள்'' என்றார். தாயாகிய நான் மட்டும் என்ன? பிள்ளைகளின் இன்பச் சூழலை உணர்ந்து மகிழ்கிறேன்; ஏன் அந்தக் குழந்தைகளைப் போலவே அவர்களுடைய தந்தையும் அல்லவா அன்பில் புதிய இன்பச் சூழலில் மகிழ்ந்து திளைக்கிறார் என்று சொன்னார் அந்தப் பெண்மணி.

அந்த வீட்டில் உள்ள சிறுபிள்ளை ஒருவன் அவன் தந்தையைப் பார்த்து, அப்பா இன்று வானொலியில் திரு. தங்கப்பா நமக்குச் சொன்னதைக் கேட்ட படியினால், அம்மாவும் நானும் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறோம் தெரியுங்களா? என்று சொன்னானாம்!

இப்படிப்பட்ட பண்பாளரின் அன்பின் மறுபதிப்பான அன்பு ஒன்றுதான்!

குழந்தையின் அழும் நெஞ்ச ஒலியினாலும், இளைஞரின் நெஞ்சக் குமுறலானாலும், ஆடவர் மகளிர் மற்றும் முதியவர் அனைவருடைய மனக் குமுறலுக்கும் தக்க மருந்தாக விடையாக அமைவது அன்புதான்.

நம் மனத்தில் குடி கொண்டுள்ள வெறுப்பினை - வன்மத்தை அகற்றுவது அன்பு! அகத்தில் உள்ள வெறுப்புணர்ச்சியினைக் காட்டும் கண்ணாடியாம் முகத்தில் தோன்றும் கடுகடுப்பான உணர்ச்சி வரிகளைத் துடைத்து, அழகின் ஒளிக்கீற்றுப் பதிப்பதும் இந்தப் புதிய அன்புதான்! அதே புதிய அன்புதான் ஒரு கணவன் மனைவி இருவரிடையே ஓர் ஒற்றுமை உணர்வை, இல்லாதன வற்றை விடுத்து இருப்பதைக் கொண்டு "போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்ற மொழிக்கேற்ப மனநிறை வினையும் தருவது.

அன்புதான் இல்லறம் தழைக்கச் செய்யும் இன்ப மழை! அதே அன்புதான் நல்லறப் பயிரைப் பேணிக்காக்கும் அறமழை!

சுருங்கச் சொன்னால், நல்லறம் ஓங்கும் இல்லறம் வாழும் இல்லத்தைக் குடும்ப மாளிகையைக் கட்டி முடிப்பதும் அன்பு! கட்டி முடித்த குடும்ப மாளிகையை நிலைக்க வைப்பதும் பேணிக் காப்பதும் அன்புதான்!

திருமணத்தைச் செய்துவைப்பதற்கும் திருமணமான பிறகு பிறக்கும் குழந்தைகளையும் குழந்தைகளைப் பெற்ற தாயினைத் -

தாய்மையைக் காப்பதற்கும் அமைக்கப்பட்ட வழி அன்பு வழி ஒன்றே!

ஒரு கணவன் மனைவி நெஞ்சத்தில் இயேசுவின் அன்பினைப் போன்ற அன்பு இடம் பெற்றுவிட்டால் போதும் அவர்களுடைய இல்லறத்தைப் பேணிக்காத்திட வேறு சட்டமோ திட்டமோ தேவையில்லை.

> அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
> பண்பும் பயனும் அது. - குறள் 45

## செம்மலர் போன்ற மலர்

வளமற்ற காடும் வறண்ட நிலமும் மகிழ்ச்சி தரும் மலர் வனமாகும். பாலைவனமும் உவகை தரும் செம்மலரை நிகர்த்த பூவாக மலர்ந்து மலராகும். முல்லையும் குறிஞ்சியும் பூத்துக் குலுங்கும். அங்கே உவகையும் தன்னை மலர்ந்து பாடும், பாட்டிசையும் கேட்கும். அதாவது பாழ்பட்ட வாழ்க்கையும் பண்படாத வாழ்க்கை கூட இயேசு கிறித்துவின் அருளால் மகிழ்ச்சி பூத்துக் குலுங்கும். இன்ப எழிற் பூங்காவாக மாறும் என்பதுதான் அப்படிச் சொல்லப்பட்டது. புரிந்தும் புரியாதபடி மறைபொருள் வைத்துச் மொழிவதுதான் மறைமொழி இந்த மறைமொழியின் பொருள் இன்னதென்று அண்மைக்காலம் வரையில் நமக்குப் புரியாத ஒன்றாகத்தான் இருந்தது.

அந்த மறைமொழி தீவினைப்பட்ட பாழ்பட்ட அல்லற்பட்ட மக்களை விடுவித்து நல்வாழ்வளிக்கும் மீட்பரின் மொழியாகும்.

வளமற்ற காடும் களர் நிலமும் பாலைவனமும் கூட செம் மலர், நீலமலர் அனைய பூக்கள் பூத்துக் குலுங்கும், அத்தகைய மாற்றத்தை உண்டுபண்ணும் புதிய அன்பினை உலகுக்கு அருளிச் செய்தவர் மீட்பர் இயேசு. அதுதான் கிறித்தவத்தின் அற்புதம்! அதுதான் இயேசு கிறித்து வாழ்வின் வியத்தகு தனிச்சிறப்பு; அறிவுலகுக்கு விடப்படும் மிகப்பெரிய அறை கூவல்.

இயேசுவின் வாழ்க்கை, நம்மை விழிப்புறச் செய்வது, அவர் ஆற்றிய அற்புதம் பற்றி அறியும்படிக்கில்லை. அவருடைய அன்பினைப் பற்றி அறியும்படிக்குத் தான் அவர் ஆற்றிய அற்புதங்கள்.

மானுடத்தின் அன்பால் அளவிடத்தக்க அன்பில்லை இயேசு வின் அன்பு; அது தனித்தன்மை வாய்ந்தது; அது வேறுபட்ட பண்புடையது.

கடவுள் அன்பாக இருக்கிறார். கடவுளாகிய அருளாளரே பிறப்பெடுத்து வந்த மானுடப் பேரன்பு வடிவமே இயேசு. தம்மில் இருக்கும் கடவுள் அன்பினைத்தான் உலக மக்களின் நெஞ்சத்தில் நிலைநாட்டி இயக்கும் ஆற்றல் ஆக விளங்கச் செய்தார் இயேசு.

மனித குலத்தின்பால் இயேசு கொண்ட பழக்கமும் பரிவும், குறுக்கையில் மரித்தும் சித்தரித்துக் காட்டும் அவ் அன்பினை என் னென்பது! அவ் அன்புதான் கிறித்தவ சமயத்துறைப் புத்தெழுச்சி யைத் தனிச்சிறப்புகளால் அவ்வப்போது விரித்துரைப்பதாகும்.

பழைய மானிட அன்பு என்பது தன்னலத்தின் அடிப் படையில் அமைந்தது. அத் தன்னலம், பகைமை, பொறாமை, வெறுப்பு, மட்டும் அன்று கொலை புரிவதில் கூட கொண்டு விடும், கொடியது.

எல்லா வகையான அட்டூழியங்களையும் துன்பங்களையும் புதிய அன்பு ஏற்றுக் கொள்ளும். ஆனால், அத்தனைத் துன்பங் களையும் ஆறாத் துயரங்களையும் கொடுத்தவரின் நிலைக்கு என்றுமே அன்பு தாழாது; வீழாது.

பகை, போர், வல்லந்தம், உரிமை மீறல் போன்ற சூழ்நிலையில் உலகம் சுழன்று வரும் போது, இந்தப் புதிய அன்பு, மலைமுகட்டில் சுடரும் ஒளிவிளக்கு போல ஒளி வீசிக் கொண்டிருக்கிறது. மலை மேல் சுடரும் அந்த அன்பு விளக்குத் தன் ஒளிக்கைகளை நீட்டி, இன்றைய நிலையினை விடுத்து, உயர்ந்த சிறந்த நாகரிகத்தை அடைந்திட வருக வருக என்று மானுடத்தை அழைத்தபடி ஒளிவீசிக் கொண்டிருக்கிறது.

அந்த அன்பு, நம்மைச் சுற்றி அழுத்திவிட்டிருக்கும் இழிந்த கீழ்த்தரமான வாழ்க்கையிலிருந்து கை தூக்கிவிட்டு நல்வாழ்வளிக் கிறது. உயர்ந்த வாழ்வளிக்கிறது. பகைமையைப் பூசல்களை, நம்மில் தோற்றுவிக்க நம்மை வற்புறுத்தும் தன்னலத்திற்குள் நாம் சிக்கிடாமல் மேலோங்கி நிற்கச் செய்கிறது புதிய அன்பு; புது வகையான அன்பு!

உலக நாடுகளிடையே போர் நிகழ்வதன் காரணம் என்ன? தன்னலம்தான்! உழைப்பவர் நெஞ்சங்களைச் உரிமையின்றி

அடக்கியாளும் தன்னலம் தான் முதலுக்கும் தொழிலுக்கும் இடையே ஏற்படும் போராட்டத்துக்குக் காரணம். உழைப்பவர்களின் உள்ளங்களை உரிமை ஒலி எழாமல் செய்யும் முதலாளியப் போக்குக்கும் காரணம் தன்னலமன்றி வேறென்ன?

அழிவுக்குக் காரணமான போரினைத் தடுக்க வல்லது அன்பு - புதிய அன்பு. பேராசை மத சாதிகளிடையே வேற்றுமை, பகைமை, மக்கள் சமுதாயத்தினிடையே கலாம் விளைத்தல் ஆகியவற்றுக்குக் காரணமாக இருக்கும் தன்னலத்தை அடியோடு அழித்தொழிப்பதும் புதிய அன்பு.

அவ் அன்பு, பொருளாதாரப் சிக்கல்கள் அனைத்தையும் தீர்த்து வைக்கும். இயேசுவின் அன்பினை ஒத்த அன்பு எங்கெங்கு ஆட்சி புரிகிறதோ, அங்கெல்லாம் வேலை நிறுத்தம் என்பது நடவாது.

இயேசுவின் அன்பினால் ஆளப்படும் மக்களிடையே வழக்குகள் நடைபெறா. நீதிமன்றக் கூடங்கள் எல்லாம் இயேசுவின் வழிபாடுகள் செய்யப்படும் திருச்சபைகளாக, நற்செய்திப் பணி ஆற்றுவோரின் அவைகளாக மாறிவிடும்.

இயேசுவின் அன்பார்ந்த அன்பு ஓங்கி நிற்கும் இல்லங்களில் கணவன் மனைவியிடையே மனமுறிவு ஏற்படாது.

இந்த உலகிற்குப் புத்தம் புதிய அன்பினை இயேசு கொண்டு வந்தார். அதற்கு ஒப்புமை காட்டிட முடியாது. அவ் அன்பினைச் சுட்டிடச் சரியான சொற்களில்லை. அந்த அன்பினுக்குச் சரியான பொருளின் பண்பு விளக்கம் ஒன்று உண்டென்றால் இயேசு கிறித்துவே ஆவார்!

ஏதும் விளையாத வறள் நிலம் போன்ற வாழ்க்கையை, மணம் கமழும் அழகிய செம்மலர் பூத்திடும் நல்ல கொல்லையாக - பண்ணையாகச் செய்திட வல்லது புதிய அன்பு.

வளமற்ற வறண்ட காட்டு வழியே என் நண்பர் தங்கப்பாவோடு சென்று கொண்டிருந்தபோது

“மனிதவாடையற்ற, ஏதும் விளையாத இந்தப் பாலை வனத்தை என்ன வென்று சொல்வது?” என்று சொன்னேன்.

“அது சரி, ஆனால் பெருமழை பெய்யுமானால், அழகின் உறைவிடமாக மாறுமே; பாலையில் ஆங்காங்கு உள்ள மணல்

மேடுகள் எல்லாம் வண்ண மலர்கள் பூத்துக்குலுங்கும் அல்லவா?'' என்றார் நண்பர்!.

உண்மைதான்! கடவுளின் அன்பு மழை பெய்த களர் நிலம் கூட விளைநிலமாக மாறுமே! அடடா! அன்புறையும் வாழ்க்கை தான் எப்படிப்பட்ட பெருமை வாய்ந்தது? என்று எண்ணிக் கொண்டேன்.

தங்கப்பாவுடன் உறவு கொண்ட பின்பு எங்கள் பாலை வனம் போன்ற வாழ்க்கை, மணம் கமழும் அழகிய செம் மலர்கள் பூத்துக் குலுங்கும் சோலைவனம் ஆக்கிவிட்டது. வாழ்க்கையில் நிரம்பி வழிவது அன்பு. அன்பு வந்தபிறகு, வாழ்க்கையில் வெறுமையும் இல்லை, இன்பம் விளையாத வாழ்க்கையும் இல்லை. நண்பரின் அன்பு திகழும் இடம்மெல்லாம் மகிழ்ச்சி பூத்துக் குலுங்கும் பூந்தோட்டம் ஆகிறது. கடவுள் அதனை அவ்வாறு ஆக்கி அளிக்கிறார். அவரால் தான் அது முடியும்.

இப்படி இன்பம் மருவும் மலர்ச் சோலையாக ஒவ்வொரு வருடைய வாழ்க்கையும் உருவாக்கிடத் தேவை இயேசுவை நம் தோழராக்கிக் கொள்வதும் நம் வாழ்க்கையின் மீட்பராக அவரைப் போற்றி ஏற்கச் செய்வதும் தான். அப்படிச் செய்துவிட்டால், பிறகு நம் உள்ளத்தில் எழும் இன்னிசை என்னவாக இருக்கும்.. கேளுங்களேன்..

''கடவுள் என் மேய்ப்பர்; எனக்கென்ன குறை? என் நெஞ்சத்தில் அன்பு நிரம்பி வழிகிறது; என் இதழ்களில் அவரைப் புகழ்ந்து பாடும் பண்ணும் பாடலும் தவழ்கின்றன''

காய்ந்து தீய்ந்து போன வாழ்க்கையாக உங்கள் வாழ்க்கை யிருந்தாலும் அதனை, கவின் மிக்க செம்மலர்ப் பூக்கள் பூத்துக் குலுங்கும் எழில் மிக்க - இன்பத் தென்றல் உலவும் பூங்காவாகச் செய்திட வல்லது இயேசுவின் அன்பாம் புதிய அன்பு.

அன்பே அறநெறி, சுகத் திறவுகோல்
அன்பே அறிவின் சுடர்.

## அன்பே கடவுள்

நாம் நமது கடவுளாகிய தந்தையை அறிந்து கொண்டால் அன்றி ''அன்பே கடவுள்'' என்னும் இத் தலைப்புக்கு உரிய பொருள் காண இயலாது.

“கடவுள் என்னில் அன்பு கூருகிறார்; என் மேல் கடவுள் அன்பு காட்டுகிறார்; கடவுள் என்மேல் அன்பு கொண்டுள்ளார்” என்று சொல்லுங்கள். சொன்ன பிறகு உங்களில் உங்கள் உள்ளுயிர்ப்பில் ஏற்படும் எதிர் வினை என்ன என்று பாருங்கள் உங்கள் உதடுகள் உங்களை அறியாமல், “கடவுள் தாமே என்னை அன்புடன் விரும்புகிறார்” அல்லது “என் தந்தை என்னை அன்புடன் விரும்புகிறார்” வாயிதழ்கள் இவ்வாறு முணு முணுக்கத் தொடங்கிவிடும்.

‘கடவுள் என்று சொல்லிவிடுவதாலேயே, நீங்கள் கடவுளின் அருகில் இருப்பதாகக் கொள்ளமுடியாது. அல்லது ’தந்தை என்று சொன்னாலும் போதாது. அந்தத் தூய சொல்லை, உங்கள் மனச் சான்றுக்குள், வல்லந்தமாகச் சொல்லி, உள்ளே பதித்தல் வேண்டும்.

நாம் அடைய வேண்டிய மிக உயர்ந்த இடத்தை அடைந்து விட்டோம். செய்ய வேண்டிய மிகப் பெரிய செயல்களைச் செய்துவிட்டோம். எப்படி? நாம் இருக்க வேண்டிய மிக உயரிய அன்புச் சூழலில் இருக்கிறோம் அதனால்!

அன்பு வாழும் இல்லத்தில் குழந்தைகள் வளர வேண்டிய வகையில் வளர்ந்து வருகின்றன. அன்பு மனையாள் தன் வருகைக்காகக் காத்திருப்பாள் என்பதறிந்து, அவரவர் கணவன் மார்கள் ஆற்றிட வேண்டிய அரும்பணிகளை ஆற்றிக் கொண்டிருக் கிறார்கள். தம் கணவர் வருகை தருவார்; அன்பு காட்டுவார்; ஆவன செய்வார் அகம் குழைய இரவில் கொஞ்சுவார் என்று இன்முகத்துடன், இல்லக் கிழத்தியர், இல்வாழ்க்கைத் துணைவியர் தத்தம் இல்லப் பணிகளை முடிந்து விட்டிருக்கின்றனர்.

எண்ணமாயினும், செயல் நோக்கம் ஆயினும், செயலா யினும் அன்பிற்கு அப்பாற்பட்டதாயின், அது, நாம் அடைய வேண்டிய நற்பேற்றினை அடையவிடாமல் நம்மைத் தடுத்து நிறுத்தி வீண்படச் செய்துவிடுகிறது. அன்புச் செயல் ஒவ் வொன்றும் நம்மைப் பலப்படுத்துகிறது; வளம் பெறச் செய்கிறது, செய்யும் அன்புச் சிந்தனை ஒவ்வொன்றும் நம்மை உயர் வாக்குகிறது. முதலில் அன்பு பற்றி சிந்திக்க வேண்டும் அன்புச் சிந்தனை வேண்டும்; அதன் பயனாக அன்புப்பணி ஆற்றிட வேண்டும் மனிதருக்கு அன்பு எனும் ஒன்று எத்தனை நலம்பயக்குகிறது. மண்ணுல வாழ்வில் நற்பதம் முதல் விண்ணுலக

வாழ்வாம் வீடுபேறு வரையில் அத்தனைக்கும் திட்டமிட்டு உதவுவது அன்பு.

நம் உடல் நலத்தைப் பேணிக்காக்கிறது அன்பு. அன்பே கடவுள்; கடவுள் என் பிணிகளைத் தீர்ப்பவர், என் நோய்களைக் குணமாக்குபவர். பகைமை எண்ணம், கசப்புணர்ச்சி, வயிற்றுக் கோளாறு உண்டாகச் செய்கிறது; அரத்த ஓட்டத்தைத் தடை செய்கிறது அது என்பது இப்பொழுது புரிகிறது.

சினத்துடன், கடுகடுத்த முகத்துடன் ஒரு தாய் தன் குழந்தைக்குப் பால் கொடுப்பதனால் தான் அந்தக் குழந்தை, குணம் கெட்ட குழந்தையாக வளருகிறது. குழந்தைக்கு அன்புடன் பால் ஊட்ட வேண்டும் என்பதுதான் கடவுள் எல்லாம் வல்லதாக எண்ணி அன்னைக்குள், பாலை வைத்தருளினான். தாய், தன் குழந்தைக்கு ஊட்டும் பால் இனிதானதாக, ஊட்டம் மிக்கதாக, வளர்ச்சியும் உயிரின் மலர்ச்சியும் தருவதாக அமைய வேண்டு மானால், அந்தத் தாய், தன் கணவனை, மற்றும் தன்னைச் சூழ்ந்து உள்ளவர் அனைவரையும் அன்புடன் விரும்ப வேண்டும்.

அன்பில் வட்டத்தைவிட்டு அடியெடுத்து வைக்கும் ஒவ் வோர் அடியும், நோயினையும் தோல்வியையும் வலையையும் தளர்ச்சியையும் அறை கூவல் இட்டு அழைக்கின்ற முயற்சியாகும். செயலாகும்.

நம்மால் செய்யப்படுகின்ற ஒரே ஒரு தீமை ஒன்று உண்டு என்றால், அது, அன்புக் கோட்டினை விட்டு வெளியே அடி யெடுத்து வைப்பதுதான், நாம் செய்யும் மற்ற தீங்குகள் எல்லாம் தீங்குகளை எல்லாம் படைக்கும் தீங்குகள்தாம்!

அன்புப் பாதையில், அன்பு நெறியில் நாம் நடப்போம் என்றால், நாம் ஒரு போதும் ஒரு தீமையும் செய்யோம்; செய்யமாட்டோம். வியப்பிலும் வியப்பு அல்லவா இது? அன்பினால் தீர்க்கப்படாத சிக்கல்களே இல. மாந்தரின் சிக்கல் எதுவானாலும் தீர்த்துவைக்கும் வல்லமை ஆற்றல், அன்புக்கு மட்டுமே உண்டு.

அன்பெனும் உலகில் வாழ்வது, அன்பு எனும் மொழியைக் கற்றுக் கொள்வது, அன்பின் ஒழுங்கு முறைமையைக் கைக் கொள்வது அன்பின் வழியினைக் கண்டறிவது போன்றவற்றைப் பயில்வதுதான் கல்வி. அது வெறும் பாடப் பயிற்சிக் கல்வி,

தொழிற் கல்வி நுட்பக் கல்வியல்ல; மனத்தைப் பொதுவாக விரிவு படுத்துவதை மட்டுமே நோக்கமாகக் கொண்ட கல்வி (Liberal Education) யாகும் அந்தக் கல்வியினைக் கற்பதே கல்வியாகும்.

கடவுளே அன்பாயிருக்கிறார்; அந்த அன்புக் கடவுளே, நம் தந்தை. நாம் அவருடைய பிள்ளைகள். அன்பு எனும் குடும்பத்தில் நாமும் ஒருவர்.

இயேசுவே அன்பு! நாம் நடக்கும் அன்பு வழி, இயேசுவின் வழி. அனைத்துமே இயேசு நமக்குக் காட்டிச் சென்றுள்ள அன்பு நெறி. எல்லாம் இயேசுவின் அன்புச் செயல்கள் செயல்களில் எல்லாம் ஊடுருவி நிற்பது இயேசுவின் அன்பேயாகும்..

உலகத்தை ஒன்றாகக் கட்டிடல் அன்பாம்
நலஞ்செயும் பொற்சங் கிலி.

## அன்பு மொழி ஆள்க

அன்பினைத் தனித் திறனாகக் கொண்டு எண்ணிடக் கற்றுக் கொள். உங்களுடைய செயல்களுக்கெல்லாம் தாயாகவுள்ள அன்பின் பின்னணியில் தான் நம் வாழ்க்கை அமைந்தது; அப்படி அமைந்த உங்கள் வாழ்க்கையிலும் நீங்கள் நல்லது என்று எதைக் யாருக்குக் கொடுத்தாலும் அதனை அன்பாகக் கொடுங்கள்; இயேசுவின் அன்பினைப் போன்ற அன்பின் வழியே கொடுத் திடுங்கள். அன்பின் மொழி எது என்று அறிந்து கொள்ளுங்கள்; அந்த அன்பின் மொழியைக் கற்றுக் கொள்ளுங்கள் உலக மக்களின் மொழியின் இடத்தில் அன்பின் மொழியைத் திகழவையுங்கள்.

இதுவரை நம்மை, புலன் அறிவு ஆண்டு வந்தது போதும்; இனி அதனிடத்தில் அன்பார்ந்த அன்பினை ஆளவிடுங்கள். சிறிதளவு அன்பின் வழியினைப் பற்றி அறிந்து கொள்ளப் போகிறோம்; அந்த அன்பின் வழி, பண்புமிக்க நடையுடைய, மேன் மக்களுக்குரிய வழி; கடுமையற்ற மென் நயமான வழி; அழகிய வழி. அதனைக் கண்டு அதில் நடப்போம். அதுமட்டுமன்று, அதோடு அன்பினைக் காண்பது எப்படி? அன்பின் கண் கொண்டு பார்ப்பது எப்படி அன்பின் கண் கொண்டு காண்கின்ற போது அந்தக் கண்கள் அன்பினால் ஒளிமயமாகும். ஒளிமயமான அன்பு நிறை நம் கண்களில் இயேசு கிறித்து நிழலாடுவதனை மக்கள் காண்பர்! நம்மில் இயேசுவைக் காண்பர்!

பின்னர் நம்மிடம் புன்மைச் செயல்கள், பகைமை விளைக்கும் செயல்கள்; தன்னலமிக்க செய்கைகள், கசப்புணர்ச்சி தரும் பணிகள், சொற்கள் உண்டாகா. ஆகவே அன்பு எண்ணமும் அன்புச் செயல்களும் அன்பு மொழிகளும் மென்மையானவை; அழகானவை, அழியாதவை.

நம்முடைய சொற்களையும் புலன் அறிவு சார்ந்த சொற் களையும், அன்பினில் போட்டு ஊற வையுங்கள். ஊறிய பின்பு அதே சொற்கள்; நம் வாயில் இதழில் தவழும் போது, அன்பின் அழகு திகழ, அன்பின் மணம் கமழ, அன்பின் மென்மை குலவ வெளிப்படும். இத்தனைக்கும் அப்பாற்பட்டுச் சிறப்பும் வனப்பும் மிக்கவையாக இருக்கும் என்றால் மிகையில்லை.

அப்படிப்பட்ட அற்புத அன்பு நிறைந்த சொற்களை, நம் பேச்சில் ஒளிர வேண்டாமா? வன்மமும் வன்முறையும் நிறைந்த சொற்களை இனியும் பேசுதல் வேண்டா. அன்பில் ஆழ்ந்த, அன்பில் தோய்ந்த சொற்களை நெஞ்சில் சேர்ப்போம், சேர்த்து வைத்த புதுச்சொற்களைக் கொண்டு இனிப் பேசுவோமே.

அன்புச் சொற்களை, எங்கும் நிறைந்து பரவும் காற்றில் கலந்திடப் பேசுவோம்.

நமது அன்றாட வாழ்க்கையில் நாம் சந்திக்கும் ஆடவர் மகளிர் அனைவரோடும் பேசி, நடந்து கொள்ளும் அத்தனையும் அன்பின் உறுதுணையால் நடைபெறல் வேண்டும். நாம் மானுட இனம்; மக்கள் அல்லரோ? நாம் இயேசு வாழ்ந்த வாழ்க்கையினை மேற்கொண்டு வாழ்தல் வேண்டும். அந்த அன்பு வாழ்க்கை இயேசுவில் எப்படியெல்லாம் இழைந்து இயைந்து இருந்ததோ அதே போன்று நம் வாழ்விலும் இயேசுவின் அவ் அன்பு வாழ்க்கையை இழைய இணையவிடல் வேண்டும்.

இயேசுவின் அன்பினைப் போன்ற அன்பினை நம் நெஞ்சங் களை ஆளும் ஆட்சியாகக் கொள்ள வேண்டும் எதுவரையில்? நெஞ்சத்திலிருந்து பிறந்து வரும் எண்ணம் ஒவ்வொன்றும் அன்பாக; அன்பான எண்ணங்களிலிருந்து வெளிப்படும். சொற்கள் எல்லாம் அன்பில் தோய்ந்தனவாக, அமையும் வரையில். அள்ள அள்ள எப்போதும் - என்றென்றும்! ஏன் அன்பில் மலர்ந்த எண்ணங்கள் அன்பு மணக்கும் சொற்களாக மாறினால் தான், மற்றவரை வாழ்த்தவும், அவ் வாழ்த்தினால் கிளர்ச்சி பெறவும்,

பின்பு ஆற்றுப்படுத்தவும் அதற்கும் மேலாக உதவிகள் செய்ய வேண்டி, அன்பென்னும் பேராட்சியை நம் நெஞ்சங்களை ஆட்சி புரிய விட வேண்டும் என்பது.

நமது அறிவை அடக்கியாளும் வண்ணம், அன்பினை, நெஞ்ச அரியணையில் அமர்த்திடல் வேண்டும். அன்பினுக்கு வேலையாள் ஆக வேண்டும். அறிவு ஆகக் கூடியதா என்றால் சற்று கடினம் தான். எனென்றால், தான் வைத்ததே சட்டம் என்னும் தன் முனைப்பு கொண்டது நம் அறிவு. ஆகவே அன்பினுக்கு அறிவு, இணங்காது; அடிபணியாது. ஆனாலும் நாம் நம் அறிவினை, அன்பினுக்குக் கீழ்ப்படியவைக்க வேண்டும். கீழ்ப்படிந்தே ஆக வேண்டும்.

நாம் நம்முடைய வணிகத் துறையிலும் அன்பினை ஆட்சி புரியச் செய்தல் வேண்டும். அப்படிச் செய்தால் அலுவலகங்களில் இருப்பவர்களும் அன்பின் ஆற்றலை உணர்வர்; பின்பற்றுவர். அலுவலகங்களில் அருவருப்போடு வேலை செய்கிறவர்கள், அன்புச் சூழலில், அன்பின் ஒளியில் அன்பு உணர்வில் பணி யாற்றுவர்.

அன்பால் அலுவலகப் பணிகள் மிகச் சீரிய முறையில் நடைபெறும். அலுவலம் உயர்நிலை அடையும். அலுவலகத்தில் பணி செய்பவர் களும் நல்ல பயனும் உயர்வும் பெறுவர்!

ஆகவே நாம் எல்லாரும் இனிமேல் அன்பின் சூழலில், அன்பில் இணைந்து காரியம் ஆற்றுவோம். அதற்குக் கைமேல் பலன் உண்டு! அதனால், நம் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் பாதையிலும், அன்பின் ஆட்சியின் கீழ்க் கொண்டு வருவோம். அதன் விளைவாக, நம் நினைவும் மொழியும் செயலும் அனைத்துமே அன்பில் மலர்ந்தனவாகவே அமையும்.

> அரும்பொருள் அன்பே அனைத்துலகை ஆளும்
> பெரும்பொருள் வையத்துப் பேறு.

### நாம் அன்பின் பிள்ளைகள்

தெய்வத்தன்மையும் மனிதத் தன்மையும் இணைந்த கூட்டுறவே - கிறித்தவம். நாம் அன்பினில் பிறந்தோம். கடவுளின் அன்பின் இயல்பை நாம் பெற்றிருக்கிறோம்.

உலகத்தில் உள்ள மற்ற எல்லாச் சமயங்களிலும் முற்றிலும் வேறுபட்டதாகக் கிறித்தவ சமயத்தை வேறுபடுத்திக் காட்டுவது, கிறித்தவராகிய அனைவரும் பெற்றிருக்கிறது கடவுளின் அன்பியல்பே. கிறித்தவம் என்பது ஒரு மதம் அன்று! மாந்தருள் அன்பின் இயல்பு நிரப்பப்பட்டிருப்பதாம்.

மாந்தன், அத்தகு அன்பின் இயல்பின் உச்ச நிலைக்கு உயர்கிறான்; உலகில், உள்ள மக்கள் போன்று பொதுவான வாழ்வியலில் இருந்து தந்தையின் அருட்பேருலகினுக் தூக்கிவிடுகிறது - கடவுளின் அன்பியல்பு. எடுத்துக்காட் உலகில் இயேசுவுக்கும் மற்ற மாந்த இனத்தில் உள்ள மாந்தனுக்கு இடையில் இருக்கின்ற வேறுபாட்டினைப்போல நம்மையும மற்றவரிடத்திலிருந்து வேறுபடுத்திக்காட்டுகிறது அவ் அன்பின் இயல்பு, அன்புப்பண்பு!

கடவுளின் அன்புப்பண்பு, அன்பியல்புதான் அனைத்துப் பண்பிற்கும் உள்ளமாக இருப்பது என்பதை அறிந்திருந்தும் அதனைக் கிறித்தவ மக்களுக்குச் சரியாக எடுத்துச் சொல்லவில்லை, திருச்சபைகள்!

இயேசு, புதிய படைப்பின் தலைவர் ஆவார். அந்தப் புதிய படைப்பினை ஆட்சி செய்திட, நமக்கு அன்பென்னும் சட்டத்தை இயேசு அளித்துள்ளார்.

"நீங்கள் ஒருவரில் ஒருவர் அன்பு கூருங்கள். அதனால், உலகில் உள்ள மாந்தர் அனைவரும் நீங்கள் என்னுடைய தொண்டர்கள் என்பதை அறிவார்கள்"

இந்தப் புதிய அன்புக் கட்டளையைப் புதிய அன்புச் சட்டம் தான் நம்மை ஆளவேண்டியது.

இயேசு அன்பிறைவன்! அவரே, புதிய படைப்பின் இறைவன் ஆவார்.

"உங்களுக்கு நான் புதிய கற்பனையைத் தருகிறேன்; அதனைக் கைக் கொள்ளுங்கள், உங்களில் ஒருவர் மற்றொருவரில் அன்பு கூருங்கள் அதனால் உலக மக்கள் உங்களை என் அன்பர்கள் என்று கண்டறிவார்கள்".

இந்த மறைமொழிச் சொற்கள், புதுபடைப்பினை அறிந்து கொள்ள உதவும் சின்னம்; சிறப்புக் குறியீடு (Badge) இது. நம்

ஒழுகலாற்றுக்கு அடையாளச் சின்னம் என்று சொல்வதால், நாம் நமது மேற்சட்டையில், அணிந்து கொள்ளும் தங்கம் பதக்கம் என்று பொருள் கொள்ளக் கூடாது. நம் வாழ்க்கை என்று கொள்ள வேண்டும். அதுவும் எப்படிப்பட்ட வாழ்க்கை என்று எண்ணுகிறீர்கள்? இயேசு நடந்து காட்டியது போன்ற வாழ்க்கை.

பிலிப்பியர் **2-14-15,** **"உலகத்திலே சுடர்களைப் போல் ஒளிர்கிற நீங்கள் கோணலும் மாறுபாடுமான மரபின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடமற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு, எல்லாவற்றையும் முணுமுணுப்பில்லாமலும் தருக்கிப்பில்லாமலும் செய்யுங்கள்"**

இந்த நிறைமொழியின்படி, நாம், குற்றமற்றவர்கள், கபடமற்றவர்கள்; கடவுளின் பிள்ளைகள் நாம் நமது அன்றாட வாழ்வில் செய்யும் செயல்கள் எல்லாம் அன்பின் அடிப்படையில் செய்து வருவதால், மற்ற மாந்தரிலும் வேறுபட்டவர்கள் ஆவோம் அதனால் நாம் எல்லாரும் அன்புடையர்.

கடவுள் ஒளியாயிருக்கிறார். அன்பும் ஒளியாயிருக்கிறது. நாம் நிறை அன்பில் நடந்தால், நாம் ஒளியில் நடக்கிறோம் என்பதும் உண்மை. நாம் நம்முடைய கடவுளுடன் தோழமை கொண்டுள்ளோம்.

நாம் ஒருவரில் ஒருவர் ஆன்மிகக் கூட்டுறவில் இனிது வாழ்கிறோம். ஒருவரில் ஒருவர் அன்பு கலந்து இன்புற வாழ்ந்து வருகிறோம்.

## அன்பின் ஆட்சி நிலவும் அருள் உலகம்

கடவுளுடன் நாம் கொண்டிருக்கும் இனம் அறியப்படாத ஒரு புதிய உறவு, நம்மை இயேசுவின் பண்பும் சிந்தனையும் உடையவராக ஆக்குகிறது. இயேசு தம்மை வெளிப்படுத்துவதன் பொருட்டு, நம்மில் அன்பு கூர்ந்து, நம்மில் வாழ்ந்து வருவதன் மூலம், தெய்விகப் பண்பினையும் அன்பினால் நிகழும் அரும் பெரும் செயல்களின் ஆற்றலையும் நாம் பெற்றுத் திகழ்கிறோம்.

அப்படிப் பெற்றுத் திகழும் நம் வாழ்க்கை, விண்ணகத்தின் ஒளியாயிருக்கிறது. அவ் ஒளி, நம்மில் இயேசு வந்து இலங்கிட விடுகிறது. நாம் அன்றாட வாழ்வில் இயேசுவின் வாழ்க்கை

வெளிப்பட விளங்கச் செய்கிறது. நம்மில் இயேசு வந்து நின்று நிலவி ஓங்கிடச் செய்கிறது.

அது ஒரு வாய்மையம் (philosophy) அன்று; திருமறைக் கோட்பாடும் அன்று; ஒரு மதமும் அன்று இயேசு நம்மில் இருந்து நம் மூலமாக எண்ணுகிறார், நம் மூலமாகச் செயல்படுகிறார். அன்புத் தேவனாக இருக்கும் இயேசு, தம்மை வெளிப்படையாகக் காட்டியருளச் செய்கிறார்.

பண்டையக் கல்வி கண்ட
　　பரன் இயேசு என்னில் அன்பு
கொண்டதும் அன்றி, என்னுள்
　　குடி கொண்டு வாழ்ந்த வண்ணம்
அண்டினோர்க் கருள இயேசு
　　அரும்பணி எல்லாம் ஆற்றி
எண்டிசை உயிர்க்கும் அன்பை
　　என்மூலம் காத்தல் காண்க!

மாபெரியதான அன்பு நம்மில் இப்போது இருக்கிறது, பண்பாளர் இயேசு நம்மில் வாழ்ந்து வருகிறார்.

ஆற்றல் அனைத்தினும் உங்கள் உள்ளே இயங்கும் அன்பராக இருக்கும் இயேசுவே பெரியவர். ஆகவே "நாம் கடவுளின் பிள்ளைகளே" என்று நம்பிக்கையுடன் சொல்லலாம். கீழ்மையின் வல்லாண்மையைத் தகர்த்தெறிந்து, இறப்பின் பாலங் களையும் சிதறிப் புழுதியாக்கிவர் பெரியவர். குழப்பங்கள் உள்ள உங்கள் இல்லங்களில் உறைபவர் அந்தப் பெரியவர். மாந்தனின் நெஞ்சத்தை ஆளும் தனிமுதல் பேரரசர் அவர்.

நம்மில் இருந்து அன்பாட்சி செய்யும் அன்புப் பேராண்மையர்.

## அன்பு என்பது அமைதி

நாம் எப்படியெல்லாம் அன்புக்காக ஏங்கியிருக்கிறோம், நம்மில் 'அன்பு' உள்ளது என்று அறிந்திடாமல்!

நம்முள்ளே இயேசு வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பதை அறியாமல் இயேசுவிடம் கொள்ள வேண்டிய பற்றார்வம் வேண்டும் என்று எத்தனை நாள் அவாவியுள்ளோம்!

*1 யோவான் 4:7.8* "விருப்பத்துக்குரியவர்களே, ஒருவரில் ஒருவர் அன்பாயிருக்கக் கடவோம். ஏனெனில், அன்பு கடவுளால் உண்டாயிருக்கிறது. அன்புள்ள எவனும் கடவுளால் பிறந்து அவரை அறிந்திருக்கிறான்."

"அன்பில்லாதவன் கடவுளை அறியான்; கடவுள் அன்பாகவே இருக்கிறார்"

அவர் நம்முடைய அன்பர். அவ் அன்பர் உங்களில் இருக்கிறார் உங்களை அன்பு கூர்ந்துள்ளார். இறப்பை வென்று உயிர்த்தெழுந்தபோது நம்மில் அன்பு கூர்ந்திருக்கிறார் இப்பொழுது நம்மை அன்பு கூர்கிறார்.

உங்களுடைய தேவைகளைவிட அன்பு பெரியது, தேவன் மாபெரியர் அவர், அறவேந்தர், இரக்கத்தின் இறை.

இல்லற வாழ்வின் ஆற்றல் கூறினையும், வாணிகத்தின் விளைபயனையும் பெருக்கியும், அல்லது பெருக்கவிடாமல் தடுக் கின்ற தடைகள் அனைத்தினையும் உடைத்தெறிந்தும் மேலோங்கி நிற்கும் ஆற்றலை நல்கும் ஒருவர் நம்மில் இருக்கிறார்.

மாந்தரில் அன்பிலாதவர் இருக்கிறார்கள் இருப்பார்கள். அவர்களையும் அன்புடன் விரும்புங்கள்.

இயேசு நம்மில் அன்பு கூர்ந்தார், ஆகவே நீங்கள் அவரில் அன்பு கூருங்கள். அவர் மரித்தது அன்பிலாதவர்க்காக. அப்படிப் பட்டவர்கள் வாழ்ந்திட, நீங்கள் வாழுங்கள், மாந்தர் அனைவரை யும் விரும்பும் அன்பராகிய இயேசு உங்கள் மூலமாக அன்பிலாரை யும் விரும்புபவர், உங்களில் இருக்கிறார்.

## அன்பின் வெல்லும் ஆற்றல்

**வா**ழ்க்கையில் எதற்கு இடம் கொடுத்தாலும் கொடுக்கா விடினும், அன்புக்கு இடம்தர வேண்டும்; அதிலும் அன்பே முதலிடம் பெற வேண்டும்.

இந்தக் கருத்தில் நம்பிக்கையுள்ளவர், அன்பினை நாடு கின்றனர். பற்றார்வம் உள்ளவரின் உயிர் வாழ்க்கையின் மையமே அன்புதான்.

*1.பேதுரு 4:8* "எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரில் ஒருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்; அன்பு திரளான தீங்குகளை மூடும்"

இப்படித் தீங்குத் திரளை மூடும் அன்பு, பொதுவான அன்பில்லை, உச்சகட்ட அன்பு; யார் எவர் என்று பாராது நெகிழ்ந்து தன்னையே தரும் அன்பு. அறிவினால் ஆளப்படும் அன்பில்லை; கட்டுபாடற்ற அன்பு; கட்டுக்கடங்காத அன்பு.

அவ் அன்பு திரளான தீமைகளை வாராமல் தடுக்கும், வந்திடினும் திருப்பி அனுப்பும், அழிக்கும். அதே அன்பு, பூசலும் மனக்கசப்பும் அற்றதோர் பண்புலகில் கொண்டு சேர்க்கும் அவ் அன்பு. இயேசுவின் அன்பு போன்ற அளப்பரும் அன்பு, உயர் நிலை அன்பு; உலப்பில்லா அன்பு. உச்சநிலை அன்பு.

மீமிசைமாந்தர் அடையாள முத்திரைகள் அனைத்தும் தன்னகத்தே கொண்டது அன்பு. தோல்விகளையும், பலவீனங் களையும் அவற்றைச் சார்ந்த அனைத்தையும் வென்றிடக் கூடியது அன்பு. பாசமற்ற பேச்சும் கட்டுக்கதைகளும் அன்பிடத்திலிருந்து வாரா. நெஞ்சத்தின் அடித்தளத்திலிருந்து தணியாப் பற்றுடன் வெளிப்படும். போலியற்ற உண்மையான அன்பு. அந்த அன்பு தான், சிறப்பேதுமற்ற இடத்தில் இருக்கும் ஒருவரைச் சீரும் சிறப்பு மிக்க தன்னிடத்தில் கொணர்ந்து சேர்ப்பது.

இத் தகு புதியபாணி அன்பு, காலங்கள் கண்ட அற்புதம். அனைத்துயிர்கள் நலமும் மகிழ்வும் பெற்றிட விழைவதும் பணிகள் புரிவதும் நம்மில் இருந்து செயல்படும் அன்பு.

## அன்பெனும் சட்டத்தின் பொருள் விளக்கம்

'பத்துக் கற்பனைகள்' என்பது திருமறையில் உள்ள லேவியாகமத்தின் பொழிப்புரையாகும்.

யோவான் 13:34.35 "நீங்கள் ஒருவரில் ஒருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல, நீங்களும் ஒருவரில் ஒருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்.

"நீங்கள் ஒருவரில் ஒருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதனால் நீங்கள் என்னுடைய அடியார்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள் என்றார்"

*1* கொரிந்தியர் *13:1-2* "நான் மாந்தர் மொழிகளையும் தூதர் மொழிகளையும் பேசினாலும், அன்பு எனக்குள் இராவிட்டால், ஓலமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடும் கைத்தாளம் போலவும் இருப்பேன்"

"நான் வருவதுரைக்கும் பேற்றை உடையவனாயிருந்து, அனைத்துப் புதிர்களையும், அனைத்து அறிவையும் அறிந்திருந் தாலும், மலைகளைப் பேர்க்கத் தக்கதாக அனைத்துப் பற்றுள்ள வனாயிருந்தாலும், அன்பு எனக்குள் இராவிட்டால், நான் ஒன்று மில்லை"

பன்மொழி கற்றுத் தேர்ந்திடும் திறமை என்பது, சமய நுணுக்கம் வாய்ந்த கலை அறிவாராய்ச்சித் துறை சார்ந்த உலகில் ஒரு பெரிய அருஞ்செயலாக இருக்கலாம். ஆனால் அதனால் ஆவதொன்றும் இல்லை.

மேலுள்ளவற்றை நாம் மீண்டும் படித்துப் பார்த்தால் பொருள் புரிந்து கொள்ள முடியும். அதாவது மேற் சொன்ன உரையின்படி, நான் வருவதுரைக்கும் பேறு பெற்றவனாக இருந்தால் ஒரு நூற்றாண்டில் நடக்கப் போகும் நிகழ்ச்சிகளை முன் கூட்டியே சொல்லி விடமுடியும். உலகில் இதுவரை அறியப்படாத புதிர்களையும் பல்கலை அறிவையும் நான் அறிந்து கொண்டாலும், அன்பு எனக்குள் இராவிட்டால் நான் ஒன்றுமில்லை.

உலகின் மடியில் இருக்கும் எண்ணெய், உலோகங்கள், வேதியியல் பற்றிய கமுக்கங்களை எல்லாம் ஆய்ந்தாய்ந்து கூறு பலவாகக் காண்பதற்காக, உலோகவியல்களை வல்லாரும் வேதி யியல் கலைவல்லாரும் மேற்கொள்ளும் போராட்டங்களைப் பற்றி அறிவோம் நாம். இத்துணைக் கலைகளில் தேர்ந்து விளங்கும் ஒருவர், இயேசுவானவர் உலகில் வாழ்ந்த நாள்களில் மலைகளை யும் பேர்த்தெடுக்கும் பற்றார்வத்தைப் பெற்றிருந்ததைப் போன்ற செயலார்வம் பெற்றிருந்தாலும், இயேசுவின் அன்பினை ஒத்த அன்பினைப் பெற்றிராவிட்டால் அவர், "ஒன்றுமில்லை."

இதற்கு மேலும் ஒருபடி சென்று நமக்கு உண்டான யாவற்றையும் நாம் அன்பளிப்பாகத் தந்தாலும் நம் உடலையே நன்கொடையாகக் கொடுத்தாலும் அன்பு நமக்குள் இராவிட்டால், நாம் ஒன்றுமில்லை.

அமெரிக்காவில் இருக்கும் மிகப்பெரிய செல்வரும் வள்ளலு மான (Rockfeller) இராக்ஃபெல்லர் போலவும், கர்னகி (Carnagie)

போலவும் நாம் வாரிவழங்குகின்ற இறைவன் ஆனாலும், அஃபிரிக்க காட்டுப் பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள மக்களுக் காக, நம் வாழ்க்கையையே இழந்துவிடக்கூடிய பெருமானம் பெற்றவர் ஆனாலும் இயேசுவின் அன்பைப் போன்ற அன்பினை நாம் பெற்றிராவிட்டால் எம் மக்கள் பணிக்குப் பொருள் ஒன்று மிராது.

"அன்பு இடைவிடாது துன்பத்தைத் தாங்கிக் கொள்ளும். அன்பு, நீடிய அமைதியும் தயவும் உள்ளது. அன்புக்குப் பொறாமையில்லை. அன்பு தன்னைப் புகழாது; இறுமாப்பா யிராது. இத்தகைய அன்பினைப் பொதுவான மாந்தரின் அன்புடன் ஒப்பிட்டுப் பார்த்தல் கூடாது.

அன்பு, நெடுங்காலத்துக்கும் தொடர்ந்து துன்புறும் என்பது சரி. தவிர்க்க முடியாத நிலை வரும் போது அதே அன்புக்கும் மகிழ்வற்ற நிலையும் இன்னல்களும் வந்துறுகின்றன. இயற்கையில் மாந்தரின் அன்பு கூடத் தன்னலத்தில் தான் தோன்றுகிறது. அந்தத் தன்னலம் குலைந்து போகும்போது இன்பங்களாக மாறிவிடு கின்றது.

" அன்பு, பொறாமை கொள்ளாது" உலகம் எங்கிலும், பொருளாதார, சமுதாய, பேரெழுச்சிகள் பரவியதற்குக் காரணம் செல்வரைக் கண்டு, ஏழைகள் கொண்ட பொறாமை; வெற்றி யாளரைக் கண்டு தோல்வியுற்றவர்கள் கொண்ட பொறாமை. புலன் அறிவு, ஏழை எளியவர்களை அமைதியற்றவர்களாக ஆக்குகிறதே தவிர, அவர்கள், அமைதி பெற்றிட நல்வாழ்வு காண, ஒரு விதிமுறையைத் தரவில்லை.

"அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது" உண்மை யான இயற்கையான அன்பு, தற்புகழ்ச்சி அணிவகுப்பை நடத் தாது. தன்னைப்பற்றி புகழ் தம் பட்டம் அடிக்காது. தற்பெருமை தன் செயல் வெற்றியை எப்போதும் பறைசாற்றிக் கொண் டிருக்கும். ஆனால், இதற்கெல்லாம் மாறுபட்டது எதிரானது இயேசுவின் கனிந்த அன்பு.

"பண்பற்ற முறையில் நடந்து கொள்ளாது" மணமுறிவு முறைமன்றங்களுக்குச சென்றுபாருங்கள் இயற்கையாக மாந் தருக்கு உள்ள அன்பு எப்படிப்பட்டது என்பதை அறியலாம். கணவன் மனைவி ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுக்

கொண்டு தாங்கள் கொண்டிருந்த காதலைப்பற்றிய கமுக்கங்களைப் எடுத்துச் சொல்வதைக் கேட்க முடியாது. இப்போது அவர்கள் காதல் மனத்தில், கசப்புணர்ச்சி, தன்னலம், பகைமை எல்லாம் நிறைந்து பொங்கி வழிவதும், ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போரிடுவதும் காண்போர் உள்ளத்தைக் கலக்கும், கவலை தரும்.

இன்றைய நாகரிக மிக்க குடும்பம் வாழும் இல்லங்களுக்குச் சென்று பார்ப்போமானால், அங்கு நிலவும் மகிழ்ச்சியற்ற நிலையும், குழந்தைகள் முன்னிலையிலேயே கணவன் மனைவியிடும் சண்டையும் கண்ணறாவும் காட்சியாகும். அங்கே கணவன் மனைவியிடையேயுள்ள அன்பு எரிச்சலூட்டும் வகையில் அலைக் கழிக்கப்படுவதைக் காணப் பொறுக்காது.

''அன்பு தன்னலம் காண்பதில்லை'' இதனை நினைவிற் கொண்டால், தன்னலம் அகற்றப்பட்டுவிடுமே. அன்பு தனது என்று எதையும் பார்க்காது. மற்றவர்களுடையதைத் தனதாக்கிக் கொள்ள விரும்பாது அன்பு.

மணமுறிவு கோரும் முறை மன்றங்களில் புதிதான அன்பு, 'தனது', 'தான்' என்பதனைக் காண்பதில்லை; கைக் கொள் வதில்லை.

என்ன வியப்பு! இந்தப் புதிய அன்பின் தெய்விக நிலையை நாம் என்னென்பது?

''சினம் - கொள்வதில்லை; தீங்குகளைப் பொருட்படுத்து வதில்லை'' இந்த மறைமொழி நெஞ்சில் - நினைவில் நிலைத்து நிற்குமானால், தலைவிரித்தாடும் பழிப்புக்கு முடிவு ஏற்படும். காதலரைத் தனித்தனியே பிரித்துக் குடும்பங்களைப் பாழ்படுத்தும் தேவையற்ற ஐயப்பாடுகளை அகற்றிவிடும்.

''நேர்மைக் கேடுகளில் மகிழ்ந்து கொண்டாடுவது இல்லை; ஆனால் உண்மை எதுவோ அதில் மகிழ்ச்சி கொண்டாடும் அன்பு''.

தீங்கு புரிவதில் இன்புறுவதில்லை! தவறுகள் இழைப்பதில் இன்பம் காண்பதில்லை; அடுத்தவரைப் புண்படுத்துவதில் இன்பம் அடைவதில்லை அன்பு. மெய்ப்பொருள் காண்பதில்தான் அன்புக்கு இன்பம்!

''எதையும் தாங்கும் அன்பு'' என்பது மறைமொழி. குற்றம் குறை அனைத்தையும் மூடி மறைக்குமே தவிர வெளிப்படுத்து

வதில்லை. அவதூறு பேசுவதில்லை கடந்த காலத்தில் ஏற்பட்ட அன்பற்ற செயல்களை நினைவு கூர்வதில்லை மாந்தரின் இயற்கை யான அன்பு, செய்த தீங்குகளை நினைத்துப் பார்க்கும்; செய்த தீங்குகளின் வடுக்களை மற்றவர் பார்வைக்குத் தென்படவைக்கும்.

"எதிலும் நம்பிக்கை கொள்ளுதல் வேண்டும்" பற்றார்வத்தை வெளிப்படுத்திக் காட்டும் புதிய முறை. அன்பு கூரும் ஒருவரில் நம்பிக்கை கொள்கிறோம். அன்பு வாழும் இடத்தில் ஐயம் எழுவதில்லை, அன்புடையாரிடம், ஐயப்பாடு கொள்வது கூடாது, முடியாது.

"நடக்கக் கூடியது என்னும் நம்பிக்கை கொள்க" மிகவும் தீங்கு விளைக்கும் சூழ்நிலையில் நடக்கும் எனும் ஆர்வ நம்பிக்கை என்பது, தோல்விவரக் கூடும் என்ற நிலையினையும் கடந்து, வெற்றியையும் அளித்து ஒரே சீரான மகிழ்ச்சியையும் தரவல்லது.

## எதையும் தாங்கும்

புதிதான அன்பின் வியக்கத் தக்கவைகளில் முதன்மைப் படுத்திக் காட்டும் ஒன்றாக விளங்கும் மறைமொழி எதையும் தாங்கும் என்பது. காலங் காலமாக, நல்ல விளைவுக்காக, நல்லன செய்வதற்காக, வறுமையினையும் துன்பத்தினையும் தாங்கிக் கொண்டு அவற்றினின்று நீங்காமல் நின்று நிலைத்திருப்பது அன்பின் செயற்படு பொருளில் ஒன்றான இந்த 'எதையும் தாங்கும்' என்னும் சொற்றொடர்!

வருத்தத்தை வெளிப்படுத்தாமல் ஆண்டாண்டுக் காலமாகத் தன்மறுப்பு என்னும் பேரில் எதையும் தாங்கிக் கொண்டுவருகிறது. இறையருள் உலகில் கொண்டு சேர்க்கத்தக்கது, "எதையும் தாங்குவது" என்னும் சொல்லின் அன்பின் செயற்பாடு. இது மாந்தர் தம்முள் எதையும் தாங்கும் அன்பினர்க்குக் கடவுள் என்ன செய்வார் என்பதனை விளக்கும் மறைபொருள் விளக்கம்! எதையும் தாங்கும் அன்பு என்பதன் அடுத்த கட்டம், அன்பு யாரையும் எப்போதும் கைவிடாது என்பதாம்.

அறிவு, நிலைகுலைந்து போகும்; அறிவு சார்ந்த மற்றவை யனைத்தும் கூடக் கைவிட்டு விடும். வலிமை கொண்டு முயன்று பார்த்தால் சட்டத்தின் துணை கொள்ளல், மன வலிமை கைக்கொள்ளல், ஆக இத்தனையும் நம்மைக் கைவிட்டுவிடும்;

தோல்வியுறச் செய்யும். ஆனால் எதையும் தாங்கும் அன்பு, வெற்றியைத் தருமே தவிர தோல்வியைத் தருவதில்லை, கைவிட்டுவதில்லை, எந்த நிலையிலும்.

அன்பில் நம்பிக்கை வைக்கத் தொடங்கும் நேரம் நமது வாழ்வின் வெற்றி தொடங்கும் நேரம்! ஓர் அற்புத ஆற்றலை நம்பி, அதனைக் கைக் கொள்ளும் போது, புலனறிவுக்கும் மேற்பட்ட ஒரு அறிவுப் பெருவெளியில் சேர்க்கிறது அந்த அற்புத ஆற்றல்.

அன்பினில் நம்பிக்கை உறுதி கொள்பவர் வாழ்வில் நம்பிக்கை உறுதி கொள்பவர் ஆவார்.

நம்மைப் பற்பல சிக்கல் எதிர் கொள்ளினும் நம்மை அடிமைப்படுத்தி வைக்கும் இடுக்கண்கள் வந்தாலும் நம்மில் நமக்குத் துணையாக நிற்கும் வல்லமை படைத்த மிகப் பெரிய ஒன்று அன்புதான் என்று நாம் சொல்லலாம்,

உள்ளபடியே, அன்பு, நம்மை கடவுளின் அருள் உலகுக்கு உயர்த்துகிறது.

## அன்பினைப் பின் தொடர்ந்து செல்க

அன்பு வேண்டும் என்றால், அன்பின் வழி நடந்திட வேண்டும் என்றால், அவ் அன்பின் பொருட்டு, 'நமது' என்னும் அனைத்தையும் புறக்கணித்துத் தள்ளிவிட வேண்டும் அப்படி யானால் நாம் அன்பின் வழியில் நடக்கலாம். அந்த அன்பு வழி, முள்கள் நிறைந்ததாகவும் இருக்கும்; செம்மலர்கள் தூவப்பட்டும் இருக்கலாம்; எப்படி இருப்பினும் நாம் அன்பு வழி நடப்போம். அன்பினையே பின்பற்றுவோம்; பின்பற்றிச் செல்வோம்.

நம் பணி, அயல் நாட்டில் இருக்குமானால் அங்கெல்லாம் கூட அன்பினைப் பின்பற்றிச் செல்வோம். அன்பு நம்மை அடை யாளம் காட்டி அழைக்குமேயானால், அதனை ஏற்று காடோ, நகரோ ஊரோ, குடிசைகள் நிறைந்த சேரியோ எங்காயினும் செல்வோம் அன்பினைப் பின்பற்றி.

## அன்பு பணியாற்றுகிறது

இன்றையப் புது நாகரிகப் பண்பாட்டு வாழ்க்கை முறைக்கு ஈடுகொடுத்திடும் வல்லமை அன்புக்குண்டு.

அன்பில்லாரையும் கருத்து வேறுபாடு கொண்டவர்களையும் வெறுத்து ஒதுக்கத் தக்கவர்களையும் அன்புடன் விரும்பச் செய்யும் ஆற்றல் அன்புக்கே உண்டு.

பழி தீங்குக்கு அஞ்சாதவர்களையும் மானக் கேடானவர் களையும் அன்பு கொண்டிருந்தால் உயர்த்திவிடும் அன்பு.

மாந்தருக்காக வாழவும் அப்படி அவர்கள் வாழ்ந்திடத் தேவையானால், அம் மாந்தருக்காக உயிரிழக்கவும் கூடிய தன் மறுப்பினைப் பெற்றிருந்த சான்றோர்களின் வாழ்வியக்கம் நம்மை உயர்த்த வல்ல அன்பு இயக்கமே.

நம்மை எதிர்த்து அகத்தும் புறத்தும் ஊறு விளைக்கக் கூடிய கொடிய வரையும் அன்பு கொண்டு விரும்பத்தக்கவராக விளங்கச் செய்யும் பொறையுடைமையே அன்பு.

"தந்தையே! இவர்களை மன்னியும் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்று மெல்லப் பிறர் அறியாதவாறு தாழ்குரலிற் பேசினாரே இயேசு, அவர்தாம் அவ் அன்பு!

அதே அன்பு இதோ இங்கும் எங்கும் இருக்கிறது. நீங்கள் புதிய படைப்பினாரானால், புதிதான அவ் அன்பினை நீங்கள் கண்டு கொண்டிருப்பீர்கள்.

ஆம், இந்தப் புதிதான அன்பு செயல்படுகிறது. நாம் செய்ய வேண்டுமென்று அறிவிக்கும் மன்பதைத் தொண்டினை அவ் அன்பினில் உறுதியான பற்றுமானம் - நம்பிக்கை - கொண்டால், அப் பணியினை அவ் அன்பே செய்து முடிக்கும்.

நம்முடைய வாழ்க்கையில் இறை இயல்பினைப் பெற்ற அன்பு மேம்பட்டு நிற்கிறது. எங்கே அவ் அன்பு மேம்பட்டு நிற்கிறதோ அங்கே அது அற்புதமாகச் செயல்படுகிறது.

கொடு மனம் கொண்டவரையும் வெறுப்புள்ளம் கொண்ட வரையும் கூட அவ் அன்பு பண்பாளரிடம் இலங்கிய மென் நயத்தை அளிக்கிறது.

அன்பில் ஆழ்ந்த செழிப்பு மிக்க அதிசயமான வாழ்க்கை யினைப் பெற்று உய்ய உங்கள் உயிர் வேணவாக் கொண்டுள்ளது.

புலனறிவைப் பின்தொடர்ந்து செல்லாதீர்கள்.

உங்கள் உயிர்ப்பாற்றலைச் சரியான வழியில் நடக்க விடுங்கள்.

உங்கள் வாழ்க்கையில் அன்பினை ஆட்சிபுரிய விடுங்கள்

அஃது உங்கள் வாழ்க்கையினை மேம்படச் செய்யும் உலகுக்கு உங்களை ஓர் ஒப்பற்ற அருட் கொடையாக்கும்.

ஒன்றுக்கும் உதவாது போன வாழ்க்கையினைக் கொண்டவர் களே! தாங்கொணாத் துன்பங்களின் உணர்வலைகளோடு துடிக்கும் நொறுங்கிய உங்கள் உள்ளங்களை அறைகூவல்விட்டு அழைக்கிறது அன்பு!

அந்த அறைகூவலை ஏற்றுப் புதிதான அன்பினால் நம் வாழ்க்கை அன்பு வாழ்க்கையாக, புதிய படைப்பாக ஏற்றம் பெற்று வாழ்ந்திட முனைகின்றோம்.

மாந்தர் எல்லாம் துன்பங்களில் உழன்று வரும் நெருக்கடி யான இந் நேரத்தில், அன்பின் நற்செய்தியை நாம் பெற்றுள்ளோம் என்று நம்புவோம்.

★ ★ ★

ராஜேஸ்வரி புத்தக நிலையம்